
# கல்கி





KALKI பிப்ரவரி 28, 1954 4 அணா



**க்ஷணத்தில் நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே**


**வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்**



"என் துண்டு எவ்வளவு வெண்மையாயிருக்கிறதென்று பார்த்தீர்களா? அதற்குக்காரணம் ஸன்லைட் சோப் உபயோகித்து அதைச் சலவை செய்ததுதான். ஸன்லைட் சோப்பின் க்ஷணத்தில் பொங்கிவரும் நுரை அழுக்கைத்திரட்டி வெளிக் கொண்டுவருகிறது. அதனால் உங்கள் துணிகள்யாவும் பளிச்சென்று வெண்மையாகச் சலவை செய்யப்படுகின்றன."



"கலர் துணிகளுக்கு மலர்ச்சி அளிக்க ஸன்லைட் சலவை போல வேறெதுவுமில்லை. ஸன்லைட் சோப்பின் மிருதுவான நுரை அடித்துத் துவைக்காமலேயே அழுக்கை அகற்றுகிறது. அதனால் துணிகள் நீடித்து வருகின்றன."




# ஸன்லைட் சோப்

துணிகளைக்காப்பாற்றுகிறது, சிரமத்தைக்குறைக்கிறது, பணத்தை மிச்சபடுத்துகிறது

S. 221-50 TM

இந்தியாவில் தயாரித்தது

கல்கி

# பொருளடக்கம்

மலர் 13
இதழ் 31

1954 பிப்ரவரி 28

விஜய ஹு
மாசி 17


| | | | |
|---|---|---|---|
| என்றும் இருப்பார்! இதயத்தில் ஒலிப்பார்! | (தலையங்கம்) | ... | 3 |
| நஷ்டம் அதிகம் இல்லை! | ... | ... | 4 |
| இணை பிரியாதவர்கள்! | (கார்ட்டூன்) | ... | 5 |
| செய்யாமல் செய்த போதனை | ... | ... | 5 |
| காதலன் வந்து விட்டான்! (அட்டைப் படம்) | ... | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| அரிய பொக்கிஷம்! | ரகு | ... | 16 |
| வீணை சண்முகவடிவு அம்மாள் | கல்கி | ... | 19 |
| நல்ல ராஜா (பாப்பா மலர்) | யசோதரன் | ... | 25 |
| அன்னதானசிவன் மாணவர் இல்லம் | பகீரதன் | ... | 29 |
| உடைந்த முத்துக்கள் | ரங்கா | ... | 35 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 40 |
| மீனுவின் மாமியார் | சம்பந்தம் | ... | 43 |
| கன்னூர் மகனும் கவர்னர் ஆகலாம்! | ஆர். மல்ல பிள்ளை | ... | 48 |
| மனோரமா | ரமண்லால் வசந்தலால் தேசாய்-ரா.வீ. | ... | 51 |
| சொக்கன் சொன்ன கதை | புஷ்யன் | ... | 58 |
| தேன் மொழியாள் | பகீரதன் | ... | 63 |


''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.




# 14 நாட்களில் உங்களுக்கு ஆரோக்யமான



# மக்ளீன் வெண்மை பற்கள்

அழகான மக்ளீன்-வெண்மை பற்களை உடையவர் என்ற பெருமையும், மகிழ்ச்சியும் அடையுங்கள்; அத்துடன் ஆரோக்யமான பற்கள் என்ற திருப்தியுங்கூடத்தான்! இரண்டு வாரங்கள் காலையிலும், இரவிலும் தவறாமல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை உபயோகியுங்கள்; அதில் ஏற்படும் புதுமாறுதலைக் கண்டு நீங்களே வியப்படைவீர்கள். பற்களில் ஏறும் கறைகளைப் போக்கி இயற்கையான வெண்மையுடன் பிரகாசிக்கச் செய்யும் விசேஷ பொருள்கள் மக்ளீன்ஸ் பற்பசையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உங்கள் பற்களுக்குத்தான் என்ன வசீகரத்தோற்றம்! வாய் எவ்வளவு சுத்தமாக இருக்கும்!




**க்ளோரோபில் சேர்ந்ததும் கிடைக்கும்.**

பற்களை வெண்மையாக்குவதில் உலகில் மிகச் சிறந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை-இயற்கை அளிக்கும் துர்கந்த நாசினியான க்ளோரோபில் சேர்ந்தும் கிடைக்கும்.

## மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை

MTY-34 TAM

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 31

# என்றும் இருப்பார்! இதயத்தில் ஒலிப்பார்!

ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போய் விட்டார் என்று கருத முடியவில்லை. அவர் இந்தத் தெய்வத் தமிழ்நாட்டில் என்றும் இருந்து கொண்டிருப்பார்,— தமிழன்பர்களின் இதயங்களில் எப்போதும் ஒலித்துக் கொண்டிருப்பார் என்றே ரஸிகமணியை அறிந்தவர்கள் எண்ணி வருவார்கள்.

கன்னித் தமிழின் அழகையும் இனிமையையும் எண்ணும் போதெல்லாம் ரஸிகமணியின் குணசௌந்தரியம் பொலியும் திரு உருவம் நம் கண் முன்னால் வந்து கொண்டிருக்கும்.

கம்பன் கவிதையின் இணையற்ற இன்பத்தை நாம் அனுபவிக்கும் போதெல்லாம் ரஸிகமணி அவர்களின் உற்சாகம் ததும்பும் பொன்முகம் நம் கண் முன்னே காட்சி அளித்துக் கொண்டிருக்கும்.

பொதிகைமலைச் சாரலிலிருந்து தவழ்ந்து வரும் இனிய தென்றற் காற்றில் அவருடைய கம்பீரமான குரல் ஒலி கேட்டுக் கொண்டே இருக்கும்.

குற்றாலத்துக் குன்றிலிருந்து பொங்கி விழும் அருவியின் 'சோ!' என்ற ஓசையில், ரஸிகமணி அவர்கள், ''புரவி கயிறு உருவிப் போச்சோ?'' என்று பாடும் தொனி ஒலித்துக் கொண்டே யிருக்கும்.

குற்றாலத்துக் குன்றின் மேலேயுள்ள மரங்கள் காற்றில் அசைந்தாடும்போது உண்டாகும் ஓசை நம் செவிகளில் 'டி. கே. சி.' 'டி. கே. சி.' என்னும் மூன்று எழுத்துப் பெயராகவே கேட்டுக் கொண்டிருக்கும்.

ஐந்தருவிகள் விழும்போது எழும் ஓசை 'ரஸிகமணி' என்னும் ஐந்து எழுத்துப் பெயரையே நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும்போது, 'வானமளந்த தனைத்தும் அளந்திடும்' நம் தமிழ் மொழியின் ஆற்றலைப் பற்றி ரஸிகமணி கூறும் தேனினுமினிய சொற்கள் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டே யிருக்கும்.

தமிழ் விழாக் கொண்டாடும் இடங்களிலெல்லாம் ரஸிகமணி நிச்சயமாக விஜயம் செய்திருப்பதாகவே தமிழன்பர்கள் நம்புவார்கள். தமிழ் மொழியின் ஆற்றலையும் அழகையும் உணர்த்திய மகான் புன்னகை பொலியும் முகத்துடன் தங்களிடையில் வீற்றிருப்பதாகவே கருதுவார்கள்.

தமிழ்க் கவிதையை நாம் அநுபவித்து மகிழும் போதெல்லாம் ரஸிகமணி நம் முன்னால் வீற்றிருந்து, தமிழ்க் கவிதை என்றால் என்ன என்பதை நமக்கு எடுத்துக் காட்டி விளக்கம் கூறுவதாகவே எண்ணுவோம்.

கம்பர் விழாக் கொண்டாடும் போதெல்லாம் டி. கே. சி. தம் அறிவுச் சுடர் வீசும் அன்பு ததும்பிய கண்களினால் நம்மைப் பார்த்து, 'கம்பர் யார்?' என்று இனங் கண்டு பிடிக்கவும், போலிக் கம்பர்களைப் புறக்கணித்து உண்மைக் கம்பரை அநுபவிக்கவும் கற்பிக்கும் தோற்றம் நம் கண்முன் தோன்றிக் கொண்டே இருக்கும்.

* * * *

ரஸிகமணி டி. கே. சி. தமிழ்க் கவிதையைப் பற்றிச் சொல்லுவதற்கு முன்னாலும் தமிழ் நாட்டில் சிலர் தமிழ்க் கவிகளைப் பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றிக் கொண்டிருந்தார்கள். கவிதைகளின் சொற்களைத் தனித் தனியே பிய்த்து எடுத்து, அவற்றுக்குப் பதவுரை பொழிப்புரை கூறி, இலக்கணம் கூறி, உள் அர்த்தமும், அதற்கு உள் அர்த்தமும் கூறி, தத்தம் ஆற்றலை வெளிப்படுத்தி வந்தார்கள்.

கவிதைக்கு ஒரு முழு வடிவம் உண்டு, அதற்கு ஒரு தனி அழகு உண்டு, கவிதை ஓசையிலேயே இணையில்லா இன்பம் உண்டு, அதில் ஒரு பெரும் சக்தி உண்டு என்பவற்றையெல்லாம் எடுத்துக் காட்டியவர் ரஸிகமணி டி. கே. சி.

கருத்துக்கள் மட்டும் முக்கியமானவை என்றால், வசனத்திலேயே அக்கருத்துக்களைச் சுலபமாகச் சொல்லி விடலாம் அல்லவா!

கவிதையில் கருத்து மட்டும் முக்கியமானதல்ல, கருத்தை வைத்திருக்கும் வடிவந்தான் முக்கியமானது என்பதை விளக்கியவர் டி. கே. ஸி.

ஒரு கருத்தைச் சாதாரண வசனத்திலோ வெறும் செய்யுள் நடையிலோ சொல்லுவதைக் காட்டிலும், அதை உண்மையான கவிதை வடிவத்தில் அமைத்து விட்டால், எப்படி அது அற்புதமான சக்தி பெற்று விடுகிறது என்பதையும் எடுத்துக் காட்டினார்.

முன்னால் கவிதைகளுக்கு விரிவுரை கூறியவர்கள் செப்பிடு வித்தைக்காரன் தன் தலையிலுள்ள குல்லாயிலிருந்து வித விதமான பொருள்களை எடுத்துக் காட்டிப் பார்ப்பவர்களை எப்படி வியக்க வைத்தானோ, அதுபோலக் கவிதைகளுக்கு அபூர்வமான பொருள்களைக் கண்டு பிடித்துக் கூறி வியக்க வைத்து வந்தார்கள்.

ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களோ, இயற்கையாகக் குளத்தில் மலர்ந்த தாமரைப் பூவை நமக்குச் சுட்டிக் காட்டி, அதன் அழகிய முழு வடிவத்தையும், அதன் இனிய மணத்தையும், அதன் இதழ்களின் வர்ணப் பொலிவையும், பசுமையான இலைகளுக்கு மத்தியில் நீல வானம் பிரதிபலிக்கும் தண்ணீரில் செளிந்து நிற்கும் தண்டின் நுனியில் அந்தத் தாமரைப் பூ நிமிர்ந்து நிற்கும் எழிலையும் எடுத்துக் காட்டி நம்மை அநுபவிக்கச் செய்தார்கள்.

ரஸிகமணிக்கு முன்னாலும் கம்பராமாயணத்தை எத்தனையோ பேர் படித்து அநுபவித்து விரிவுரை நிகழ்த்தியும் வந்தார்கள். பெரும்பாலும் இராமாயணக் கதையின் சுவையையே கம்பரின் சிறப்பாகக் காட்டி வந்தார்கள்.

கம்பருடைய பெருமை இராம கதையின் சுவையில் அல்ல, கவிதையின் அமைப்பில் என்று ரஸிகமணி உணர்த்தினார்.

"தமிழில் என்ன இருக்கிறது!" என்று கேட்டுக் கொண்டிருந்த ஆங்கிலம் படித்த மேதாவிகள் எல்லாரும் அறியும்படி உணர்த்தினார்.

"தமிழ்க் கவிதையைப் போல் சிறந்த கவிதை வேறு எந்த பாஷையிலும் இல்லை; இருக்கவும் முடியாது!" என்று அனைவரும் ஒப்புக்கொள்ளும் படி நிரூபித்துக் காட்டினார்.

இந்த அற்புத சாதனையின் பொருட்டுத் தமிழர்களும், தமிழ் அன்பர்களும், தமிழ்க் கவிகளின் பரம்பரையும் ரஸிகமணி டி. கே. ஸி. அவர்களுக்கு என்றென்றைக்கும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

* * *

ரஸிகமணி டி. கே. ஸி. அவர்கள் தமிழ்க் கவிதைக்குச் செய்த தொண்டு, அவருடைய பரிபூரண வாழ்க்கையில் ஒரு பகுதியேயாகும்.

ஆம்; ரஸிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரின் வாழ்க்கை, முழுதும் மலர்ந்து திகழ்ந்த பரிபூரண வாழ்க்கை.

ரஸிகமணி டி. கே. ஸி. பரிபூரண மனிதர்; பரிபூரணத் தமிழர்; பரிபூரணக் கலைஞர்; பரிபூரண ரஸிகர்; பரிபூரண சிநேகிதர்; பரிபக்குவம் பெற்ற பரிபூரண ஞானி.

பழந் தமிழரின் உயர்ந்த பண்பாட்டுக்கு ஒரு பரிபூரண வடிவம் தரமுடியுமானால், அந்த உருவம் ரஸிகமணியின் தோற்றமாகவே அமையும்.

அத்தகைய மகான் நம்மை விட்டு எப்படிப் போயிருப்பார்! தமிழையும் தமிழ்க் கவிதையையும் தமிழன்பர் குழாத்தையும் விட்டு நம் ரஸிகமணி டி. கே. ஸி. எப்படிப் போயிருப்பார்!

என்றும் அவர் நம்மிடையே அமரராக, சிரஞ்சீவியாக வாழ்ந்து கொண்டுதானிருப்பார். என்றென்றும் அவருடைய தமிழ்க் குரல் தமிழ் மக்களின் இதயங்களில் ஒலித்துக் கொண்டுதானிருக்கும்!

"கன்னித் தமிழேபோல் கம்பன் கவியேபோல்
மன்னும் பொதிகை மலையேபோல்-பன்னும் நம்
நாடு மகிழச் சிதம்பர நாத நண்பா!
நீடு நீ வாழ்க நிலைத்து!"

என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் வாக்கு அமர வாக்கு அன்றோ!

# நஷ்டம் அதிகம் இல்லை!

ருஷியக் கலைஞர் கோஷ்டியார் சென்னைக்கு விஜயம் செய்து ஒரு வார காலம் இங்கே தங்கிச் சென்றார்கள். அவர்கள் மூன்று தினங்கள் தங்கள் கலைத் திறன்களைச் சென்னைவாசிகளுக்குக் காட்டினார்கள். ஆடினார்கள்; பாடினார்கள்; பலவிதமான இசைக் கருவிகளை முழக்கினார்கள்.

சோவியத் நாட்டு மக்களின் கலைஞர்களுக்குச் சென்னை மாநகரம் மகத்தான வரவேற்பு அளித்தது. அவர்களை விட்டுப் பிரிய மனமின்றி விடை கொடுத்து அனுப்பியது.

அவர்கள், கச்சேரி செய்த மூன்று தினங்களிலும் சென்னை ரஸிகர்கள் திரள் திரளாக வந்திருந்து அவர்களுடைய கலைச் சரக்குகளைக் கண்டும் கேட்டும் ரஸித்தார்கள்.

கச்சேரிகளுக்குக் கட்டணங்கள் ஏற்படுத்தியிருந்த படியால், கட்டணங்கள் செலுத்திய ஆயிரக் கணக்கானவர்கள் மட்டுமே சோவியத் கலைகளைக் கண்டும் கேட்டும் களிக்க முடிந்தது.

அப்படிக் களித்தவர்கள் தங்கள் குதூகலத்தை அந்தரங்கமாக மூடி வைத்துக் கொள்ளாமல் வெளிப்படையாகக் காட்டி மகிழ்ந்தார்கள்.

சோவியத் கலைஞர்கள் ஆடுவதற்காகக் கையை அசைத்தாலும் நம்மவர்கள் கரகோஷம் செய்தார்கள்; காலைத் தூக்கினாலும் கரகோஷம் செய்தார்கள். பாடுவதற்காக வாயைத் திறந்தவுடனேயே குதூகலத்துடன் கையைத் தட்டினார்கள். உற்சாகத்துடன் ஆரவாரம் செய்தார்கள்.

ருஷியக் கலைஞர்கள் மேடைக்கு வந்தால் நம்மவர்கள் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்; மேடையை விட்டுப் போனால் அலைகடல் போல் சத்தமிட்டுத் திரும்பவும் வரப் பண்ணினார்கள்.

பெரிய தனவந்தர்களும், தொழிலதிபர்களும், ராஜாக்களும், மந்திரிகளும், பெருந்தர அரசாங்க உத்தியோகஸ்தர்களும், அந்த ரஸிகர் கூட்டங்களிலே கலந்திருந்தார்கள்; சாதாரண ஏழைகளும் மாணவர்களும் இருக்கவே இருந்தார்கள்.

# இணை பிரியாதவர்கள் !




நாகரிகத்தில் முதிர்ந்த மாதரசிகள் சிலர் அங்குமிங்கும் ஓடி அலைந்து சபை கூடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார்கள். வைதிக குடும்பங்களைச் சேர்ந்த பெண்மணிகளும் சோவியத் கலைத் திறனைப் பார்த்து ரஸிப்பதற்காக ஆவலுடன் வந்து கூடியிருந்தார்கள்.

இவற்றை யெல்லாம் நேரில் பார்க்கக் கொடுத்து வைத்தவர்கள் பாக்கியசாலிகள் என்பதில் சந்தேக மில்லை.

ஆனால் பார்க்க முடியாத பெரும்பான்மையோர் அதிகமாக ஒன்றும் நஷ்டம் அடைந்து விட வில்லை யென்பதைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

நம் தென்னாட்டுக் கலைகளோடு ஒப்பிடும் போது, ருஷ்யக் கலைகள் மிகச் சாதாரணமானவைதான். அவர்களுடைய சங்கீதம் சர்வ சாதாரணமானது. மூன்று நிமிஷம் அல்லது அதிகபட்சமாக ஐந்து நிமிஷத்துக்கு மேல் ஒரு பாட்டைக் கேட்டால் அலுத்துப் போய் விடுவதுடன் காதை வலிக்கவே ஆரம்பித்து விடுகிறது.

அவர்களுடைய 'பாலே' (Ballet) நடனம் மிகத்திறமை வாய்ந்ததுதான். ஆனால் அந்தத் திறமை நாம் சாதாரணமாகக் காணும் சர்க்கஸ் வித்தைக்காரர்களின் திறமையை யொத்தது.

நமது பரத நாட்டியக் கலையின் நளின சௌந்தரியத்தில் நூற்றில் ஒரு பங்கு கூட அவர்களுடைய நடனத்தில் காண முடியாது.

ருஷ்யக் கலைஞர்களின் கிராமிய நடனம் நம்முடைய நாட்டில் வழங்கும் உயர்தர கிராமிய நடனத்தையொத்து விளங்குகிறது. அதில் அற்புதமோ, அதிசயமோ ஒன்றுமில்லை.

ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுகிறார்கள். இந்த வழக்கம் நம் பரத நாட்டியத்தில் இல்லை; ஆனால் கதகளி, மணிபுரி நடனங்களில் உண்டு.

ஆகவே, ருஷ்யக் கலைஞர்களின் ஆடல் பாடல்களைப் பார்க்கவும் கேட்கவும் முடியாத நம்மவர்கள் ஏதோ பெரிய நஷ்டம் அடைந்து விட்டதாக எண்ண வேண்டிய தில்லை.

## செய்யாமல் செய்த போதனை

நமது தென்னாட்டின் ஆடல் பாடல் கலைகளை ருஷ்யக் கலைஞர்கள் கண்டு களித்தார்கள். நம் இசைக்கருவி சங்கீதத்தையும் கேட்டு மகிழ்ந்தார்கள். கண்டவை, கேட்டவை எல்லாவற்றையும் மிக மிகப் பாராட்டினார்கள்.

இந்திய மக்களுடன் நட்புரிமை கொள்ள வேண்டு மென்னும் எண்ணம் அவர்களிடையே பரிபூரணமாக இருந்தது என்பது நன்கு வெளியாயிற்று. ஆகவே, நம்முடைய கலைகளை அவர்கள் எவ்வளவு தூரம் அறிந்து அநுபவித்தார்களோ, என்னமோ, எல்லாவற்றையும் புகழ்ந்து பாராட்டுவதற்கு மட்டும் தவற வில்லை.

இது வரை நம்மவர்களில் சிலர் 'சோவியத் ருஷ்யா' என்றால் புலி, கரடி, சிங்கம் என்று எண்ணிக் கொண்டிருந்தார்கள். அந்த நாட்டைச் சேர்ந்தது எதுவாயிருந்தாலும் அதைப் பார்த்துப் பயப்பட வேண்டும் அல்லது அருவருப்புக் கொள்ள வேண்டும் என்று கருதி வந்தார்கள்.

அந்த மனோபாவம் ருஷியக் கலைஞர்களின் வரவினால் மாறி விட்டதாகக் காணப்பட்டது.

ருஷியக் கலைஞர்களை வரவேற்பதிலும், உபசரிப்பதிலும், அவர்களுடைய கலைகளைப் பாராட்டுவதிலும் பணக்காரர்கள்—ஏழைகள் என்ற வேற்றுமையின்றி, கட்சி மனப்பான்மையின்றி, எல்லாரும் போட்டி யிட்டு உற்சாகம் காட்டிய அதிசயத்தைப் பார்த்தோம்.

அமெரிக்கா தேசத்தினர் பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி செய்ய முன் வந்திருப்பதைப் பற்றிச் சமீப காலத்தில் நாம் எல்லாரும் எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறோமல்லவா!

உலக சமாதானத்துக்கே பங்கம் விளைக்கக் கூடிய இத்தகைய முறையற்ற காரியத்தை அமெரிக்கர்கள் செய்யத் தொடங்கி யிருப்பது, ருஷியர்களின் விஷயத்தில் இந்திய மக்களின் மனோபாவம் மாறுவதற்கு ஓரளவு காரணமா யிருப்பது இயல்பே யாகும்.

இந்த மனோபாவ மாறுதல், சோவியத் கலைஞர்களுக்குச் சென்னை வாசிகள் அளித்த உற்சாகமான வரவேற்பில் அபரிமிதமாகப் பிரதிபலித்தது.

• • •

ருஷியக் கலைஞர் கோஷ்டிக்குத் தலைவராக வந்திருந்த சோவியத் சர்க்காரின் உதவி மந்திரி கூட்டங்களில் பேச நேர்ந்தபோதெல்லாம் ருஷிய மொழியிலேயே பேசினார். அது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துச் சொல்லப்பட்டது.

ருஷிய பாஷையும் ஐரோப்பிய பாஷைதான்; ஆகையால் ஆங்கிலத்துடன் அதிக தொடர்பு உடையது. ருஷிய மந்திரிகளும் இராஜ தந்திரிகளும் ஆங்கிலம் கற்றுக் கொள்ள விரும்பினால் வெகு சீக்கிரத்தில் கற்றுக் கொள்ளலாம்.

அல்லது ஆங்கிலம் தெரிந்த மந்திரிகளையும் இராஜதந்திரிகளையுமே ருஷியர்கள் வெளி நாடுகளுக்கு அனுப்பி வைக்கலாம்.

ஆனால் ருஷியர்கள் அப்படிச் செய்வதில்லை. அயல் நாடு 'ளுக்கு அவர்கள் அனுப்பும் தூது கோஷ்டிகளுக்கும் கலைஞர் கோஷ்டிகளுக்கும் தலைவர்களாகப் போகிறவர்கள், அவர்களுடைய தாய் பாஷையிலேயே பேசுவது என்று கண்டிப்பாக வைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

பாரத தேசத்தில் அவர்களுடைய பேச்சை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொன்னால் போதும் என்றிருப்பது அவர்களுக்கு வேடிக்கையாகத்தானிருக்கும். பாரத தேசம் ஆங்கிலேயரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைந்து சுதந்திரம் பெற்றதாகச் சொல்வது உண்மைதானா என்று கூடக் கேட்கத் தோன்றும்.

நம்முடைய அரசியல் தலைவர்களும் ஹிந்தியிலோ, மராத்தியிலோ, தமிழிலோ, தெலுங்கிலோ, மலையாளத்திலோ பேசி, அந்தப் பாஷைகளை ருஷிய மொழியில் மொழி பெயர்த்துச் சொல்லுவதற்கு ஏன் ஏற்பாடு செய்யக்கூடாது! நாம் இன்னமும் ஆங்கிலத்துக்கு அடிமையா யிருக்கிறோம் என்று ஏன் காட்டிக்கொள்ள வேண்டும்!

ருஷியக் கலைஞர்களில் வாய்ப்பாட்டு வித்வான் தாம் பாடும் பாட்டில் இரண்டு வரிகளைத் தமிழில் மொழி பெயர்க்கச் செய்து, அத் தமிழ் வரிகளை ருஷிய எழுத்தில் எழுதி வைத்துக் கொண்டு, மிகவும் சிரமத்துடன் நாவைப் புரட்டித் திணறித் திண்டாடிப் பாடினார். "ஆகா! ருஷியக் கலைஞர் தமிழில் பாடி விட்டாரே!" என்று நம்மவர்கள் அடைந்த குதூகலத்துக்கும், செய்த ஆரவாரத்துக்கும் அளவேயில்லை.

இது தமிழர்களுக்கு ருஷியக் கலைஞர்கள் செய்யாமல் செய்த ஒரு போதனை.

ருஷியப் பாட்டை இங்கிலீஷில் மொழி பெயர்த்து அந்த வாய்ப் பாட்டுக் கலைஞர் சுலபமாகப் பாடி யிருக்கலாம். நம்மவர்களும் ஏதோ தெரிந்து விட்டது போல் பாவித்துச் சந்தோஷப் பட்டிருப்பார்கள். அவ்வாறு ருஷியக் கலைஞர்கள் செய்து தமிழர்களை அவமானப் படுத்தவில்லை. தமிழ் வரிகளை மிகக் கஷ்டப்பட்டுப் பாடித் தமிழையும் தமிழர்களையும் கௌரவித்தார்கள்.

இதற்காக ருஷியக் கலைஞர் கோஷ்டிக்கு நமது மனமார்ந்த நன்றி உரியது.

இது நம்மவர்களுக்கு ஒரு நல்ல பாடமாகப் பயன்பட வேண்டுமென்று விரும்புகிறோம். இன்னமும் நம் மீது ஆதிக்கம் செலுத்தி வரும் ஆங்கில பாஷை மோகத்தை விட்டொழிக்க இந்த நாட்டுப் பிரமுகர்கள் ஒரு பெருமுயற்சி செய்து வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறோம்.

# காதலன் வந்து விட்டான்!

முத்துப் பற்கள் தெரிய மோகனப் புன்னகை புரிந்த வண்ணம் அவள் யாரை எதிர்பார்க்கிறாள்? அவள் முகத்திலே ஏன் அந்தப் படபடப்பு!

அவள் அவசரமாகத் திரும்பிப் பார்க்கும்போது அவள் இதயத் துடிப்பை அவள் பின்னலின் ஆட்டத்தில் காண முடிகிறது. இமைகளின் துடி துடிப்பில் காண முடிகிறது.


கிளைகளில் இரட்டையாக உட்கார்ந்திருக்கும் பறவைகள் அவள் தனிமையை அவளுக்கு உணர்த்தி விட்டன. அவளுக்குத் தன் காதலனின் இனிய நினைவு வந்து விட்டது. அந்த நினைவின் துடிதுடிப்போடு அவள் ஒவ்வொரு மலர்ச் செடியின் மறைவிலும் தன் காதலன் மறைந்திருக்கிறானா என்று குனிந்து குனிந்து பார்க்கிறாள்; ஆவலோடு ஓடி, ஆடித் தேடிப் பார்க்கிறாள்.

"புத்தம் புது மலர்கள் பூத்திடுமே!"

என்ற கீதம் காற்றிலே மிதந்து வருகிறது. அந்த அருமையான கீதத்தைத் தொடர்ந்து யாரோ செடிகளின் மத்தியில் மெதுவாக நடந்து வரும் சத்தமும் கேட்கிறது.

புது மலர்கள் சூடிய குழல் தெரிய ஒய்யாரமாகத் திரும்பிப் பார்க்கிறாள். அவள் காதலன் வந்து கொண்டிருக்கிறான். இத்தனை நேரமும் ஆவலுடன் எதிர்பார்த்த தன் காதலன் வந்துவிட்டான் என்று தெரிந்ததும் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கிறாள்.

அவ்வாறு அவள் திகைத்து நிற்கும் தோற்றத்தைத் தான் இந்த இதழ் அட்டையில் வண்ண ஓவியமாகத் தீட்டியிருக்கிறார் நமது சைத்திரிகர் சந்திரா.




யாழ்ப்பாணம்

இராமகிருஷ்ண மிஷன்

## வைத்தீஸ்வர வித்தியாலயம்

கட்டிட நிதிக்காக

★

சங்கீதவாணி ஸ்ரீமதி

# எம். எல். வசந்த குமாரி

உதவும் இன்னிசை விருந்து

★

திருப்பாபுலியூர் ஸ்ரீ வி. ராஜம் ஐயர் - பிடில்

தஞ்சாவூர் ஸ்ரீ டி. எஸ். கிருஷ்ணமூர்த்திராவ்-மிருதங்கம்

திருவில்வாமலை ஸ்ரீ டி. எஸ். வில்வாத்ரி ஐயர்- கடம்

★

10 - 3 - 1954 புதன்கிழமை

இரவு 7 மணிக்கு

# யாழ்ப்பாணம்

வைத்தீஸ்வர வித்தியாலயத்தில்

நடைபெறும்

★

பிரவேசக் கட்டணம்:

ரிசர்வ்டு ரூ. 10 முதல் வகுப்பு ரூ. 5

இரண்டாம் வகுப்பு ரூ. 2

யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு கச்சேரி!


சலவைக்குச் சிறந்தது
இஸ்திரி போட சுலபம்
தைப்பதுக்குச் சுலபம்
கவர்ச்சியான டிஸைன்கள்
12 நல்ல காரணங்கள்...
நீங்கள் ஏன்
ஜஸ்மின்
ரேயான் பட்டுகளை
வாங்க வேண்டு மென்பதற்கு
ரம்மியமான நிறங்கள்
மிருதுவான நெசவு
அணிவதற்கு சௌகரியம்
போலிகள் விஷயத்தில் ஜாக்கிரதை
தரமேன்மைக்கு நீங்கள் ஜஸ்மின் ரேயான் பட்டுகளை நம்பலாம்......அவை நீடித்து உழைப்பதால்தான் நயமானவை
நேர்த்தியான நூல்களினால் தயாரிக்கப்படுகிறது
இப்பொழுது எல்லா பிரபல ஜவுளி வியாபாரிகளிடமும் கிடைக்கும் :
ஜஸ்மின் மில்ஸ் லிமிட்., பம்பாய் - 16
நீடித்த உழைப்பு
பின்னர் அளவு குறையாது
பொருளில் கேடில்லை
பணத்திற்கேற்ற மதிப்பு




## அத்தியாயம் 76

# வடவாறு திரும்பியது!

இந்த நெடுங் கதையில் வரும் பாத்திரங்களில் சிலர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியும் நடந்தும் வருவதை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். அதற்கு நாம் பொறுப்பாளிகள் அல்லவென்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். மனித இயற்கை என்றைக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சூழ்நிலையும் பல் வேறு சம்பவங்களும் அவர்களுடைய மனப் போக்கையும் நடத்தையையும் மாற்றுகின்றன. நேற்றைக்கு ஒரு விதமாகப் பேசி நடந்து கொள்கிறவர்கள் இன்றைக்கு முற்றும் முரணான முறையில் பேசுகிறார்கள்; நடந்து கொள்கிறார்கள்.

பெரிய பழுவேட்டரையர் இக் கதையின் ஆரம்பத்தில் ஒரு பெரிய இராஜரீகச் சதியாலோசனைக்குத் தலைவராயிருந்தார். இப்போது பலரறியத் தாம் செய்த குற்றத்தை எடுத்துச் சொல்லி அதற்குப் பிராயச்சித்தமாகத் தம் சிரசைத் தாமே துணித்துக் கொண்டு உயிரை விட விரும்பினார்.

பெரிய சம்புவரையர் இளவரசர் கரிகாலரின் உயிரற்ற உடலைக் கண்டதும் அடைந்த திக்பிரமையில், எப்படியாவது அந்தப் படுகொலைப் பழி தம் குடும்பத்தின் மீது சாராமற் போக வேண்டுமென்னும் கவலையினால், தமது பழைய மாளிகையையே எரிக்க முற்பட்டார். அந்தப் பழியை வேறு யார் தலையிலாவது சுமத்தி விட வேண்டும் என்று ஆவல் கொண்டு தம் மகனையும் அந்த முயற்சியில் ஏவி விட்டார். இப்போது குற்றம் தம் பேரில் சாரவில்லை என்று அறிந்த பிறகு, தம் அருமைப் புதல்வி வந்தியத்தேவன் பேரில் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை அறிந்த பிறகு, வேறு விதமாகப் பேசலானார்.

இந்தக் கதையின் ஆரம்பத்தில் மூடு பல்லக்கில் மறைந்து வந்த போலி மதுராந்தகனையே உண்மை மதுராந்தகன் என்றும், அவனே பின்னால் உத்தம சோழ சக்கரவர்த்தியாகப் போகிறான் என்றும் வாசகர்கள் நம்பும்படியாக நாம் செய்திருந்தோம். கதைப் போக்குக்கு அது அவசியமாயிருந்தது. ஏன்? முதன் மந்திரி அநிருத்தருக்கு ஓரளவு பழைய இரகசியங்கள் தெரிந்திருந்த போதிலும், அவரும் மதுராந்தகரே முடி சூட்டப்பட வேண்டும் என்று கருதினார். அக் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளின் முன்பின் விவரங்களை அவர் பூரணமாக அறிந்திருக்கவில்லை. ஆகையால், போலி மதுராந்தகர் கண்டராதித்தரின் புதல்வர் அல்லவென்றாலும் சுந்தர சோழருக்கும் மந்தாகினிக்கும் பிறந்த புதல்வர் என்று எண்ணினார். அதனால் அவரும் தடுமாற்றம் அடைந்து முன்னுக்குப் பின் முரணாக நடந்து கொள்ள வேண்டியதாயிற்று.

இந்தக் கதையிலேயே நேர்மையில் சிறந்தவர் என்றும், சத்திய சந்தர் என்றும் நாம் கருதி வந்த அருள்மொழித்

தேவர் முன்னுக்குப் பின் முரணாகப் பேசியதை நாம் கடைசியாகப் பார்த்தோம். இத்தனை காலமும் தமக்கு அரசுரிமை வேண்டவே வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருந்தவர் இப்போது திடீரென்று தம் போக்கை மாற்றிக் கொண்டு "நானே முடி சூட்டிக் கொள்வேன்" என்று பலர் அறியச் சொல்ல ஆரம்பித்து விட்டார். சமய சந்தர்ப்பங்கள்தான் அவருடைய இந்த மாறுதலுக்குக் காரணம் என்பதை நாம் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் இல்லை அல்லவா?

* * *

ஆம்; அருள்மொழித் தேவரின் வார்த்தைகள் அங்கிருந்தோர் அனைவரையும் வியப்பும் திகைப்பும் அடையச் செய்தன. அதே சமயத்தில், அவர்களுடைய மனத்தில் ஒரு நிம்மதியையும் உண்டாக்கின. சோழ சிங்காதனம் ஏறுவதற்கு எல்லா வகையிலும் தகுதியானவரும் உரிமையுள்ளவரும் பொன்னியின் செல்வர்தான் என்பதை அனைவரும் உள்ளத்தின் உள்ளே அந்தரங்கத்தில் உணர்ந்திருந்தார்கள். சோழ சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த மிகப் பெரும்பாலான மக்களின் விருப்பமும் அதுவே என்பதை அறிந்திருந்தார்கள். மக்களின் பொது விருப்பத்துக்கு விரோதமாக வேறொருவரைச் சிங்காதனம் ஏறச் செய்தால் அதனால் நேரக் கூடிய பின் விளைவுகள் எப்படியிருக்குமோ என்ற கவலையும் அவர்கள் மனத்தில் இருந்தது.

ஆனாலும் பல்வேறு காரணங்களினால் அங்கிருந்தவர்களில் யாரும் பொன்னியின் செல்வருக்கு முடி சூட்ட வேண்டும் என்று சொல்லத் துணியவில்லை.

இப்போது பொன்னியின் செல்வரே முன் வந்து "நானே மகுடம் சூட்டிக் கொள்ளப் போகிறேன்; தங்கள் திருக்கரத்தினால் முடி சூட்ட வேண்டும்!" என்று பெரிய பழுவேட்டரையரைப் பார்த்துக் கூறியதும், அனைவருடைய உள்ளத்திலும் அமைதியும் மகிழ்ச்சியும் உண்டாயின. "நல்ல முடிவு ஏற்பட்டு விட்டது; ஆனால் அந்த முடிவு செய்ய வேண்டிய தர்ம சங்கடமான பொறுப்பு நம்மைவிட்டுப் போய்விட்டது!" என்று உவகையும் ஆறுதலும் அடைந்தார்கள்.

பொன்னியின் செல்வரிடம் குடி கொண்டு பிரகாசித்த அபூர்வமான காந்த சக்தியானது, அவர் எதிரில் அவருக்கு விரோதமாக யாரும் பேச முடியாமல் செய்தது என்பதை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம். ஏன்? வைர நெஞ்சம் படைத்த சின்னப் பழுவேட்டரையர் கூடப் பொன்னியின் செல்வரை நேரில் கண்டதும் தலை வணங்கி அவருக்கு முகமன் கூறி வரவேற்றதை நாம் பார்த்தோம் அல்லவா?

பெரிய பழுவேட்டரையர் தம் உயிரைத் தாமே போக்கிக் கொள்ளும் முயற்சியைப் பொன்னியின் செல்வர் தடுத்து நிறுத்தியதை அறிந்தார். அவருடைய வார்த்தையின் பொருளையும் உணர்ந்தார். இளவரசரின் செயலும் சொற்களும் அவரது உள்ளத்தை நெகிழச் செய்தன. உணர்ச்சி மிகுதியினால் அவருடைய உடலும் நடுங்கியது. கண்களில் கண்ணீர் மல்கியது. நாத்தழுதழுத்தது.

ஒருவாறு மனத்தை விரைவில் திடப்படுத்திக் கொண்டு அவர் கூறினார்:— "சோழ குலத் தோன்றலே! பொன்னியின் செல்வ! தங்களுடைய சொற்கள் எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தன. தாங்களே முடி சூட்டிக் கொள்ள வேண்டும் என்று நான் தங்களை வேண்டிக்கொள்ள எண்ணினேன். சோழ குலத்துக்கே துரோகியாய்ப் போய் விட்ட எனக்கு அந்த வேண்டுகோள் விடுக்கவே உரிமை இல்லை என்று பேசாதிருந்தேன். தங்களுடைய பெரிய பாட்டனாரும் மகா புருஷருமான கண்டராதித்த சக்கரவர்த்தி ஓர் ஏற்பாடு செய்து விட்டுப் போனார். தமது சகோதரர் வமிசத்தில் வந்தவர் சிங்காதனம் ஏறவேண்டும் என்று அந்த மகான் வற்புறுத்திக் கூறினார். அவர் செய்திருந்த ஏற்பாட்டுக்கு விரோதமாக நாங்கள் சிலர் காரியம் செய்ய எண்ணினோம். எங்களுக்குள் ஏற்பட்டிருந்த மாற்சரியத்தினால் அந்தச் சிவபக்த சிரோமணியின் விருப்பத்துக்கு மாறாக மதுராந்தகத் தேவருக்குப் பட்டம் சூட்ட எண்ணினோம். தங்கள் தந்தையும் அதற்கு உடன்பட்டு விட்டார். நாங்கள் கருதியது நிறைவேறியிருந்தால், எவ்வளவு பெரிய விபரீதம் ஆகியிருக்கும் என்று எண்ணும் போது என் குலை நடுங்குகிறது! இளவரசே! தங்கள் தந்தை வீற்றிருக்கும் சோழ சிங்காதனத்துக்கு உரிமை பூண்டவர் தாங்கள்தான். சோழ சாம்ராஜ்யத்தின் மணி மகுடத்தை அணிவதற்குத் தகுதி வாய்ந்தவரும் தாங்கள்தான்! தாங்கள் சின்னஞ் சிறு பாலனாக இருந்த போது என் மார்பிலும்

தோளிலும் ஏந்திச் சீராட்டி யிருக்கிறேன். அப்போதெல்லாம் தங்கள் அங்க அடையாளங்களைப் பற்றியும் தங்கள் கரங்களை அலங்கரிக்கும் ரேகைகளையும் பார்த்து, 'இந்தப் பூமண்டலத்தையே ஆளும் மன்னாதி மன்னர் ஆகப் போகிறீர்கள்' என்று நானும் சொல்லிக் கொண்டிருந்தேன். ஓடத்திலிருந்து காவேரியின் வெள்ளத்தில் விழுந்து முழுகிப்போன தங்களைக் காவேரி அன்னை கரங்களில் ஏந்தி எடுத்துக் கொடுத்ததைப் பற்றி எத்தனையோ நூறு தடவை சொல்லி மகிழ்ந்திருக்கிறேன். இந்த மூன்று வருஷ காலத்திலே தான் காமக் குரோத மத மாற்சரியங்கள் என் மனத்தைக் கெடுத்துவிட இடங் கொடுத்துத் துரோகியாய்ப் போய்விட்டேன். பொன்னியின் செல்வ! தாங்கள் சோழ சிங்காதனம் ஏறி மணி மகுடம் புனைவது முறைமையானது; தகுதியானது. ஆனால் அந்த மணி மகுடத்தை எடுத்துத் தங்கள் சிரசில் சூடும் தகுதியை நான் இழந்து விட்டேன்! என் கரங்களும் இழந்து விட்டன! இந்தக் கரங்களினால் நான் இனி செய்யக்கூடிய புனிதமான காரியம் என் குற்றத்துக்குப் பரிகாரமாக என்னை நான் மாய்த்துக் கொள்வதுதான்!"

"இல்லை, இல்லை! கூடவே கூடாது!" என்று அந்த மந்திராலோசனை சபையில் பல குரல்கள் எழுந்தன.

**சு**ந்தர சோழர் உருக்கம் நிறைந்த குரலில் கூறினார்:— "மாமா! இது என்ன வார்த்தை! இது என்ன காரியம்! தாங்கள் சோழ குலத்துக்கு அப்படி என்ன துரோகம் செய்து விட்டீர்கள்? ஒன்றுமில்லையே? என்னுடைய குமாரர்களுக்குப் பதிலாக என் பெரியப்பாவின் குமாரரைச் சிங்காதனத்தில் அமர்த்த எண்ணினீர்கள். அது சோழ குலத்துக்கு எப்படித் துரோகம் செய்வதாகும்? என் புதல்வர்களைக் காட்டிலும் என் பெரிய தந்தையின் குமாரனுக்குச் சோழ குலத்து மணி மகுடம் புனைய அதிக உரிமை உண்டல்லவா? இப்போதுகூட, என் மனத்தில் உள்ளதைச் சொல்ல நீங்கள் அநுமதி கொடுத்தால்......"

முதன் மந்திரி அநிருத்தர் குறுக்கிட்டு, "பிரபு! இந்த நாடெங்கும் 'அருள்மொழி வர்மரே திருமுடி சூடவேண்டும்' என்ற குரல்கள் ஒலிக்கின்றன. இத்தனை நாளாக அஞ்ஞாத வாசம் செய்து வந்த கண்டராதித்த தேவரின் திருக்குமாரரும் அதே உறுதி கொண்டிருக்கிறார். பொன்னியின் செல்வரும் அதே முடிவுக்கு வந்து விட்டார். இனி, அதற்கு மாறான யோசனை எதுவும் செய்வதில் பயன் ஒன்றுமில்லை!" என்றார்.

"நீங்கள் யாரேனும் அவ்வாறு யோசனை செய்தாலும் நான் ஒப்புக் கொள்ள முடியாது!" என்றார் சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர்.

"என் மகன் கூறுவதுதான் சரி; இனி வேறு யோசனையே வேண்டியதில்லை!" என்றார் செம்பியன் மாதேவியார்.

"அன்னையே! தங்கள் வார்த்தைக்கு எதிர் வார்த்தை கூறக் கூடியவர் இங்கு யாரும் இல்லை. கடவுளின் விருப்பத்தின்படி நடக்கட்டும். ஆனாலும் பழுவூர் மாமா நம் குலத்துக்குத் துரோகம் செய்து விட்டதாகக் கூறித் தம் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்புவது சரியில்லை தானே? தங்கள் திருக்குமாரருக்கு முடி சூட்ட வேண்டும் என்று அவர் பிரயத்தனப்பட்டது சோழ குலத்துக்குத் துரோகம் செய்தது ஆகாது அல்லவா?" என்றார் சக்கரவர்த்தி.

பெரிய பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு கூறலுற்றார்:- "ஐயா! கேளுங்கள்! என்னுடைய முயற்சி பலிதமாகியிருந்தால் எவ்வளவு பயங்கரமான விபரீதம் நடந்திருக்கும் என்பதைக் கேளுங்கள்! இதை நான் சொல்லாமலே என் உயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினேன். முக்கியமாக சோழ சாம்ராஜ்யத்தின் மேன்மையைத் தவிர வேறு எதையும் கனவிலும் கருதாதவனான என் சகோதரன் காலாந்தக கண்டனின் மனத்தைப் புண் படுத்தத் தயங்கினேன். ஆயினும் இப்போது என் மனத்தைக் கல்லாக்கிக்கொண்டு உண்மையைச் சொல்லி விடத் தீர்மானித்து விட்டேன். சக்கரவர்த்தி! நாங்கள் மகான் கண்டராதித்தரின் குமாரர் என்று எண்ணிச் சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைப்பதற்கு இருந்தவன் சோழ குலத்துக்குப் பரம்பரைப் பகைவனான வீர பாண்டியனுடைய மகன்!......"

"ஐயையோ!" "இல்லை!" "அப்படி இருக்க முடியாது!" என்றெல்லாம் அச்சபையில் குரல்கள் எழுந்தன.

"உங்களுக்கு நம்புவது கஷ்டமாகத் தானிருக்கும். என் காதினாலேயே நான் கேட்டிரா விட்டால் நானும் நம்பியிருக்க மாட்டேன். அரசர்க் கரசே! என்னுடைய அவமானத்தை நான் மீண்டும் சொல்லிக் கொள்ள வேண்டி யிருக்

கிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் நான் எந்தப் பெண்ணின் முக லாவண்யத்தைக் கண்டு மயங்கி மோக வலையில் விழுந்து அவளை என் அரண்மனையில் சர்வாதிகாரி யாக்கி வைத்திருந்தேனோ, அவள் வீர பாண்டியனுடைய மகள்! அவள் வாயினால் இதை ஆதித்த கரிகாலரிடம் சொல்லியதை நான் என் காதினால் கேட்டேன். வீர பாண்டியனை ஆதித்த கரிகாலர் கொன்றதற்குப் பழிக்குப் பழி வாங்கவே பழுவூர அரண்மனைக்கு அவள் வந்திருந்தாள். அதற்குத்தான் சமயம் பார்த்துக் கொண்டிருந்தாள்!

அந்தப் பாதகியும் அவளுடன் சதி செய்தவர்களும் கரிகாலரைக் கொன்று விட்டு வீர பாண்டியனுடைய குமாரனையே சோழ சிங்காதனத்தில் ஏற்றி வைக்கத் திட்டமிட்டிருந்தார்கள். நம் குல தெய்வமான துர்க்கா



தேவியின் அருளினால் அத்தகைய கொடிய விபரீதம் நேராமல் போயிற்று. துர்க்கா பரமேசுவரி என் கண்களைத் திறப்பதற்காகவே அந்த வாணர் குலத்து வீரனை அனுப்பி வைத்தாள். அவன் மூலமாகவே இந்தப் பயங்கரமான இரகசியங்களை நான் அறிய முடிந்தது. இன்னும் சில செய்திகளை அவனிடம் நான் கேட்டறிய வேண்டுமென்று இருந்தேன். அவனை இந்த இளஞ் சம்புவரையன் கொன்று வடவாற்று வெள்ளத்தில் விட்டு விட்டு வந்து விட்டான்! நிர்மூடன்!''

இந்த வார்த்தையைக் கேட்டு அங்கிருந்தோர் அனைவரும் திகைத்துப் போய் நிற்கையில், கந்தமாறன் மட்டும், ''ஐயா! எப்படியும் அந்த வந்தியத்தேவனும் சதிகாரக் கும்பலுடன் சேர்ந்தவன்தானே? அவனை நான் வேலெறிந்து கொன்றதில் குற்றம் என்ன?'' என்றான்.

பெரிய பழுவேட்டரையர் அவனைக் கோபமாகத் திரும்பிப் பார்த்தார். அச்சமயம் அநிருத்தர் குறுக்கிட்டு, ''ஐயா! வாணர்குல வீரனைக் கொன்று விட்டதாக இவன் சொல்லுகிறான். அவ்வளவுதானே? இவன் வேலெறிந்து கொன்றவன் வந்தியத் தேவன் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டார்.

பார்த்திபேந்திரன் சிறிது தணிவான குரலில், ''வடவாற்று வெள்ளம் திரும்பி மேற்கு நோக்கிப் பாய்ந்து செத்தவனின் உடலைக் கொண்டு வந்தால், ஒருவேளை உண்மை வெளியாகும்!'' என்றான்.

''யார் கண்டது? வடவாற்று வெள்ளம் திரும்பிப் பாய்ந்தாலும் பாயலாம்!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

அவருடைய வாக்கை மெய்ப்படுத்துவது போல் அடுத்த கணத்தில் சொட்ட நனைந்திருந்த ஈரத் துணிகளிலிருந்து தண்ணீர்த் துளிகளைச் சிந்த விட்டுக் கொண்டு வந்தியத் தேவன் அந்த மந்திராலோசனை மண்டபத்தில் பிரவேசித்தான்! அவனுடைய முகத்தின் மிரண்டதோற்றமும், அவன் உள்ளே வந்த அலங்கோலமான நிலையும், வெள்ளத்தில் மூழ்கி இறந்தவனுடைய உடல் ஏதோ ஒரு ஜால வித்தையினால் எழுந்து நடமாடுவது போன்ற பிரமையைப் பார்த்தவர்களின் உள்ளத்தில் உண்டாக்கியது.

''ஆகா! வடவாற்றின் வெள்ளம் திரும்பியே விட்டது! இறந்தவனையே உயிர்ப்பித்துக் கொண்டு வந்து விட்டது!'' என்றார் முதன் மந்திரி அநிருத்தர்.

** ** **

அச்சமயம் வந்தியத்தேவன் அங்கே அந்தக் கோலத்தில் எவ்வாறு வந்து சேர்ந்தான் என்பதை வாசகர்களுக்கு நாம் அறிவித்தாக வேண்டும்.

பொன்னியின் செல்வர், குந்தவை தேவி முதலியோர் தன்னைத் தனியே விட்டுச் சென்ற பிறகு வந்தியத் தேவன் மிக்க மனச் சோர்வு அடைந்திருந்தான். வீர தீரச் செயல்கள் புரிந்து உலகத்தையே பிரமிக்க வைக்க வேண்டும் என்னும் ஆர்வம் கொண்டிருந்தவனுக்குப் பலரும் தன்னைப் பார்த்துப் பரிதாபமும் அநுதாபமும் கொள்ளும்படியான நிலையில் இருந்தது சிறிதும் பிடிக்கவில்லை. பாதாளச் சிறையைக் காட்டிலும் இந்த அரண்மனை அந்தப் புரத்துச் சிறை கொடியதாக அவனுக்குத் தோன்றியது. பொன்னியின் செல்வரின் தயவினால் அவன் பேரில் கரிகாலரைக் கொன்ற குற்றத்தைச் சுமத்தாமலும் அதற்காகத் தண்டனை அளிக்காமலும் ஒருவேளை விட்டு விடுவார்கள். ஆனால், அரண்மனையில் உள்ளவர்களுக்கெல்லாம் அவனைப் பற்றி ஒரு சந்தேகம் இருந்து கொண்டுதானிருக்கும். அவனைக் களங்கம் உள்ளவனாகவே கருதுவார்கள். இளைய பிராட்டி அவனிடம் காட்டும் இரக்கமும் அநுதாபமும் அவ்வளவுடன் நின்று விடும். சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்ளப் போகும் பொன்னியின் செல்வரின்



திருத் தமக்கையாரைக் கைப் பிடித்து மணந்து கொள்வது கனவிலும் நடவாத காரியம். அரண்மனைப் பெண்கள் அவனை ஏதோ குற்றம் செய்து மன்னிப்புப் பெற்ற சேவகனைகவே மதித்து நடத்து வார்கள். அமைச்சர்களும் தளபதிகளும் அவனை அருவருப்புடன் நோக்குவார்கள். அரச குலத்தினரின் சித்தம் அடிக்கடி மாறக் கூடியது. இளவரசர் அருள்மொழி வர்மர்தான் அவன் மீது எத்தனை நாள் அபிமானம் காட்டி வருவார் என்பது யாருக்குத் தெரியும்?

ஆகா! முதலில் அவன் உத்தேசித்திருந்தபடி சேந்தன் அமுதன் குடிசைக்கு அருகில் குதிரைமேல் ஏறியிருந்தால், இத்தனை நேரம் கோடிக் கரையை அடைந்திருக்கலாம். ஏன்? ஈழத் தீவுக்கே போய்ச் சேர்ந்திருக்கலாம். தான் வைத்தியர் மகனுல் தாக்கப்பட்ட சமயத்தில் குதிரைமேல் ஏறிச் சென்றவர்கள் யாராயிருக்கும்? ஒருவன் 'பைத்தியக்காரன்' என்று பெயர் வாங்கிய கருத்திருமன். உண்மையில் அவன் பைத்தியக்காரனில்லை; சூழ்ச்சித் திறமை மிக்கவன். அவனுடன் சென்றவன் யார்? பழைய மதுராந்தகத் தேவரைக் காணும் என்கிருர்களே? அவராக இருக்கலாம் அல்லவா? ஆம், ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும்! அவர்கள் இருவரும் சேர்ந்து தப்பித்துச் செல்வதில் ஏதோ பொருள் இருக்கிறது. அந்த மதுராந்தகர் உண்மையில் யார் என்பது இங்குள்ளவர்களுக்குத் தெரிந்தால் எத்தனை வியப்படைவார்கள்? அவர்கள் இருவரும் பத்திரமாக ஈழ நாடு சேர்ந்து விட்டால், அதன் விளைவு என்னவாகும்? ஏன்? பாண்டிய நாட்டு மணி மகுடத்துக்கும் இரத்தின ஹாரத்துக்கும் உரியவன் அவற்றை அடைந்து விடுவான்! மகிந்தன் உதவியுடனே மறுபடியும் நாட்டை அடையப் போர் துவங்குவான்.........! அப்படி நடவாமல் மட்டும் தடுக்க முடியுமானுல்......? தடுக்கக் கூடிய ஆற்றல் உடையவன் தான் ஒருவன்தான்! இங்கே இந்த அரண்மனை அந்தப்புர அறையில் ஒளிந்து உயிர் வாழ்வதில் என்ன பயன்?

இவ்வாறெல்லாம் எண்ண மிட்டுக் கொண்டு வந்தியத் தேவன் அந்த அறையில் அங்கு மிங்கும் வட்டமிட்டு உலாவிக் கொண்டிருந்தான். அடிக்கடி அந்த அறையின் ஒரு பக்கத்துச் சுவரில் இருந்த பலகணியின் ஓரமாக வந்து நின்று ஆவலுடன் வெளியே பார்த்தான். அரண்மனையின் ஒரு கோடியில் இருந்த மேல் மாடத்து அறையில் அவன் இருந்து வந்தான். அதை யொட்டி வடவாறு சென்று கொண்டிருந்தது. அங்கே அரண்மனையின் வெளிச்சுவரே தஞ்சை புரிக் கோட்டையின் வெளிச் சுவராகவும் அமைந்திருந்தது. அந்தப் பலகணி வழியாகக் கீழே குதித்தால் வடவாற்று வெள்ளத்தில் குதித்து விடலாம். அல்லது செங்குத்தான சுவரின் வழியே சிறிது பிரயத்தனத்துடன் இறங்கியும் வடவாற்று வெள்ளத்தை அடையலாம், அந்த மேன் மாடத்துக்குக் கீழே அரண்மனைப் பெண்டிர் நதியில் இறங்கிக் குளிப்பதற்காக வாசலும் படித்துறையும் இருந்ததாகத் தோன்றியது. மேன் மாடத்திலிருந்து கீழே சென்று அந்த வாசலை அடைவதற்கு வழி எப்படி என்று தெரியவில்லை. அந்தப்புரத் தாதிமார்களுக்கும் அரசிளங் குமரிகளுக்கும் அது தெரிந்திருக்கும். அவன் தப்பிச் செல்வதாயிருந்தால், அவர்கள் அறியாமல் அல்லவா செல்ல வேண்டும்......?

பலகணி ஓரத்தில் நின்று அவன் இவ்வாறு சிந்தித்துக் கொண்டிருந்தபோது, சற்றுத் தூரத்தில் தோன்றிய ஒரு காட்சி அவனைத் திடுக்கிடச் செய்தது.

அவன் இருந்த அரண்மனைக்கு அடுத்த அரண்மனைத் தோட்டத்தில் ஒரு பெண் தலைவிரி கோலமாகப் பித்துப் பிடித்தவள் போல் ஓடிக் கொண்டிருந்தாள். ஆகா! அது பெரிய பழுவேட்டரையரின் அரண்மனைத் தோட்டம் போல அல்லவா இருக்கிறது! ஆம், ஆம்! அந்தத் தோட்டந்தான்! அதில் பித்துப் பிடித்தவள் போல் ஓடுகிற பெண் யார்? ஈசுவரா! மணிமேகலை போல் அல்லவா இருக்கிறது? அவளுக்கு என்ன நேர்ந்து விட்டது? எதற்காக அப்படி ஓடுகிருள்......? கரிகாலர் மரணம் அடைந்த அன்றிரவு கடம்பூர் மாளிகையில் அவள் அவனுக்குச் செய்த உதவிகள் எல்லாம் நினைவுக்கு வந்து அவனுடைய நெஞ்சை விம்மும்படிச் செய்தன! அவளுக்குப் பின்னுல், அவளைத் தொடர்ந்து பிடிப்பதற்காக ஓடுகிறவர்களைப் போல் இன்னும் இரு முதிய ஸ்திரீகள் ஓடினர்கள். ஆனுல் அவர்கள் வர வரப் பின்தங்கி வந்தார்கள். மணிமேகலையை அவர்கள் பிடிப்பது இயலாத காரியம்! அதோ அவள் வெளி மதின் சுவரண்டை வந்து விட்டாள். சுவர் ஓரமாக வளர்ந்திருந்த ஒரு மரத்தைப் பிடித்துக் கொண்டு மதின் சுவரின் மேல் ஏறி விட்டாள்! ஐயோ! என்ன காரியம் செய்

கிறாள்? அவள் கையிலே ஒரு சிறிய கத்தி மின்னுகிறதே! அதனால் என்ன செய்யப் போகிறாள்? கடவுளே! மதிள் சுவரிலிருந்து தலை குப்புற நதியின் வெள்ளத்தில் விழுந்து விட்டாளே!

முன்னொரு சமயம் வீர நாராயண ஏரியில் மணிமேகலையும் நந்தினியும் தண்ணீரில் மூழ்கும் தறுவாயி லிருந்ததும், அவன் மணிமேகலையை எடுக்க முதலில் உத்தேசித்துப் பிறகு நந்தினியைத் தூக்கிக் கரை ஏற்றியதும், அதனால் மணிமேகலை அடைந்த ஏமாற்றமும் அந்த ஒரு கண நேரத்தில் வந்தியத் தேவனுடைய மனத்தில் குமுறிப் பாய்ந்து வந்தன.

அதற்கு மேலே அவனால் சும்மா நிற்க முடியவில்லை. அரண்மனை மேல் மாடத்திலிருந்து பலகணியின் வழியாக வெளி வந்து ஆற்று வெள்ளத்தில் குதித்தான்.

சில கண நேரம் மூச்சுத் திணறிப் பின்னர் சமாளித்துக் கொண்டு நாலா புறமும் பார்த்தான். ஆம்; அவன் குதித்த இடத்துக்கு அருகாமையில் படித்துறை மண்டபமும் அதற்கு உள்ளிருந்து வரும் வாசலும் காணப்பட்டன. அதற்கு எதிர்த் திசையிலேதான் சற்றுத் தூரத்தில் மணிமேகலை மதிள் மேலிருந்து கீழே குதித்தாள். நல்ல வேளையாக, ஆற்று வெள்ளம் அவனை நோக்கி வந்து கொண்டிருந்தது. மணிமேகலையும் வெள்ளத்தில் மிதந்து வந்தால், அவனை நோக்கித்தான் வர வேண்டும்.

தட்டுத் தடுமாறி நதியின் கரையோரத்தை வந்தியத் தேவன் அடைந்தான். ஆற்று வெள்ளத்தை எதிரிட்டுக் கொண்டு விரைவாக நடந்து சென்றான். ஆகா! அதோ மணிமேகலை மிதந்து-வருகிறாள்! அவள் உடம்பில் உயிர் இருக்கிறதா? அல்லது அது உயிரற்ற உடம்பா? ஐயோ! மறுபடியும், தன்னிடம் அன்பு கொண்டவர் ஒருவரின் உயிரற்ற உடம்பைச் சுமந்து செல்லும் துர்ப்பாக்கியம் தனக்கு ஏற்பட்டு விடுமோ! அடடா! அந்தப் பெண் தன்னிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தாள்? வீர நாராயணத்து ஏரிக்கரை மண்டபத்தில் அவள் யாழ் வாசித்துக் கொண்டு பாடிய பாட்டின் தொனி, வெள்ளத்தில் அவள் உடல் மிதப்பது போலவே காற்றிலே மிதந்து வந்தது. வந்தியத் தேவனுக்கு அது அளவில்லாத வேதனையை அளித்தது.

அந்த வேதனையை எப்படியோ சகித்துக் கொண்டு வெள்ளத்திலே பாய்ந்து சென்று மணிமேகலையை இரு கரங்களினாலும் தூக்கி எடுத்துக் கொண்டான். தெய்வங்களே! இந்தப் பெண்ணின் உயிரைக் காப்பாற்றிக் கொடுங்கள்! சோழ நாட்டிலுள்ள ஒவ்வொரு ஆலயத்துக்கும் சென்று ஒவ்வொரு சந்நிதியிலும் தரையில் விழுந்து கும்பிடுகிறேன். சிவன் கோயில், விஷ்ணு கோயில், அம்மன் கோயில், அய்யனார் கோவில் எல்லாவற்றுக்கும் சென்று ஒவ்வொரு தெய்வத்துக்கும் நன்றி செலுத்துகிறேன். சூது வாது அற்ற இந்தச் சாதுப் பெண்ணின் உயிரை மட்டும் காப்பாற்றிக் கொடுங்கள்!......

இவ்வாறு மனத்துக்குள் பல்வேறு தெய்வங்களையும் பிரார்த்தித்த வண்ணமாக வந்தியத்தேவன் மணிமேகலையைப் படித் துறையில் கொண்டு வந்து சேர்த்தான். ஏற்கெனவே ஈட்டிக் காயத்தினால் மரணத்தின் வாசலிலிருந்து திரும்பி வந்தவன் நதி வெள்ளத்தில் திடீரென்று குதித்த அதிர்ச்சியினால் மேலும் பலவீனமுற்றிருந்தான். நீரில் மூழ்கியதனால் கனத்திருந்த மணிமேகலையைத் தூக்கிக் கொண்டு நதியில் நடந்த போது அவனுக்கு மூச்சு வாங்கியது. அவளை மேலும் தூக்கிக் கொண்டு நடப்


இந்த உண்மையை
மனதில் பதியவையுங்கள்
எக்லா வாஸலீன் ஸ்னோ சருமத்தை
அழகு செய்வதற்கும் காப்பாற்றவும்
மேன்மை படுத்துவதற்கும் எல்லா
வாஸலீன் சாமான்களைவிட சிறந்தது
ஏக்லா
டாய்லட் ஸ்னோ


நோவா கம்பெனி
மாஹிம், பம்பாய்
நோவா கம்பெனியார் எக்லா டாய்லட் ஸ்னோவுடன் நோவா டால்கம் பவுடரும், நோவா பிரிலியண்டைனும் தயார் செய்கிறார்கள்.

பது இயலாத காரியமாகத் தோன்றியது. எனவே, படித்துறையின் மேல்படி அகல மாக இருந்ததைப் பார்த்து, அதன்பேரில் மணிமேகலையைப் படுக்க வைத்தான்.

பின்னர் என்ன செய்வது என்று ஒரு கணம் யோசித்தான். மணிமேகலையின் உடம்பில் இன்னும் உயிர்க்கனல் இருந் தது. ஆனால் அவளை மூர்ச்சை தெளி வித்து உயிர்ப்பிக்கும் காரியம் தன்னால் ஆகக் கூடியதில்லை. உடனே, யாராவது ஒரு பெண்ணின் உதவி தேவை. அரண் மனைக்குள் சென்று அங்கிருந்து யாரை யாவது அழைத்து வர வேண்டும்.

படித்துறைக்கு அரண்மனைக்குள்ளே யிருந்து வருவதற்காக அமைந்த வாசல் அவன் கண் முன் காணப்பட்டது. அதன் அருகில் சென்று சாத்தி யிருந்த கதவின் பேரில் தன் உடம்பில் மிச்ச மிருந்த பலம் முழுவதையும் பிரயோகித்து மோதி னான். அதிர்ஷ்ட வசமாகக் கதவின் உட்புறத் தாழ்ப்பாள் தகர்ந்து கதவு திறந்து கொண்டது. திறந்த கதவின் வழியாகப் புகுந்து ஓடினான். சிறிது தூரம் அது குறுகிய பாதையாகவே இருந்தது. பின்னர், தாழ்வாரங்களும் முற்றங்களும் வந்தன. அங்கே யெல் லாம் யாரையும் காணவில்லை. "இங்கே யாரும் இல்லையா?" "ஒரு பெண்ணைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லையா?" என்று அலறிக் கொண்டே அங்கு மிங் கும் ஓடினான். கடைசியாக, ஒரு பெரிய மண்டபத்தின் வாசலில் சேவகர்கள் இருவர் அவனை வழி மடக்கி நிறுத்த முயன்றார்கள். அவர்களை மீறித் தள்ளிக் கொண்டு உள்ளே புகுந்தான். அங்கே சக்கரவர்த்தி உன்னதமான சிங்காதனத் தில் அமர்ந்திருப்பதையும், ஆடவர்கள், பெண்டிர்கள் பலர் சூழ்ந்து நிற்பதையும் கண்டு திகைத்துப் போனான். முதலில் அவன் கண்களில் எதிர்ப்பட்ட பெண் மணி பூங்குழலி என்று தெரிந்து கொண் டதும், அவனுக்குச் சிறிது தைரியம் உண்டாயிற்று. "சமுத்திர குமாரி! சமுத்திர குமாரி! மணிமேகலை ஆற்றில் விழுந்து விட்டாள். உடனே வந்து காப்பாற்று!" என்று அலறினான்.

## அரிய பொக்கிஷம்!




கொரியாவில் சமாதானத்தை நிலைநிறுத்தச் சென்ற இந்திய ராணுவம் சர்வ தேச கௌரவத்தைச் சம்பாதித்துக் கொண்டு இந்தியா திரும்பியது.





# புகை பிடிப்பவரின் கனவு

புகை பிடிப்பதனால் ஏற்படும் கஷ்டங்களுக்குப் பரிகாரம் ஒன்று கனவில் கண்டேன். ஆம், பினாகா பற்பசைதான் அது.

புகை பிடிப்பதனால் பற்களில் படியும் நிக்கோடைன் கறையையும் சுவாசத்தில் ஏற்படும் துர்க்கந்தத்தையும் சாஸ்திரீய முறையில் தயாரிக்கப் பட்ட ரசாயனப் பொருள்கள் சேர்ந்த பினாகா பற்பசை அறவே ஒழிக்கிறது.—ஆம், புகை பிடிப்போரின் கனவு நனவாகி விட்டது!

பினாகா (ரோஸ்) சக்தி வாய்ந்த "ஸல்போரிஸினோலியட்" என்னும் பொருள் கொண்டது.

பினாகா க்ரீன் இயற்கையின் ஆச்சர்ய துர்க்கந்த நாசினியான சக்தி செய்த க்ளோரோபில்லும் கொண்டது.

எதைத் தேர்ந்தெடுத்தாலும் சரி,
நல்லதையே தேர்ந்தெடுக்கிறீர்கள்

'ஸிபா'வின் விசேஷ குணம் பொருந்தியுள்ள பற்பசை.

ரேடியோ ஸிலோனில் பிரதி திங்கட்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா ஹிட் பரேடையும் பிரதி செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா மௌஜ் மஜாவையும், பிரதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு பினாகா கீத மாலாவையும் கேளுங்கள்


வாழ்வின் வளம் நோக்கி . . .
கரகரவென்று சப்தமிட்டுச் செல்லும் பெரிய ரெயில் வண்டி பெருமூச்சுடன் வந்து ஸ்டேஷனில் நிற்கிறது. கிராம ஜனங்கள் பரபரப்புடனும் ஆர்வத்துடனும் வண்டியை சூழ்ந்து கொள்ளுகிறார்கள்...சமூகத்தின் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற சம்பவம் இது. ஆம்—கிராம மக்களின் உழைப்பினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் இனி நகரங்களுக் கெல்லாம் இந்த ரெயில் வண்டியில் அல்லவா எடுத்துச் செல்லப்படும்!
வரப்போகும் வருடங்களில் கிராமத்தில் உற்பத்தியாகும் பொருள்கள் எல்லாம் நகரங்களுக்கு ரெயில் வழியாகவும் ரஸ்தாக்கள் மூலமாகவும் ஆயிரக்கணக்கான மைல்களுக்கு எடுத்துச் செல்லப்படும். ஐந்து வருட திட்ட காலத்திற்குள் 3000 மைல் பாதை செப்பனிடப்படும். மிகவும் சிறந்த போக்கு வரவு சாதனத்தை அளிக்க அடிப்படையாக 770 மைல்களுக்கு கான்க்ரீட் ரஸ்தாக்களும், 66 பிரம்மாண்டமான பாலங்களும் கட்டப்படும். வியாபாரத்தின் ஜீவ நாடியான இந்த சாதனங்களின் மூலமே நம் நாட்டு மக்களின் கலாசாரமும், வர்த்தகமும் மேன்மேலும் உயர்ந்தோங்கி, அவர்களின் வாழ்க்கை உன்னதமடையும்.
இவ்வைந்து வருடத் திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் லக்ஷக்கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையைச் செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்றவிதங்களில் ஈடுபடும்.
தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
TN 3004

# வீணை சண்முகவடிவு அம்மாள்

கல்கி

நமது நாட்டில் வீணையும் வேணுவும் சிறந்த இசைக் கருவிகளாக ஆதிகாலத்திலிருந்து கருதப்பட்டு வந்திருக்கின்றன. மகானாகிய திருவள்ளுவரும் அவ்வாறே குழலும் யாழும் மிக இனிய இசைக் கருவிகள் என்று கருதினார். ஆனால் அவற்றின் இசையைக் காட்டிலும் செவிக்கு இனியது வேறு ஒன்று உண்டு என்றும் கூறினார். அது 'தம் மக்களின் மழலைச் சொல்!' என்றார்.

சாதாரணமான குரலை உடைய குழந்தையின் மழலையே, அக் குழந்தையைப் பெற்றோர்களுக்கு யாழையும் குழலையும் விட இனியதாகத்தான் இருக்கும். வீணையைக் காட்டிலும் இனிய குரலை ஒரு குழந்தை உண்மையிலேயே இறைவன் அருளால் பெற்றிருக்குமானால், அந்தக் குழந்தையின் மழலையும், மழலைச் சொல்லுடன் கலந்து வரும் குரலிசையும் அக்குழந்தையின் அன்னைக்கு எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கும்! அதிலும், அந்த மாதரசி வீணை வாத்தியத்தை நன்கு பயின்று நாதோபாசனை செய்து வந்தவரானால், அவர் எத்தகைய பாக்கியத்தைச் செய்த புண்ணியவதி யாவார்! தாம் அடைந்த பெறற்கரிய பேற்றைக் குறித்து எப்படி யெல்லாம் அவர் எண்ணி எண்ணி மகிழ்வார்!

அத்தகைய பாக்கியசாலியான அன்னை, மதுரை மாநகரைச் சேர்ந்த ஸ்ரீமதி வீணை சண்முக வடிவு அம்மாள் அவர்கள்.

இன்று அகில இந்தியாவிலும் புகழ் பெற்று விளங்கும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களைப் பெற்றெடுத்துச் சங்கீத உலகத்துக்கு வழங்கிய பெருமை வாய்ந்த பெண்மணி ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாள்தான்.

** ** **

பரம்பரையாகச் சங்கீதக் கலையில் ஆர்வமும் பயிற்சியும் பெற்றிருந்த குடும்பத்தில் வந்தவர் ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள். இவருடைய தந்தையான ஸ்ரீ எம். எஸ். சுவாமிநாதம் அவர்கள் நல்ல சங்கீதஞானமும் சாஸ்திர ஆராய்ச்சியும் சிறந்த பண்பாடும் படைத்தவர்; அன்னை ஸ்ரீமதி அக்கம்மாள் வயலின் வாத்தியத்தைப் பயின்று அதில் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினார்.

இத்தகைய சங்கீத பரம்பரையில் வந்த பெற்றோர்களின் செல்வப் புதல்வியாக ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாள் சர்வதாரி வருடம் (1889-ம் ஆண்டு) பங்குனி மாதம் 17உ பிறந்தார்.

குழந்தைப் பிராயத்திலேயே இவருக்கு இசைக் கலையில் ஆர்வம் உண்டாயிற்று. அந்தக் கலையை நன்கு பயில வேண்டும் என்ற ஊக்கம் கொண்டார். இவருடைய பெற்றோர்களும் இயற்கையிலேயே இசை ஆர்வம் கொண்ட குழந்தைக்கு நல்ல முறையில் சங்கீதக் கலையைப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்று விரும்பினார்கள். அந்நாளில் பிரபல வித்வானாக விளங்கிய கரூர் ஸ்ரீ வேங்கடராம பாகவதர் அவர்களிடம் சங்கீத வித்தை பயில ஏற்பாடு செய்தார்கள்.

கச்சேரிகளில் சோபிக்கக் கூடிய அளவுக்கு இவருடைய குரல் எடுப்பாக இல்லையென்று கருதி, இசைக் கருவிகளில் சிறந்ததான வீணை வாத்தியத்தில் இவர் சங்கீத வித்தையைப் பயிலத் தொடங்கினார். தமது சாரீரத்தைப் பற்றி அவருக்கு அந்நாளில் ஏற்பட்டிருக்கக் கூடிய ஆதங்கம், பிற்காலத்தில் அவருடைய நாதோபாசனையின் பயனாக, அவருடைய புதல்வி ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் மூலமாக நீங்கியது. இணையற்ற இனிமையும் காம்பீர்யமும் மற்றும் சங்கீத வித்தைக்குரிய சிறந்த சகல அம்சங்களும் வாய்ந்த குரலைப் பெற்றவர் என்று தேசமெங்கும் இன்று ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பிரசித்தியுடன் விளங்கி வருகிறார் அல்லவா!

ஸ்ரீமதி சண்முக வடிவு தாம் பயிலத் தொடங்கிய வீணை வாத்தியத்தில் வெகு விரைவில் நல்ல தேர்ச்சி பெற்று வந்தார்.

இவருடைய அன்னை ஸ்ரீமதி அக்கம்மாளின் வயலின் வாசிப்பை அக்காலத்தில் மிகப் புகழ் வாய்ந்த வித்வான்களான திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர், மடவார்விளாகம் ஸ்ரீ முத்தையா பாகவதர் முதலியவர்கள் கேட்டு ரஸித்துப் பாராட்டி யிருக்கிறார்கள். ஒரு சமயம் ஸ்ரீமதி அக்கம்மாளின் பிடில் வாத்தியத்தைக் கேட்ட பிறகு அவருடைய குமாரி சண்முக வடிவின் வீணை வாசிப்பையும் அந்தப் பிரபல வித்வான்கள் கேட்டார்கள். "தாயைப்போல் சேய்" என்று மகிழ்ந்து கூறி, "இந்தக் குழந்தை விரைவில் சங்கீத உலகில் முன்னணிக்கு வருவாள்!" என்று ஆசீர்வதித்தார்கள்.

அப் பெரியோர்களின் வாக்கு விரைவிலேயே பலிதமாயிற்று. குருநாதரின் அநுமதியுடன் ஸ்ரீமதி சண்முக வடிவு பதினைந்தாம் பிராயத்திலேயே வீணைக் கச்சேரிகள் செய்யத் தொடங்கினார். பக்க வாத்தியங்களின் உதவி யின்றியே மூன்று-நான்கு மணி நேரம் வீணைக் கச்சேரி செய்வார். சங்கீதம் கேட்க வந்த ரஸிகர்கள் நேரம் போவது பற்றிய நினைவே இன்றி மெய்மறந்து கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

வக்கீல் ஸ்ரீ சோமயாஜுலு அவர்களின் இல்லத்தில் நடந்த கலியாணத்தில் இவருடைய வீணைக் கச்சேரி முதன்முதலாக நடைபெற்றது. அக் கச்சேரியைக் கேட்டவர்கள் பெரிதும் ரஸித்துப் பாராட்டினார்கள். அதிலிருந்து கலியாண வைபவங்களிலும் சங்கீத சபைகளிலும் இவருடைய கச்சேரிகள் அடிக்கடி நடைபெற்றுப் பிரபலம் அடையத் தொடங்கினர்.

வக்கீல் ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாளின் வாழ்க்கைத் துணைவர் ஆனார். இவர் சங்கீதக் கலையில் ஆர்வம் உள்ள பரம ரஸிகர். இவர் அளித்த உற்சாகத்தினால் ஸ்ரீமதி சண்முக வடிவின் புகழ் மேலும் பரவியது. தஞ்சை, திருச்சி, திருநெல்வேலி, ராமநாதபுரம், சென்னை முதலிய இடங்களில் இவருடைய கச்சேரிகள் அதிகமாக நடந்தன.

1914-ம் ஆண்டில் சென்னை மாகாணத்தின் கவர்னர் பதவி வகித்த லார்ட் பெண்ட்லண்ட் துரை மதுரை நகருக்கு விஜயம் செய்தார். ஸ்ரீ சீனிவாச ராவ் என்னும் பிரமுகரின் இல்லத்தில் கவர்னருக்குச் சிற்றுண்டி விருந்து நடந்தது. அப்போது ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாளின் வீணைக் கச்சேரி ஏற்பாடாகி யிருந்தது. கவர்னர் பெண்ட்லண்ட் துரை வீணைக் கச்சேரியை மிகவும் ரஸித்துச் சிலாகித்ததுடன், ஸ்ரீமதி சண்முக வடிவுக்குத் தங்கப் பதக்கமும் பாராட்டு இதழும் வழங்கிக் கௌரவித்தார்.

மைசூரில் அச்சமயம் வீணை பக்ஷி சுப்பண்ணா, சேஷண்ணா ஆகியவர்கள் பிரசித்தமான வித்வான்

ளாக விளங்கினர்கள். அவர்கள் ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாளின் வீணை வாசிப்பை அடிக்கடி கேட்டு மகிழ்ந்தார்கள். இவர் வீணை வாத்தியத்தைக் கையாளும் முறையையும், இவருடைய வீணா நாதத்தின் இனிமையையும் அவர்கள் பெரிதும் பாராட்டினர்கள்.

ஸ்ரீமதி சண்முகவடிவின் குழந்தைப் பிராயத்தில் இவருடைய வீணை வாசிப்பைக் கேட்டு ஆசி கூறிய திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்கள் இவர் பிரபலமாகக் கச்சேரி செய்யத் தொடங்கிய பிறகும் கேட்கும்படி நேர்ந்தது. அப்போது அவர் ஆசி கூறிப் பாராட்டியதுடன் திருப்தி அடையவில்லை. ஸ்ரீமதி சண்முக வடிவின் வித்தைத் திறமையைச் சோதிப்பதற்காகக் கடுமையான சோதனைகள் நடத்தினர். ஏறக்குறைய ஒன்றுபோல் தொனிக்கக் கூடிய சம்மேள ராகங்களாகிய பைரவி—முகாரி, காபி—தர்பார், ஆரபி—தேவகாந்தாரி ராகங்களை அடுத்தடுத்து வாசிக்கச் செய்தார். அவ்வாறே கன ராக தானங்கள், சவுக்க கால, மத்தியம கால பல்லவிகளும் வாசிக்கச் சொல்லிக் கேட்டார். இந்தப் பரீட்சைகளில் ஸ்ரீமதி சண்முக வடிவு சிறந்த முறையில் தேறியதைக் கண்டு பரிபூரண திருப்தி அடைந்தார். இவருடைய சங்கீத வித்தைத் திறமையை அந்த மகா வித்வான் பெரிதும் பாராட்டியதுடன் சோழ நாட்டில் சங்கீத ரஸிகர்கள் மிகுந்த பல ஊர்களிலும் இவருடைய வீணைக் கச்சேரி நடப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

திருக்கோடிகாவல் கிருஷ்ணையர் தம்முடைய காலத்தில் சங்கீத உலகத்தில் இணையற்ற பெருமையுடன் விளங்கியது அனைவரும் அறிந்ததே. சங்கீதக் கலையின் மேன்மையை நிலைநாட்டுவதில் மிகவும் கண்டிப்பான கொள்கையைக் கடைப்பிடித்தவர். அத்தகையவர் ஸ்ரீமதி சண்முக வடிவின் வீணை வாசிப்பைப் பெரிதும் மதித்துப் பல இடங்களிலும் கச்சேரி வைப்பதற்கும் ஏற்பாடு செய்தார் என்றால், அந்த சங்கீதம் எவ்வளவு உயர்தரமாயிருக்க வேண்டும் என்பதற்கு வேறு அத்தாட்சியே வேண்டியதில்லை.

ஸ்ரீமதி சண்முக வடிவு சென்னைக்குச் சென்றிருந்த ஒரு சந்தர்ப்பத்தில் இவருடைய வீணை வாசிப்பை வீணை தனம்மாள் கேட்டுப் பரவசமடைந்தார். "என்னைப் போல் நீயும் சங்கீதக் கலைக்குத் தொண்டு செய்து சர்வ மங்களங்களையும் அடைவாய்; நல்ல சங்கீத ஞானமுள்ள குழந்தைகளைப் பெறுவாய்!" என்று வாழ்த்தினர். நிறைந்த உள்ளத்துடன் வீணை தனம்மாள் கூறிய வாழ்த்து அற்புதமாகப் பலித்துவிட்டது!

மற்றொரு பிரசித்தி பெற்ற வீணை வித்வானாகிய விஜய நகரம் வெங்கடரமணதாஸர் பல வித்வத் சிரோமணிகள் நிறைந்திருந்த சபையில் ஸ்ரீமதி சண்முக வடிவின் வீணை வாசிப்பைப் பாராட்டிப் பேசி மகிழ்ந்தார். வீணாகானத்தில் நிகரற்ற பிராபல்யத்துடன் விளங்கிய காரைக்குடி சகோதரர்களும் ஸ்ரீமதி சண்முக வடிவின் வீணை வாசிப்பைப் பாராட்டி ஆசி கூறினர்கள்.

வீணை ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள்





'குஞ்சு'

கச்சேரி செய்து புகழ்பெற்றது மட்டுமல்லாமல் சங்கீதக் கலையின் இலக்கண இலக்கியங்களையும் ஸ்ரீமதி சண்முக வடிவு நன்கு அறிந்திருந்தார். ஆகையால், அவ்வப்போது பல சங்கீத வித்வான்கள் இவரிடம் வந்து சங்கீத சாஸ்திர நுட்பங்களைப் பற்றி விவாதிப்பார்கள்.

ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள் ஆண்டுதோறும் தம்முடைய இல்லத்தில் ஸ்ரீ தியாகராஜ உத்ஸவம் விமரிசையாக நடத்தி வந்தார். அச்சமயம் தமிழ் நாட்டில் பிரபலம் அடைந்திருந்த சங்கீத வித்வான்கள் அனைவரும் ஸ்ரீமதி சண்முகவடிவின் இல்லத்தில் நடந்த தியாகராஜ உற்சவத்துக்கு வந்து கச்சேரி செய்து சிறப்பித்தார்கள்.

இத்தகைய சங்கீத மயமான சூழ்நிலையில் பிறந்தவர்தான் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி. பெற்றோர்களும் உற்றோர்களும் குழந்தையைக் 'குஞ்சு' என்று செல்லப் பெயரால் அழைத்தார்கள். ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி மழலை மாறாத சின்னஞ் சிறு குழந்தையாயிருந்த போதே அவருடைய தந்தை ஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியம் இறைவனடி சேர்ந்து விட்டார். இந்தச் சம்பவம் ஸ்ரீமதி சண்முகவடிவு அவர்களைத் துயரத்தில் ஆழ்த்தியது.

**வா**ழ்க்கைத் துணைவரைப் பிரிந்த துயரத்தை ஓரளவு மறப்பதற்குக் குழந்தை சுப்புலக்ஷ்மி இசைக் கலையில் காட்டிய ஆர்வம் உதவியாயிருந்தது. குழந்தையின் குரலினிமை அன்னையை மெய்மறக்கச் செய்தது. நாளுக்கு நாள் அக்குழந்தையிடம் வளர்ந்து வந்த சங்கீத ஞானத்தைக் கண்டு ஸ்ரீமதி சண்முகவடிவு பெருமிதம் அடைந்தார். இறைவன் அருளால் குழந்தையிடம் இயற்கையாகப் பொலிந்த இசை அறிவு மேலும் மேலும் வளர்வதற்கு வசதி அளித்து வந்தார்.

குழந்தைக்குப் பத்து வயது பூர்த்தி ஆவதற்குள்ளேயே தம்முடன் கச்சேரி மேடைகளில் அமர்ந்து தமக்கு உதவியாக அவ்வப்போது பாடும்படி செய்தார்.

அவ்வாறு அன்னையும் புதல்வியும் சேர்ந்து கச்சேரி செய்த நாட்களில் அவர்களுடைய கச்சேரியைக் கேட்ட ரஸிகர்கள் இன்றைக்கும் அதை நினைவு வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அன்னை சண்முக வடிவு அம்மாள் வீணை வாத்தியத்தின் கம்பிகளை மீட்டி உண்டாக்கிய இசை அதிக இனிமையானதா, குழந்தை சுப்புலக்ஷ்மியின் குரலிலிருந்து பெருகிய இசை வெள்ளம் அதிக மதுரம் பொருந்தியதா என்று சங்கீத ரஸிகர்கள் சர்ச்சை செய்தார்கள்.

'' தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது ''

என்றார் வள்ளுவர் பெருமான். தம்மை விடத் தம் குழந்தைகள் கலைத் துறையில் சிறப்படைந்து புகழ் பெறுவதைப் பார்க்கும் பாக்கியம் உலகில் சிலருக்குத்தான் கிடைக்கக் கூடும். அந்த பாக்கியம் தமக்குக் கிடைக்கப்போகிற தென்பதை ஸ்ரீமதி சண்முகவடிவு உணர்ந்து கொண்டார். வாய்ப் பாட்டுக் கச்சேரியில் தாம் அடைய முடியாமற்போன புகழைத் தம் புதல்வி அடைவாள் என்று நிச்சயம் கொண்டார்.

எனவே, கிராமபோன் கம்பெனியார் ஸ்ரீமதி சண்முகவடிவு அவர்களை இசைத் தட்டுப் பதிவு செய்வதற்காக அழைத்தபோது தமது பத்து வயதுக் குமாரியையும் அழைத்துச் சென்றார்.

ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளின் தானம் வாசிப்பை ஓர் இசைத் தட்டிலும், 'சிவ தீக்ஷா' என்னும் இனிமையான பதத்தை இன்னொரு இசைத் தட்டிலும் கிராமபோன் கம்பெனியார் பதிவு செய்து கொண்டார்கள்.

அந்த இரண்டு இசைத் தட்டுகளும் ஸ்ரீமதி சண்முகவடிவுக்கு மிக்க புகழை அளித்தன. கிராமபோன் கம்பெனியின் ரிகார்டிங் என்ஜினியரான மிஸ்டர் காரின் என்ற ஆங்கிலேயர், ஸ்ரீமதி



ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி

சண்முகவடிவு அம்மாளின் 'தானம்' இசைத் தட்டைத் தம்முடன் இங்கிலாந்து எடுத்துச் சென்றார். அங்கு பலரும் அதைக் கேட்கும்படி செய்ததுடன், தமது பாராட்டுதலை விரிவாக எழுதித் தெரிவித்தார்.

ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள் இசைத் தட்டில் தம் வீணை வாசிப்பைப் பதிவு செய்த அதே சமயத்தில், குழந்தை சுப்புலக்ஷ்மியின் பாட்டு ஒன்றையும் பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்தார். அன்னை கற்பித்திருந்த 'மரகதவடிவும்' என்று தொடங்கும் செஞ்சுருட்டி ராகப் பாடலைப் பத்து வயது நிரம்பாத குழந்தை பாடினாள். தாயாரைத் திருப்தி செய்வதற்காகக் கிராமபோன் கம்பெனியாரும் அப்பாட்டைப் பதிவு செய்து கொண்டார்கள். அந்த இசைத் தட்டு அவ்வளவு பிரபலம் அடையப் போகிறது என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆறு கட்டை சுருதியில் குழந்தை சுப்புலக்ஷ்மி பதிவு செய்திருந்த அந்த 'மரகத வடிவும்' என்ற இசைத்தட்டு வெளியான பிறகு, சில காலம் தமிழ் நாடெங்கும் அந்தப் பாட்டு உச்சஸ்தாயியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

இதற்குப் பிறகு ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளுக்குத் தமது குமாரியின் முன்னேற்றமே முக்கியமான மனோரதம் ஆயிற்று. சில வருஷங்களுக்கெல்லாம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியைத் தனியாகவே வாய்ப் பாட்டுக் கச்சேரி செய்யப் பண்ணினார். அப்போதெல்லாம் தாம் அருகில் அமர்ந்திருந்து குமாரியின் குரலினிமையில் மெய் மறந்திருந்தார். சபையிலுள்ள ரஸிகர்கள் குழந்தையின் பாட்டை ரஸிப்பதைக் கண்டு அன்னை பெருமிதம் அடைந்தார்.

சங்கீத உலகில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் புகழ் நன்கு நிலை பெற்று விட்டது என்பதைக் கண்ட பிறகு ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள் தாம் வீணைக் கச்சேரி செய்வதை நிறுத்திக் கொண்டார். தமது குமாரியின் புகழே தமது புகழாகக் கருதி மகிழ்ந்து வந்தார்.



ஸ்ரீ சக்திவேல், ஸ்ரீமதி எம். எஸ்.,
ஸ்ரீமதி சண்முகவடிவு

ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள் சிறந்த சங்கீத புலமை பெற்றவரா யிருப்பதோடு, உயர்ந்த பண்பாடும் பெற்றவர். அவர் வாசிக்கும் வீணை வாத்தியத்தின் இனிமையை அவருடைய சுபாவத்திலும் காணலாம். அவருடைய பேச்சிலேயே இயற்கை மாதுர்யம் கலந்திருக்கும். தற்புகழ்ச்சி சிறிதும் இல்லாதவர். யாரையும் பற்றிக் குறை சொல்லும் வழக்கமில்லாதவர். சங்கீதத் துறையில் ஈடுபட்ட பிற வித்வான்களிடம் பெரு மதிப்பு உடையவர். எந்த வித்வான் பாடினாலும், வீணை முதலிய இசைக் கருவிகளை வாசித்தாலும், அவற்றிலுள்ள நல்ல அம்சங்களைக் கூர்ந்து கவனித்துப் பாராட்டி மகிழ்ச்சி அடையும் இயல்புடையவர்.

ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளின் மூத்த குமாரர் ஸ்ரீ எம். எஸ். சக்திவேல் இளம்பிராயத்திலேயே மிருதங்க வாத்தியத்தைப் பயின்று, இன்றைக்குச் சிறந்த மிருதங்க வித்வான்களில் ஒருவராக விளங்கி வருகிறார்.

மற்றொரு புதல்வியான ஸ்ரீமதி எம். எஸ். வடிவாம்பாள், வீணை வாத்தியம் பயின்று அதில் நல்ல தேர்ச்சி அடைந்து வந்தவர், இளம் வயதில் அகால மரணமடைந்து விட்டார். இந்தத் துயர சம்பவத்துக்குப் பிறகு ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளின் உடல் நலம் குன்றியது. வீட்டில் வீணை வாசிப்பதைக் கூட நிறுத்தி விட்டார். ஆத்மார்த்தமான பிரியம் உடையவர்கள் யாராவது வற்புறுத்திக் கேட்டால், சிறிது நேரம் வாசிப்பார். அந்தச் சொற்ப நேர வாசிப்பு அவர் ஒரு காலத்தில் அந்த வாத்தியத்தின் மூலம் சங்கீத உலகில் அடைந்திருந்த கீர்த்தியை நினைவூட்டுவதா யிருக்கும்.

தற்சமயம் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் அகில இந்தியாவிலும் இணையற்ற குரலினிமை வாய்ந்த பாடகியாகப் புகழ் பெற்று விளங்கி, நமது கர்நாடக சங்கீதத்தின் மகிமையை வட நாட்டிலும் நன்கு நிலைநாட்டி வருவதற்கெல்லாம் மூல காரணமானவர் ஸ்ரீமதி சண்முகவடிவு அவர்களே என்று சொல்ல வேண்டியதில்லை. இன்று ஸ்ரீமதி எம். எஸ். சங்கீத உலகில் அடைந்துள்ள உன்னத நிலைமையைக் குறித்துப் பெருமிதம் கொண்டிருப்பவர்களிலும் ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளே முதன்மையாக இருக்கிறார்.

சென்ற வாரத்தில் மதுரையில் 'ஸ்ரீ சத்குரு சங்கீத சமாஜ'த்தின் ஆதரவில் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீதக் கச்சேரி பெருந்திரளான ரஸிகர்களின் மகா சபையில் நடைபெற்றது. அறுபத்தைந்து பிராயத்தை அடைந்து துர்ப்பலமா யிருக்கும் ஸ்ரீமதி சண்முக வடிவு அம்மாளும் தமது செல்வக் குமாரியின் கச்சேரி கேட்பதற்காக வந்திருந்தார். சங்கீத சபையின் சார்பில், "ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மியைச் சங்கீத உலகத்துக்கு அளித்த அன்னை" என்று அறிமுகப்படுத்தி, ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாளுக்கு மாலை சூட்டப் பட்டபோது, சபையோர் புளகாங்கிதம் அடைந்தார்கள். ஸ்ரீமதி சண்முகவடிவு அம்மாள் தமக்குப் போடப்பட்ட மாலையைத் தமது புதல்விக்குத் திரும்பப் போட்டு ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

இந்தத் தாயும் மகளும் போல் கர்நாடக சங்கீதத்துக்குத் தொண்டு செய்வதற்கு இன்னும் பலரை அளித்து அருளும்படி, வெள்ளைத் தாமரைப் பூவிலும் வீணை செய்யும் ஒலியிலும் விளங்கும் கலைமகளைப் பிரார்த்திப்போமாக.

சோர்வு மேலிட்டு
தினசரி வேலை
வேம்பாகத்
தோன்றும் பொழுது



# புத்துணர்ச்சியைப் பெற

ஒரு தேக்கரண்டி க்ளுகோவிடா சாப்பிடுங்கள்.







க்ளுகோவிடாவில் அடங்கியுள்ள டெக்ஸ்டரோஸ், கால்ஷியம், பாஸ்பரஸ், விடமின் டி முதலான பொருள்கள் நீங்கள் இழந்த சக்தியை சீக்கிரமே ஈடு செய்கின்றன. ஒவ்வொரு தடவையும் உங்களுக்குப் பிரியமான பானத்தை அருந்தும் பொழுது ஒரு தேக்கரண்டி க்ளுகோவிடாவை சேர்த்துச் சாப்பிட்டால் உங்களை நாள் முழுவதும் வலிமையோடிருக்கச் செய்கிறது.

# க்ளுகோவிடா

உடலுக்குகந்த உணவு

காரன் பிராடக்டஸ் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.

தபால் பெட்டி நெ. 994, பம்பாய் 1 தபால் பெட்டி நெ. 982, கல்கத்தா 1



டீ

விளையாட்டுக்கே
ஒரு விறுவிறுப்பை அளிக்கிறது





டீ உங்களுக்கு புத்துயிர் அளிக்கிறது
அருந்திப் பாருங்கள்

சென்ட்ரல் டீ போர்டு பிரசுரம்

# நல்ல ராஜா



பூசோதரன்

ஒரு ஊரில் பூபதி என்ற ஒரு அரசன் இருந்தான். அவன் மிகவும் பேராசை பிடித்தவன். அவன் நிறைய செல்வம் சேகரித்து வைத்திருந்தான். இருந்தும் அவன் ஆசை குறையவில்லை. உலகிலே உள்ள செல்வத்தையெல்லாம் தன்னிடமே திரட்டிச் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தான் நாளுக்கு நாள் அவனிடம் அதிகரித்துக் கொண்டிருந்தது. பண ஆசை ஏற்பட்டு விட்டால், அதற்குத்தான் ஒரு முடிவு கிடையாதே! கர்வம் அவன் தலைக்கு நிறைய ஏறிப் போயிருந்தது.

பண ஆசையும், தற்பெருமையும் அவனுக்கு ஏற்பட்ட நாள் முதற் கொண்டு நாட்டை அவன் சரியாக ஆளவில்லை. குடி மக்களின் குறைகளை அவன் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. மந்திரி, பிரதானிகளின் சிறந்த புத்திமதிகளைக் கேட்கவில்லை. தன் மத குருவுக்குச் செலுத்தும் அரச மரியாதையையும் செலுத்தவில்லை. குருவின் புத்தி மதியை நாடி, அவர் இருப்பிடம் சென்று அவரை வணங்கவுமில்லை. தெய்வ வழிபாடுகளிலும் அவன் கவனம் செலுத்தவில்லை.

இப்படி இறுமாப்புடன் இருந்த பூபதி ஒரு நாள் காட்டுக்கு வேட்டையாடச் சென்றான். அவனுடன் மந்திரிகளும், மற்றவர்களும் சென்றனர்.

காட்டில் பூபதி ஒரு மானைக் கண்டான். அவன் அதைத் துரத்திக் கொண்டு, தன் குதிரை மீது ஏறி விரைந்து சென்றான். மான் அவனை இங்கும் அங்குமாக அலைக் கழித்தது. கடைசியில் அது எங்கோ சென்று மறைந்தது.

அப்பொழுதுதான் பூபதி தன் பிரதானிகளைப் பிரிந்து காட்டினுள் தனியே வெகு தூரம் வந்து விட்டதை உணர்ந்தான். நாட்டை நோக்கி அவன் திரும்பினான். அங்கே பக்கத்தில் தெளிந்த தண்ணீர் நிறைந்த தடாகம் ஒன்று இருந்தது அவனுடைய கண்களில் பட்டது.

அப்பொழுது நடுப் பகல். நிர்மலமாக விளங்கிய தடாகத்தில் இறங்கி, தண்ணீரில் முழுகி, நீந்தி எழுந்திருக்க வேண்டுமென்ற ஆசை அவனுக்குண்டாயிற்று.

ஆசை தீர, அரை மணிக்கு மேல், தண்ணீரில் நீந்தி விட்டுக் கரையை அடைந்தான் அரசன் பூபதி. என்ன ஆச்சரியம்! அங்கே மரத்தடியில் அவன் கட்டிச் சென்ற குதிரை போன இடம் தெரியவில்லை. அவன் கரையின் மேல் விட்டுச் சென்ற ஆடை, ஆபரணங்களையும் அவனால் அங்கே காண முடியவில்லை.

குதிரையும் போய், ராஜ உடையும் போய், பூபதி இப்பொழுது ஒரு பிச்சைக்காரனைப் போல் தோற்றமளித்தான். இடுப்பில் சுற்றியிருந்த சின்னஞ் சிறிய துணியோடு, அவனைப் பார்த்திருந்தால் பைத்தியக்காரனோ என்று எண்ணத் தோன்றும்.

பூபதிக்கு ஒன்றுமே புரியவில்லை. மரங்கள் அடர்ந்த காட்டினிடையே அவன் தனித்து நின்றான், அதுவும் இந்தப் பரிதாப கோலத்துடன். ஒரு சில மணி நேரத்துக்கு முன், அவனிருந்த கம்பீரமான தோற்றமென்ன? இப்பொழுது ஒரு ஆண்டிப் பண்டாரமாய் அவன் நின்றிருந்த நிலைதான் என்ன? கனவிலும் அவன் எண்ணியிராத நிலைமைக்கு வந்து விட்டானே! கர்வம் நிறைந்த கொடிய அரசனாகவா அவன் இருந்தான்? இல்லவே யில்லை. வழிதவறிக் காட்டில் சிக்கிக் கொண்ட பிச்சைக்காரனாக இருந்தான்.

பூபதிக்கு வாய் விட்டு அழலாம் போல் தோன்றியது. தன்னுடைய பேராசைக்கும், கர்வத்துக்கும் ஜனங்களை வருத்தியதற்கும், எல்லாவற்றுக்கும் சேர்ந்து கடவுள் அளிக்கும் தண்டனைதானோ என்றுகூட அவனுக்குத் தோன்றி விட்டது.

அப்படியே அயர்ந்து போய்ச் சிறிது நேரம் உட்கார்ந்து விட்டான். பின் அவன் எழுந்து ஊரை நோக்கி நடக்க ஆரம்பித்து விட்டான்.

பொழுது சாய்ந்து விட்டது; எங்கும் இருட்ட ஆரம்பித்து விட்டது. பூபதிக்குக் களைப்பு மேலிட்டது. காலையில் சாப்பிட்டு விட்டு, காட்டுக்குக் கிளம்பிய பின் அவனுக்கு ஆகாரமேயில்லை. ஒரு மரத்தடியில் இராப்பொழுதைக் கழிக்க அவன் படுத்துக் கொண்டான். அவன் கண்கள் உறங்கவில்லை. அவனுக்கு எப்படித்தான் தூக்கம் வரும்? பிறகு எப்படியோ தூங்கி விட்டான். அவன் கண் விழித்துப் பார்த்த போது, கிழக்கே வெளுத்திருந்தது. பொழுது விடிந்து விட்டது.



பூபதி எழுந்து நடந்தான். நடந்து கொண்டேயிருந்தான். கல்லிலும், முள்ளிலும், கொளுத்தும் வெய்யிலிலும் அவன் நடந்து கொண்டிருந்தான். கஷ்டத்தை அப்பொழுதுதான் அவன் நன்றாக உணர்ந்தான். அவனுக்கு நல்ல புத்தி திரும்பிக் கொண்டிருந்தது.

அவனை வழியில் கண்டோரெல்லாம், ''யாரோ பைத்தியம், பாவம்'' என்று பரிதாபத்தோடு ஒரு முறை பார்த்து விட்டுப் போனார்கள். யாரும் அவனை அரசன் பூபதி என்று நினைக்கவில்லை. யாராலும் அப்படி நினைக்க முடியாது. அவனுடைய தோற்றம் தான் அப்படியிருந்ததே!

அங்கே கொஞ்ச தூரத்தில், ஒரு குடிசை தெரிந்தது. பூபதி அரசனின் மதகுருவின் குடிசைதான் அது. அதை நோக்கி அவன் கால்கள் விரைந்தன. இத்தனை நாளும், மறந்திருந்த, அக் குடிசையை அப்பொழுது தான் ஒரு புண்ணிய பூமியாகக் கருதினான் அவன்.

பூபதி மத குருவின் கால்களைப் பிடித்துக் கொண்டான். ''சுவாமி! என்னைப் பாருங்கள்! என் தோற்றத்தைப் பாருங்கள். எனக்கு ஏன் இந்தத் தண்டனை? போதும், சுவாமி, எனக்கு இந்த ஆசையும், ஆணவமும். எனக்குப் புத்தி வந்து விட்டது. இனிமேல் குடி மக்களை வருத்த மாட்டேன். என்னை மன்னியுங்கள். மன்னித்து விட்டேன் என்று சொல்லுங்கள். சுவாமி! கடவுள் என்னைத் தண்டித்து விட்டார்!'' என்று கதறினான். தாரை தாரையாகக் கண்ணீர் விட்டான்.

மதகுரு தமக்குள்ளே சிரித்துக் கொண்டார். பூபதிக்கு ஆகாரம் கொடுத்தார், அவன் பசிப் பிணியை அகற்றினார். அவன் களைப்பை நீக்கினார். பூபதிக்குப் போன உயிர் திரும்பி வந்தது போலிருந்தது.

''பூபதி, அதோ பார், உன் குதிரையும், ஆடைகளையும், அணிகளையும். யாரோ இங்கு கொண்டு வந்து போட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்'' என்றார் மத குரு.

பூபதி ஆச்சரியத்தோடு நோக்கினான். ''சுவாமி, யாரோ என்னை வஞ்சிக்க, வருத்த இங்கு கொண்டு வந்து போட்டு விட்டுப் போயிருக்கிறார்கள்'' என்று பூபதி வேட்டைக்குக் கிளம்பினது முதல் நடந்தது அனைத்தையும் அவரிடம் சொன்னான்.

''பூபதி! எழுந்திரு! கடவுள் உன்னை மன்னித்து விட்டார். கஷ்டம் என்பது எல்லாருக்கும் உண்டு. கர்வம் என்பது யாருக்கும் கூடாது. குடிமக்களின் நலத்திற்காகவே அரசனிருக்க வேண்டும். சீக்கிரமே அரண்மனைக்குப் போய்ச் சேர்'' என்று மத குரு அவனை ஆசீர்வதித்தார்.

''நல்லது, சுவாமி. நான் திருந்தி விட்டேன். புத்தி வந்து விட்டது'' என்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டு, மீண்டும் ராஜ கோலத்தோடு கிளம்பினான் பூபதி.

அந்த ஒரு நாள் சம்பவம், பூபதியை ஒரு நல்ல அரசனாக ஆக்கி விட்டது. ''பூபதியைப் போல ஒரு நல்ல ராஜா உண்டா?'' என்று ஜனங்கள் அவனைப் புகழ்ந்து கொண்டாடினார்கள்.

**ரஸிகமணி நினைவு இதழ்**

★

வரும் மார்ச்சு மாதம் ஏழாந் தேதி “கல்கி” இதழ் ரஸிகமணி டி. கே. சி. நினைவு இதழாக வெளிவருகிறது.




மன்னார்குடி நகராட்சி

## அகில இந்திய சுதேசி கைத்தொழில் பொருட்காட்சி 1954

**21-3-54 முதல் 10-4-54 முடிய**

கூட்டுறவு வீடு கட்டும் சங்க மைதானத்தில்
நடைபெறும்

★

**சங்கீதம் - நடனம் - நாடகம்**

இன்னும் இதர அநேக காட்சிகளுக்கும் ஏற்பாடாகி வருகிறது

**அனைவருக்கும் அரிய சந்தர்ப்பம்**

**ஸ்டால்களுக்கு முந்துங்கள்**

விவரங்களுக்கு நகர சபை ஆணையாளருக்கு எழுதவும்

ராஜ கோயிந்தன்
ஆணையாளர்

## இன்றைய மதிப்பில்

## ரூ.300 சிறந்தது! மர்பி

★ மாடல் டி. ஏ. 192 - ஐந்து வால்வு, ஆல்-வேவ் செட், ஏ. ஸி. மெயின்களுக்கு மட்டும்.

★ மாடல் டி. யூ. 192 - ஐந்து வால்வு, ஆல்-வேவ் செட். ஏ. ஸி. அல்லது டி. ஸி. மெயின்களுக்கு.


★ மாடல் டி. பி. 191-பாட்டரி செட்.



## ரூ.490

★ மாடல் டி. ஏ. 194 - ஐந்து வால்வு, எட்டு-பாண்ட் செட். ஏ. ஸி. மெயின்களுக்கு மட்டும்.


★ மாடல் டி. யூ. 194 - ஐந்து வால்வு, எட்டு-பாண்ட் செட் டி. ஸி, அல்லது ஏ. ஸி. மெயின்களுக்கு.



## ரூ.600

★ மாடல் டி. ஏ. 196 - ஆறு வால்வு, எட்டு-பாண்ட் செட். ஏ. ஸி. மெயின்களுக்கு மட்டும்.

★ மாடல் டி. யூ 196 - ஆறு வால்வு, எட்டு-பாண்ட் செட். டி. ஸி. அல்லது ஏ. ஸி. மெயின்களுக்கு.



# murphy radio

விநியோகஸ்தர்கள் : அடிஸன் அண்டு கம்பெனி லிட்.,
158, மௌண்ட் ரோட், மதராஸ்.

மர்பி ரேடியோ ஆப் இந்தியா லிமிடெட், பம்பாய் 13.




அந்தச் சின்னஞ் சிறு குழந்தைகளைப் பார்த்துக் கூப்பிட்டேன். குழந்தைகள் என்முன் வந்து கையைக் கட்டிக் கொண்டு நின்றனர். ஒவ்வொரு குழந்தையையும் தனித்தனியே கூப்பிட்டு "உனக்குத் தாய் தகப்பனார் இருக்கிறார்களா?" என்று கேட்டேன். எல்லாக் குழந்தைகளும் "இல்லை" என்று சொல்லுவதற்கு அறிகுறியாகப் பரிதாபமாகத் தலையை ஆட்டிக் கொண்டு நின்றன.

அந்தச் சிறு குழந்தைகள் எல்லாம் புது வேஷ்டியும் புதுச் சட்டையும் அணிந்திருந்தனர். நெற்றியில் விபூதி பூசியிருந்தனர். சிறுவர்களின் முகங்களும், கண்களும் அவர்கள் ஆதரவற்று நிற்கும் கோலத்தை எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. சொல்ல முடியாத ஒரு சோகம், விவரிக்க முடியாத ஒரு ஏக்கம் அந்தச் சிறுவர்களின் பால் வடியும் முகத்தில் காணப்பட்டன. திக்கற்ற அச் சிறுவர்களின் முகங்கள் இன்னும் என் கண் முன்னே வந்து கொண்டிருக்கின்றன. அடாடா! அந்தக் குழந்தைகளின் களங்கமற்ற முகத்தை எப்படி மறக்க முடியும்!

இந்தப் பிள்ளைகள் எல்லாம் தாய் தந்தையற்ற அனாதைப் பிள்ளைகள். எட்டுப் பிள்ளைகள் இருந்தனர். இதைப்போல் பெற்றோர்களை இழந்த திக்கற்ற பாலர்கள்; பெற்றோர்கள் இருந்தும் அவர்களை வளர்க்க முடியாமல் நடுத் தெருவில் விட்ட நாதியற்ற குழந்தைகள் தமிழ் நாட்டில் எத்தனை இருக்கின்றனவோ! அப்படித் தமிழகத்தில் திக்கற்றுத் தவிக்கும் அனாதைப் பிள்ளைகளை ஆதரித்து வளர்க்க அன்னதான சிவன் சங்கத்தார் ஒரு அரிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். "அன்னதானம் சிவன் அனாதை மாணவர் இல்லம்" என்ற பெயரில் ஒரு மாணவர் இல்லம் நடத்த முன் வந்திருக்கின்றனர். இந்த மாணவர் இல்லம் ஆரம்ப விழா பிப்ரவரி 14-ம் கும்பகோணத்துக்கு அருகாமையில் உள்ள அம்மா சத்திரத்தில் தஞ்சை ஜில்லா கலெக்டர் திரு டி. கே. பழனியப்பன் தலைமையில் நடந்தது. இந்த விழாவில்தான் மேற்படி அனாதைக் குழந்தைகளைப் பார்த்தேன்.

அன்னதானம் சிவன் மாணவர் இல்லத்தில் அனாதைக் குழந்தைகளுக்கு அன்னம் இட்டு வளர்க்கப் போகிறார்கள்; கல்வி கற்றுக் கொடுக்கப் போகிறார்கள்; சாதாரண ஏட்டுச் சுரைக்காய்க் கல்வி அல்ல. காந்தி மகான் காட்டிய வழியில் ஆதாரக் கல்வி முறைப்படி அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப் போகிறார்கள்.

** ** **

கும்பகோணம் மாயூரம் சாலையில் கும்பகோணத்திலிருந்து மூன்று மைல் தூரத்தில் பிரசித்தி பெற்ற அம்மா சத்திரம் என்ற ஊர் இருக்கிறது. அந்த ஊருக்குப் போகும் சாலையில் குடந்தையில் இருந்து எங்கள் கார் சென்று கொண்டிருந்தது. சாலையின் இரு புறமும் வரிசை வரிசையான மரங்கள்; மரங்களுக்குப் பின்னால் கண்ணுக் கெட்டிய தூரம் பசுமையான வயல்கள். வயல்களின் பச்சைப் பசேல் என்ற நெற் பயிரில் ரத்தினச் சரம் போல் செக்கச்செவேல் என்ற நெற் கதிர்கள் மின்னிக் கொண்டிருந்தன. காற்றில் அவை அசைந்து அசைந்து ஆடிய காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

தோரணங்களும் வாசமாலைகளும் கட்டிய ஒரு பெரிய சத்திரத்துக்கு எதிரில் கார் நின்றது. அந்தச் சத்திரத்தில்தான் அன்னதான சிவன் சங்கத்தார் அனாதை மாணவர் இல்லம் நடத்தப் போகிறார்கள் என்று அறிந்தேன்.

இந்தச் சத்திரம் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டியது. தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரின் தர்ம பத்தினிகளில் ஒருவரான அம்மணி பாய் என்பவர் கட்டியது. அந்த அம்மையாரின் பெயரிலேயே அம்மணி பாய் சத்திரம் என்று அச் சத்திரத்துக்குப் பெயர் வழங்கி வருகிறது. அச்சத்திரத்தினால்தான் அந்த ஊருக்கும் "அம்மா சத்திரம்" என்ற பெயர் வழங்கி வருகிறது போலும்!

சுமார் ஐந்நூறு பேர் வசதியாகத் தங்குவதற்கு வேண்டிய பெரிய கூடங்களும், தாழ்வாரங்களும், முற்றங்களும், திண்ணைகளும், இன்னும் பல சௌகரியங்களுடன் கூடிய விசாலமான கட்டிடம். கட்டிடத்துக்குள் தர்மத்தைக் காக்கும் தர்ம தேவதை கோவில் ஒன்றும் இருக்கிறது. அதற்கு எதிரில் குடி நீர் வசதியுள்ள வற்றாத கிணறு ஒன்றும் இருக்கிறது. கட்டிடத்தை ஒட்டினாற் போல் அழகிய அல்லிக்குளம். அதைச் சுற்றிலும் சுமார் எட்டு ஏக்கர் விஸ்தீரணமுள்ள பெரிய தோட்டம். சத்திரக் கட்டிடமும் அது அமைந்துள்ள இயற்கை வனப்பு மிகுந்த சூழ்நிலையையும் பார்க்கும்போது, "அடடா! நம் முன்னோர்கள் எவ்வளவு மகத்தான தர்ம உணர்ச்சி உள்ளவர்களாயிருந்திருக்க வேண்டும்!" என்று எண்ணி வியக்கத் தோன்றியது.

அம்மணிபாய் சத்திரமும் அதைச் சேர்ந்த இடங்களும் இத்தனை காலமாகத் தஞ்சை ஜில்லா போர்டாரின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. பல ஆண்டுகளாகச் சத்திரத்தில் அன்னம் இடுவது சுருங்கிக் கடைசியில் சத்திரம் காலியாகக் கேட்பாரற்றுப் போய்க் கிடந்தது. வௌவால்களும், பெருச்சாளிகளும், வழிப் போக்குப் பண்டாரங்களும் வசிக்கும் வாசஸ்தலமாக அந்த அருமையான சத்திரம் மாறி விட்டது.

தஞ்சை ஜில்லாவில் அன்னதான சிவன் பிறந்த தேப்பெருமாள்நல்லூருக்கு அருகில் அன்னதான சிவன் ஞாபகார்த்தமாக ஒரு மாணவர் இல்லம் நடத்துவதற்கு முயன்று வந்த சிவன் சங்கத்தார், தேப்பெருமாள் நல்லூருக்கு அருகில் இருக்கும் இந்தக் கட்டிடத்தைப் பார்த்தார்கள். மாணவர் இல்லம் நடத்துவதற்கு இதைவிடச் சிறந்த இடம் கண்டுபிடிக்க முடியாது என்று முடிவு செய்த



னர். ஜில்லா கலெக்டர் ஸ்ரீ பழனியப்பன் அவர்களும் ஜில்லா போர்டு விசேஷ அதிகாரி ஸ்ரீ பாஸ்கரத் தொண்டைமான் அவர்களும் அன்னதான சிவன் சங்கத்தின் கோரிக்கையை ஒப்புக் கொண்டு உதவி செய்ய முன் வந்தார்கள். மாணவர் இல்லத்துக்கு வேண்டிய பெரிய கட்டிடம்; மாணவர்கள் குளிப்பதற்கு வசதியான அல்லிக் குளம்; அவர்கள் தொழில் பயிலுவதற்கு ஏற்ற பெரிய தோட்டங்களுடன் கூடிய அருமையான இடம்.

லட்சக் கணக்கான ரூபாய்களைக் கொட்டிச் செலவழித்தாலும் நிர்மாணிக்க முடியாத இயற்கை வனப்பு நிறைந்த சூழ்நிலையில் அமைந்திருக்கும் இந்த அம்மணி பாய்ச் சத்திரத்தில்ஸ்ரீ அன்னதான சிவன் அநாதை இல்லம் துவக்க விழா பிப்ரவரி 14உ ஆரம்பமாயிற்று.

காலை பதினொரு மணிக்குத் தஞ்சை ஜில்லா கலெக்டர் ஸ்ரீ டி.கே. பழனியப்பன் அவர்கள் திருவிசநல்லூர் ஸ்ரீ பிச்சைப் பிள்ளை கோஷ்டியின் நாதசுரம் வாத்தியம் முழங்க, பொது மக்கள் ஆசிகூற, அநாதைக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு இல்லத்துக்குள் புகுந்தார். மாணவர் இல்லத்தைத் துவக்கி வைத்தார்.

முதலில் அநாதைக் குழந்தைகளை அன்போடு அழைத்துக் கொண்டு அருகில் உள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்றார். கோயிலைக் குழந்தைகளுடன் வலம் வந்தார். பிள்ளையாரின் ஆசியைப் பெற்றுத் திக்கற்ற அக் குழந்தைகளை அழைத்துக் கொண்டு இல்லத்துக்கு வந்தார்.

கலெக்டரும் குழந்தைகளும் மாணவர் இல்லத்தின் தலைவாசலுக்கு வந்ததும் குடந்தை கஸ்தூரி பா மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்மணிகள் அவர்களை அங்கேயே நிற்க வைத்துக் குழந்தைகளுக்கு ஆரத்தி எடுத்து, பொட்டிட்டு, "வலது காலைத் தூக்கி வைத்து வாருங்கள், குழந்தைகளே!" என்று அன்போடு கூறி அழைத்துச் சென்ற காட்சி மனத்தை உருக்குவதா யிருந்தது. கட்டிடத்துக்குள் சென்று "தர்ம தேவதை"யின் சன்னிதானத்தில் அவர்களை உட்கார வைத்தனர். கலெக்டர் குழந்தைகளுக்குப் பால் வழங்கினார். இல்லம் புகு விழா இனிது நடந்து முடிந்தவுடன், குழந்தைகளுக்கு எழுத்தறிவு சொல்லி வைக்கும் விசேஷ வைபவம் தொடர்ந்து ஆரம்பமாயிற்று.

திரு டி. எம். பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் "அன்பே சிவம்" என்று எழுதி "அ. ஆ." என்று எழுத்தைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தார்.

இந்த வைபவங்களுக்குப் பின்னர் தலைவர்களின் சொற்பொழிவு நிகழ்ந்தது.

1. மாணவர் இல்லக் காரியதரிசி ஸ்ரீ சேஷாத்திரி. 2. அன்னதான சிவன் காரியதரிசி ஸ்ரீ ராமநாதன் பேசுகிறார். 3. மாணவர் இல்லத்தின் தோற்றம். 4. ஸ்ரீ தொண்டைமான் எழுத்தறிவிக்கிறார். 5. பால் காய்ச்சப்படுவதைக் கலெக்டர்

சத்திரத்துக்கு எதிரில் உள்ள திறந்த வெளியில் அமைந்திருந்த பந்தலில் கும்ப கோணம், அம்மாசத்திரம் அதைச் சுற்றி யுள்ள கிராமங்களில் இருந்தெல்லாம் பல பிரமுகர்கள் திரளாக வந்து கூடியிருந் தனர். தஞ்சை ஜில்லாவின் ஒரு சிறிய ஊரில் அநாதை மாணவர் இல்லத் துவக்க விழாவுக்கு மக்கள் இப்படி வந்து கூடி னார்கள்; அதிலும் பெண்மணிகள் வெகு உற்சாகத்துடன் கலந்து கொண்டிருந் தார்கள்; அவ்வளவு பேரும் குதூகலத் துடன் இருந்தார்கள் என்றால் அது ஆச் சரியமாகத்தான் இருக்கும். நான்கூட மேற்படி வைபவத்துக்குப் போய் நேரில் பார்த்திரா விட்டால் இதை யெல்லாம் நம்புவது சற்றுக் கஷ்டம்தான்.


என்னைப் போலவே அன்னதான சிவன் சங்கக் காரியதரிசி ஸ்ரீ ராமநாதன் ஆச்சரி யக் கடலில் மூழ்கிக் கிடந்தார். விழாவுக்கு வந்தவர்களை எல்லாம் வரவேற்று அன்ன தான சிவன் சங்கம் செய்து வந்த திருப் பணிகளை விவரமாக எடுத்துக் கூறினார். அப்படி அவர் பேசும்போது அவர் முகத் தில் உற்சாகம் ததும்பியது.


தஞ்சை ஜில்லா கலெக்டர் திரு பழனி யப்பன் விழாவுக்குத் தலைமை தாங்கி அன்னதான சிவன் மாணவர் இல்லத்தை ஆரம்பித்து வைத்தார்.

தமக்குச் செய்த மாலை மரியாதைகளுக் கும், அம்மா சத்திரம் வாசிகள் அளித்த வரவேற்புப் பத்திர உபசாரத்துக்கும் நான் ஒன்றும் பெரிய சேவைகள் செய்து விட வில்லை என்ற அவை அடக்கத்துடனே ஸ்ரீ பழனியப்பன் அழகான தமிழில் நிதான மாகப் பேசினார்.

அன்னதானத்தின் அவசியத்தைப்பற்றி யும் அநாதைப் பிள்ளைகளுக்கு இல்லம் அமைத்து நடத்த வேண்டிய அவசரத் தைப் பற்றியும் சொன்னார். அப்பொழுது சில உண்மைச் சம்பவங்களை உணர்ச்சி யுடன் எடுத்துச் சொன்னார்.

தஞ்சை ஆஸ்பத்திரியில் நோயாளிகள் இருக்க இடமின்றி ஆஸ்பத்திரித் தாழ் வாரங்களிலும் இன்னும் கிடைத்த இடங் களிலும் கிடக்கிறார்களாம். அந்த வியாதி யஸ்தர்களில் பெரும்பாலோருக்கு வந் துள்ள வியாதி போதுமான சாப்பாடு இல் லாததால் ஏற்பட்ட வியாதி தானாம். அவர்கள் ஆஸ்பத்திரியில் தங்கி, மருந்தும் மூன்று வேளை ஆகாரமும் சாப்பிட்ட பிறகு குணம் அடைந்து வெளியில் போகி றார்களாம். வெளியில் சென்ற சில நாட் களில் மீண்டும் பசி, பட்டினி; சாப்பாடு கிடைப்பதில்லை. மறுபடியும் அதே நோய்; ஆஸ்பத்திரி. இதனால் பொது ஜனங்களின் பணம் வெளி நாட்டு மருந்துகளுக்கும், நோயாளிகளைக் குணப்படுத்த முடியாத









ஸ்ரீ பழனியப்பன் கவனிக்கிறார். 6. பிள்ளை யார் கோயிலில் சுவாமி தர்சனம். 7. சபையில் ஒரு தோற்றம். 8. குடந்தை கஸ்தூரிபா மாதர் சங்கத்துப் பெண்மணி கள். 9. தலைவர்களுக்கு முன்னால் நிற்ப வர்கள்தான் அநாதைக் குழந்தைகள்.

சாப்பாட்டுச் செலவுக்கும் செலவாகின்றது. இதற்கெல்லாம் காரணம் நம்முன்னோர்கள் செய்து வந்த அன்னதான தர்மத்தை நாம் செய்யாததுதான் என்று அன்னதானத்தின் அவசியத்தைப் பற்றி விவரமாகச் சொன்னார்.

அநாதைப் பிள்ளைகளைப் பற்றி அவர் கூறியது எல்லார் மனத்தையும் உருக்கியது.

அநாதைகளாக நடுத் தெருவில் நிற்கும் சின்னஞ் சிறு பிள்ளைகளை, தீய நோக்கம் உள்ள திருடர்களும், கள்ளச் சாராயம் காய்ச்சும் கயவர்களும், அபின் கொண்டு செல்லும் அயோக்கியர்களும் உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். ஒரு சிறு பையன்; எட்டு வயதுகூட நிரம்பாதவன். திருட்டுத்தனமாக அபின் எடுத்துச் செல்லுவதற்காகச் சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய பல இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டானும், அந்தக் கயவர்களின் காரியம் முடிந்தவுடன் சிறுவன் மீண்டும் அநாதையாகத் தெருவில் விடப்பட்டானும். "இப்படித் தீய வழியில் பழக்கப்பட்ட அநாதைச் சிறுவர்களை மீண்டும் நல் வழிப் படுத்துவது எளிய காரியமன்று. ஆகையால் அநாதைப் பிள்ளைகளுக்கு ஆங்காங்கு இல்லம் அமைத்து அவர்களை நல்ல முறையில் வளர்க்கா விட்டால் அது தேசத்துக்கே பெருந் தீங்கு விளைவிக்கும்!" என்று சொன்னார்.

அவருக்கு முன் பேசிய பாரிகரத் தொண்டைமான் அவர்கள் "அநாதை", என்ற சொல்லை இந்த விடுதியின் பெயரில் சேர்க்க வேண்டாம் என்றார். நாம் இத்தனை பேரும் ஆதரவுடன் இருக்கும் போது இவர்கள் எப்படி அநாதை ஆவார்கள் என்று கேட்டார். சின்னஞ் சிறு குழந்தைகளின் மனத்தில் தாங்கள் அநாதை என்ற உணர்ச்சி ஏற்படக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, இந்த நாட்டில் அநாதை மக்களே இல்லை என்ற நிலை வரவேணும் என்றார்.

அன்னதான சிவன் சங்கத் தலைவர் கல்கி ஆசிரியர் சோழ வள நாட்டில் ஒரு காலத்தில் அன்னதானம் செய்வதற்கு ஆள் கிடைக்காமல் திண்டாட வேண்டியிருந்தது என்பதைச் சிறுத் தொண்டர் கதை எடுத்துக் காட்டுகிறது என்று குறிப்பிட்டார். சென்ற வருஷம் அன்னதானம் சிவன் சங்கத்தின் ஆதரவில் கும்பகோணத்தில் பத்தாயிரம் பேருக்கு அன்னம் வழங்கினார்கள். பாக்குப் பட்டையில் சாதம் வாங்கிச் சாப்பிட்ட அந்தப் பரிதாபம் நமக்கு எதைக் காட்டுகிறது! நம் நாட்டில் அதுவும் நெல் களஞ்சியமான தஞ்சையில் அப்படிப்பட்ட காட்சியைக் காணும் போது நாட்டின் க்ஷீண நிலையைத்தான் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இந்தமாதிரி நிலை மாற வேண்டும். நாட்டின் செல்வங்கள் சிறு குழந்தைகள்தான். அவர்களுடைய நல்வாழ்வில் தான் நாட்டின் வளமான எதிர்காலம் இருக்கிறது. அவர்களை அநாதைகளாக விடவே கூடாது. இதுபோன்ற மாணவர் இல்லத்துக்குத் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள் பூரண ஆதரவு அளிக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்.

அன்னதான சிவன் சங்க மாணவர் இல்லத்தின் காரியதரிசிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ள ஸ்ரீ கே. எஸ். சேஷாத்திரி நன்றியுரை கூறினார். மாணவர்கள் "வாழிய செந்தமிழ்" பாட மாணவர் இல்லத் துவக்க விழா இனிது நடந்தது.

** ** **

அன்னதான சிவன் பிறந்தது தேப்பெருமாள் நல்லூர். அவர் உடல் மறைந்தது திருபுவனம். இந்த இரண்டு ஊர்களுக்கும் மத்தியில் உள்ள அம்மாசத்திரத்தில் அன்னதான சிவன் மாணவர் இல்லம் அமைந்திருப்பது மிகப் பொருத்தமாக இருக்கிறது. மக்களுக்கு அன்னமிடுவதற்காகவே அவர் வாழ்ந்தார். தர்மம் செய்ய நிறையப் பொருள் வேண்டுமென்ற அவசியமில்லை. மனம் மட்டும் இருந்தால் இணையற்ற தர்மம் செய்து விடலாம் என்பதை நிதர்சனமாகக் காட்டியவர். அவர் செய்த பணியை இப்பொழுது அன்னதான சிவன் சங்கக் காரியதரிசி ஸ்ரீ.ராமநாதன் செய்து வருகிறார். பொது சேவையில் ஆர்வமும், இது போன்ற சமூக நல ஸ்தாபனங்களில் அனுபவமும் உள்ள கும்பகோணம் மின்சாரப் பிரதம இன்ஜினியர் திரு கே. எஸ். சேஷாத்திரியும் சேர்ந்து மாணவர் இல்லத்தின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவருக்கு உதவி புரிய முன் வந்திருக்கிறார். இவர்களுக்குத் துணையாக உள்ள மாணவர் இல்ல நிர்வாகக் குழுவில் ஸ்ரீ டி. ஆர். வரதன் எம். எல். ஏ., குடந்தை ஜனாப் உசேன், குடந்தை கௌரவ மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ தங்கவேலு நயினார் முதலியவர்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர, சூரி கம்பெனியின் நிர்வாகி ஆடிட்டர் ஸ்ரீ சூரி அவர்கள் தோன்றாத் துணையாகவும் தோன்றும் துணையாகவும் இருந்து எல்லா விதமான உதவிகளும் அளித்து வருகிறார்.

மாணவர் இல்லத்துக்கு வேண்டிய சுமார் ஐந்நூறு ரூபாய் பெறுமானம் உள்ள பித்தளைப் பாத்திரங்களைக் குடந்தை கல்லூரி மாதர் சங்கத்தைச் சேர்ந்த பெண்மணிகள் சேகரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அத்துடன் அவர்கள் மாணவர் இல்லத் துவக்க விழாவுக்கு வந்து இல்லத்தைக் கூட்டிப் பெருக்கிக் கோலம் இட்டு, குழந்தைகளுக்குப் பால் காய்ச்சிக் கொடுத்து, அவர்களுக்கு ஆரத்தி எடுத்து ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்னைகளைப் போல் விளங்கினார்கள்.

அவர்களுக்கெல்லாம் அன்னதான சிவன் சங்கத்தார் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள்.

** ** **

அநாதைக் குழந்தைகளை முன்னிட்டு ஆரம்பிக்கப் பட்டுள்ள இந்த மாணவர் இல்லத்தில் முதலில் முப்பது அநாதைச் சிறுவர்களை எடுத்துக் கொள்ளப் போகிறார்கள். அவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சி அளிப்பதுடன், உணவு முதலிய சௌகரியங்களையும் இல்லத்திலேயே அளிப்பதற்கு உத்தேசித்திருக்கிறார்கள்.

மாணவர் இல்லத்துக்குச் சமீபமாக உள்ள உயர் நிலைப் பள்ளியில் வாசித்து வரும் பத்து ஹரிஜன மாணவர்களுக்குத் தங்குவதற்கு இடம்; இலவசச் சாப்பாடு முதலிய சௌகரியங்கள் செய்து கொடுத்து அவர்கள் படிப்பையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப் போகிறார்கள்.

சுருங்கச் சொன்னால் அன்னதான சிவன் மாணவர் இல்லம் மிகச் சிறந்த கல்வி ஸ்தாபனமாக வளர்வதற்கு வேண்டிய இடமும், அதற்கு வேண்டிய அருமையான திட்டமும் இருக்கிறது. உற்சாகமான நிர்வாகிகளும் இருக்கிறார்கள். ஆனால் இதெல்லாம் நடை பெறுவதற்கு பொருள் அல்லவா வேண்டும்!

தஞ்சை ஜில்லாவில் மிராசுதார்களுக்கும், செல்வந்தர்களுக்கும் குறைவில்லை. இது தவிர பெரிய மடாலயங்களும், செல்வம் படைத்த தர்ம ஸ்தாபனங்களும் இருக்கின்றன. இத்தகைய அருமையான ஸ்தாபனத்துக்கு அவர்களுடைய பூரண ஆதரவும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன்



# உற்சாகமூட்டும் இடங்களுக்கு சைக்கிள் சவாரி

நாட்டுப்புறங்களிலோ, அன்றி அருகாமையிலுள்ள இடங்களுக்கோ, சவாரி செய்தல், நெருக்கடியிருந்து அலுத்துப் போகும் நகர வாழ்க்கையிலிருந்து பெறக் கூடிய தென்பளிக்கும் ஒரு விடுதலையாகும். அதுவும் மிகவும் நம்பகமானதும் தொல்லையின்றி உழைக்கக் கூடியதும் சௌகரியமானதுமான, "ஹெர்க்குலிஸ்-இந்தியா"வைப் போன்ற ஒரு நல்ல சைக்கிள் உங்களுக்கு சொந்தமாகவே இருந்தால் அந்தகைய சவாரி மிகவும் சந்துஷ்டிகரமாயிருக்கும் என்பதில் சந்தேகம் உண்டா?

சொந்தமாகவே உங்களுக்கு ஒரு சவாரி வண்டி வைத்துக்கொள்ளுங்கள்.



ஒரு

## ஹெர்க்குலிஸ்-இந்தியா

வாங்குங்கள்.

இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:

**டி. ஐ. சைக்கிள்ஸ் ஆப் இந்தியா லிமிடெட்., மதராஸ்.**

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.




Importers & Distributors for Ceylon :
LEWIS BROWN & CO. LTD., POST BOX 85, COLOMBO



# உடைந்த முத்துக்கள்

ரங்கா

அந்தமாதிரியான புயலும் மழையும் அந்த ஊரில் அது வரையில் கண்டதில்லை என்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அதற்கு முன் இரவு இடியும் மின்னலும். அதைத் தொடர்ந்து மரம் செடிகள் விழும்படி, குடிசைகள் அதிரும்படியான காற்றும் பலத்த மழையும் அடித்து இயற்கையன்னை பயங்கரமாகக் காட்சியளித்தாள்.

அந்தப் பெரிய சாலையின் இரு பக்கங்களிலும் ஜனங்கள் கூடிக் கூடி நின்று பேசிக் கொண்டிருந்தார்கள். ஏதாகிலும் ஓர் அபூர்வமான புதிய சம்பவம் ஒன்று நடந்தால் ஜனங்கள் கூடி நின்று பேசுவது இயல்புதானே? சாலையின் இருபுறங்களிலும் பல மரங்கள்—மாமரங்கள், ஆலமரங்கள் நிற்கத்தான் செய்கின்றன. இவைகளில் ஒன்று விதியின் போக்குக்கு உதவி செய்வதற்காகப் பிரம்மாண்டமாக வளர்ந்து நின்றதோ?

போலீஸார் வந்து இங்கு நடந்த கார் விபத்தைப் பற்றிப் புலன் விசாரித்து எழுதிச் சென்றனர். பத்திரிகை நிருபர்கள் பலர் அதைத் தங்கள் நாட் குறிப்பில் குறித்துக் கொள்ளும் காட்சிகள் வேறு. மாலை வேளையானதும் ஜனத் திரள் சிறிது சிறிதாகக் கலைந்தது. இதெல்லாம் இந்த உலகத்தின் விசித்திரமான போக்கு. அதோ வரும் சோகமே உருவான, துயரத்தின் சின்னமான பெண்ணைப் பார்த்ததும் இதைத் தவிர வேறு எதைத்தான் சொல்லுவது? இவள் யார்? இவளுக்கு மூளை கலங்கி விட்டதென்று ஊர்க்காரர்கள் பேசிக் கொண்டனர். ஆகா! இவளா பைத்தியம்? ஆனால் இவள் முகத்தைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே! இவள் கண்களிலே ஆழங் காண முடியாத சோகம்—அசோக வனத்திலே சீதா தேவியின் துக்கத்தையும், துயிலிலிருந்து எழுந்த தமயந்தி தன தருகில் நளனைக் காணாமல் பரிதவித்ததையும் ஞாபகப் படுத்துகிறதே! இவர்களது துக்கத்துக்கும் மேற்பட்டது, அளவுக் கடங்காதது, எல்லையென்பதே இல்லாதது அவள் மன வேதனை. இதை யாராவது அறிவார்களா?

கொடி போன்ற அவள் உடம்பு ஏனோ நடுங்கியது. ஒரு மரத்தடியில் உட்கார்ந்தாள். அவள் வாய் ஏதேதோ பிதற்றியது.

பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டுக்குத் திரும்பிச் செல்லும் பையன்களில் சிலர் பேசிக் கொண்டார்கள்:

“அதோ உட்கார்ந்து கொண்ருக்கும் பெண் பைத்தியமாம்!” என்றான் ஒரு பையன்.

கீழே கிடந்த கற்களில் ஒன்றை எடுத்துக் கொண்டு “இதை அவள் மேல் வீசி எறிந்தால் என்னடா?” என்றான் இரண்டாவது பையன். “ஊம்” என்றான் முதல் பையன். சட்டென்று “ஐயோ, பாவம்! வேண்டாமடா!” என்றான். மற்றப் பையனும் அதை ஆமோதித்துக் கல்லைக் கீழே போட்டு விட்டான். பையன்கள் அவளை அநுதாபத்துடன் பார்த்தவாறு சென்றனர்.

* * *

“பங்கஜம், நீயே இன்று பாலை எடுத்துக் கொண்டு போ. எனக்குத் தலை கனமாக ஜுரம் வந்தாற் போலிருக்கிறது!” என்ற தாயின் வார்த்தைகளைக் கேட்டுப் பால் பாத்திரத்துடன் கிளம்பினாள் பங்கஜம். நடந்து செல்லும் போதே அவள் மனமானது நடந்த சம்பவங்களையும், நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் பற்றிச் சிந்தித்தவாறு இருந்தது. இரண்டு மாதங்கள் முன்பு வரையில் அவள் பால் வியாபாரம் செய்து வரும் தன் தாயின் அன்பைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவள். பறந்து திரிந்து வரும் பட்டுப் பூச்சி போலக் கவலை என்பதே அறியாத குழந்தையின் தூய்மையான உள்ளம் அவளுடையது. துக்கம், கவலை என்பதை அறிய விடாமல் அவளைக் கண்போலக் காத்து வந்தாள் தாய். இரண்டு மாடுகள் வைத்துக் கொண்டு கண்ணியமாகப் பால் வியாபாரம் செய்து அவர்கள் இருவரும் பிழைத்து வந்தார்கள். பங்கஜம் பதினெட்டு வயதுப் பெண். ஒரு பெண்ணுக்குப் போதுமான அறிவும் படிப்பும் அவளுக்கு உண்டு.

பங்கஜத்தின் தாயார் பால் விற்று வந்த அதே பணக்கார வக்கீல் வீட்டில், வாசு கார் டிரைவர் வேலையில் அமர்ந்தான். அவனைப் பார்த்துப் பேசிப் பழகினதில் அவனிடம் தன் வயிற்றில் பிறந்த பிள்ளை போல ஒரு பாசம் அவளுக்கு உண்டாயிற்று. அவன்



அநாதைபோலத் தனிமையில் உணவு செய்து சாப்பிடுவதைக் கண்டு அவள் தன்னாலான உதவி செய்வதாக அவனிடம் கூறினாள். "'அகதிக்குத் துணை தெய்வம்' என்பார்கள். தெய்வமே இந்த தாயைத் தனக்கு உதவியாக அனுப்பினாரோ" என்று எண்ணினான் வாசு.

திடீரென்று ஒரு நாள் தன் அம்மா புது மனிதர் ஒருவரை வீட்டுக்கு அழைத்து வருவதைப் பங்கஜம் கண்டாள். வெகு சீக்கிரத்தில் அவன் மிகவும் பழகி அக்குடும்பத்தில் ஒருவனாக ஆகி விட்டான். கரை காணாத அவர்களது அன்பு என்னும் சங்கிலி அவனைப் பிணைத்ததா, அல்லது அவனுடைய தாய்மையான உண்மை அன்பு அவர்களை அவனிடம் பிணைத்ததா என்று கூறுவது முடியாத காரியம். பங்கஜத்தின் களையான முகம், அடக்கமான சிரிப்பு, கள்ளமற்ற அவளது கண்கள், ஆகியவை வாசுவை அவளிடம் அடிமை கொள்ளச் செய்தன என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

காரைப் பளபள வென்று துடைத்துக் கொண்டிருந்த வாசுவின் முகத்தில் வியர்வைத் துளிகள் முத்துப்போல் பிரகாசித்தன.

'வாசு!' என்ற இனிமையான குரலைக் கேட்டதும் பரவசப் பட்டவனாகப் பங்கஜத்தைத் திரும்பிப் பார்த்தான். அவள் கயல் கண்களைக் கண்டதும் தன்னுடைய தேகக் கஷ்டங்கள் யாவும் காற்றிலே பறந்து செல்வதுபோல உணர்ந்தான் அவன்.

"பங்கஜா, நீயே இன்று பால் எடுத்துக் கொண்டு வந்தாயா?" என்று கேட்டவாறே வாசு அவள் அருகில் வந்து, "ஆமாம், இன்னும் எத்தனை நாட்கள் என்னை இப்படிப் பெயரைச் சொல்லி அழைக்கப் போகிறாய்? இது மரியாதைக் குறைவு, தெரியுமா?" என்று கூறிப் பொய்க் கோபத்தோடு கண்ணைச் சிமிட்டினான் வாசு.

"ஆமாம், நான் அவ்வாறு சொல்வது தப்புத்தான். அம்மா உங்கள் பெயரைச் சொல்லிச் சொல்லி எனக்கும் அப்படியே பழகி விட்டது!" என்றாள் பங்கஜம். அவள் முகம் நாணத்தினால் குப்பென்று சிவந்தது.

"என்ன குறும்புத்தனம்" என்று மனசுக்குள்ளே சிரித்துக் கொண்டான் வாசு.

எதையோ சட்டென்று நினைத்துக் கொண்டவன் போல, "வாசு! அம்மாவுக்கு உடம்பே சரியில்லை!" என்றாள் பங்கஜம். அவள் குரலில் சற்றுக் கவலை இருந்தது. உடனே வாசுவும் அவளோடு கிளம்பினான்.

பங்கஜத்தின் தாய் சில நாள் பழக்கத்திலேயே வாசு கண்ணியமான நல்ல பையன் என்று தெரிந்து கொண்டாள். மிகவும் மென்மையான மனம் அவனுடையது. இவனைக் கடவுளே தன் பெண்ணுக்கு ஆதரவாக அனுப்பிய கணவன் என்று சந்தோஷங் கொண்டாள். என்றைக்கும் தான் இருப்பது சாசுவதமா? தன் செல்வப் பெண்ணை

வைத்துப் பராமரிக்க. அவள் வாழ்வின் துணை—கஷ்டங்களின் ஊன்று கோலாக வாசுவை அவள் மனப்பூர்வமாக நம்பினாள். அருகில் வசித்து வந்த தன் தமக்கையிடமும் மற்றும் உறவினர்களிடமும் வாசுவுக்கும் தன் மகளுக்கும் விவாகம் செய்து வைக்கப் போகும் செய்தியைச் சொன்னாள்.

அன்று அவள் தனக்கு நல்ல காய்ச்சல் வந்து விட்டதைத் தெரிந்து கொண்டாள். வாசு வாங்கி வந்த மருந்தைச் சாப்பிடவும் இல்லை. அவன் மருந்தை ஊற்றி அன்புடன் அவளுக்குத் தருவதற்குப் போனான்.

''வாசு! எனக்குக் காய்ச்சல் நாழிகைக்கு நாழிகை அதிகமாகிறது. ஆயுள் இருந்தால் தானே பிழைத்துக் கொள்கிறேன்! இந்த மருந்தினால், போகிற உயிரைக் காப்பாற்றி விட முடியுமா? ஆனாலும் நீ தருவதனால் உன் மனம் நோகக் கூடாது என்பதற்காகச் சாப்பிடுகிறேன்'' என்றாள்.



அடுத்த நாள் வாசுவை அருகில் அழைத்தாள். ''வாசு, நான் சொல்ல வேண்டும் என்கிறதில்லை. பங்கஜம் உன் சொத்து. அவளைப் பார்த்துக் கொள். உங்கள் இருவருக்கும் மணமாகி நான் பார்க்கவில்லை: ஆனாலும் நான் மன நிம்மதியோடு போகிறேன். கடவுள் என்னை அழைக்கிறார்'' என்றாள்.

''அம்மா, நீங்கள் இப்படியெல்லாம் பேசக் கூடாது. உங்கள் உடம்பு குணமாகி விடும். நீங்கள் பேரன் பேத்தி யெடுத்துக் கொஞ்சுவீர்கள்.'' இதைச் சொல்லும் போது வாசுவின் பேச்சு துக்கத்தால் தடைப் பட்டு விட்டது.

பங்கஜம் அப்போது அங்கு வந்தாள். பேச்சு மூச்சின்றிப் படுத்திருந்த தாயைப் பார்த்து. ''வாசு, அம்மாவுக்கு என்ன?'' என்று அலறினாள். அடுத்தது அவன் அவளை ஆறுதல் மொழி கூறித் தேற்றும் கட்டமாக இருந்தது.

ஒரு வாரம் சென்றது. ''இன்னும் சில நாள் அம்மா இருந்திருக்கக் கூடாதா?'' என்று துக்கம் தாங்காமல் கேட்டாள் பங்கஜம்.

''பங்கஜம். அம்மா தெய்வமாகி நாம் வாழ்க்கை நடத்துவதைப் பார்த்துக் கொண்டிருப்பார். நான் உன்னைப் பார்த்துக் கொள்வேன் என்ற நம்பிக்கை அவருக்கு. நாம் சந்தோஷமாக இருந்தால்தான் திருப்திப் படுவார். நீ மனம் சஞ்சலப் பட்டால் எனக்குப் பொறுக்குமா? என் கண்ணல்லவா நீ— இனிமேல் அழமாட்டாயே?'' வாசுவின் குரலில் உண்மையான வாஞ்சையும் அன்பும் நிரம்பி யிருந்தது.

பங்கஜம் மன நிம்மதி யடைந்தவளாக அவனைப் பார்த்துப் புன்னகை செய்தாள். அவள் எழுந்து சென்றதும் வாசுவுக்கு அன்று நடந்த ஒரு சம்பவம் நினைவு வந்தது.

பங்கஜம் அன்றும் வழக்கம் போலப் பால் எடுத்து வந்திருந்தாள். வாசு இருக்குமிடம் வந்து அவனிடம் சற்று நேரம்பேசிக் கொண்டிருந்தாள். பிறகு சுற்றுமுற்றும் பார்த்து விட்டு ''வாசு, அவர்கள் வீட்டுக் குழந்தைக்கு இன்று பிறந்த தினமாம். தித்திப்பு பட்சணம் தந்தார்கள். உங்களுக்கென்று கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடுகிறீர்களா?'' என்றாள். ஒரு ஜாங்கிரி, ஒரு மைசூர்ப் பாகுத் துண்டு—வாசு அவள் கையிலிருந்து வாங்கிக் கொண்டான். அதைச் சாப்பிடும் போது, 'ஆகா! இதைக் கையிலே எனக்காக மூடி வைத்துக் கொண்டு வந்திருக்கிறாள். அதன் இனிப்போடு அவளது அளவு கடந்த அன்பும் சேர்ந்திருக்கிறதே!' ஆகையால் அது மேலும் இனிக்கிறதாக அவனுக்குத் தோன்றியது. ருசியுடன் கடித்துத் தின்று கொண்டிருந்த அவன் கையில் சிறிதளவு மைசூர்ப் பாகு மீதி யிருந்தது. சட்டென்று ஞாபகம் வந்தவனாக ''பங்கஜா, நீ சாப்பிட்டாயோ?'' என்று கேட்டான் வாசு.

''இல்லையே!'' என்று சொல்லிக் கொண்டே அவன் கையிலிருந்த சிறு துண்டை வாங்கித் தன் வாயில் போட்டுக் கொண்டாள் பங்கஜம். பங்கஜத்துக்குத் தன்னிட மிருந்த நட்பை அறிந்த வாசு அப்போது சுவர்க்க சுகத்தை அனுபவித்தான் என்றே சொல்ல வேண்டும். பங்கஜத்தை இனம் தெரியாத வெட்கம் ஒன்று சூழ்ந்து கொள்ளவே அவன் அங்கு நிற்காமல் வேகமாக வீடு திரும்பினான். அவன் மனம் அலைபாய்ந்து இன்ப உணர்ச்சிப் பெருக்கில் வசப்பட்டது. வாசுவின் எச்சிலைச் சாப்பிட்டதில் அவனை அவளுக்குச் சொந்தமானவன் என்று எண்ணிவிட்டாளா? புதியதோர் ஆனந்தம் அவள் இருதயத்தில் நிரம்பி வழிந்தது.

வாசு எண்ணமிட்டான். ''இந்தப் பெண் தன்னிடம் ஏன் இப்படி உயிரை வைத்திருக்கிறாள்? இதற்கு நான் தகுதியா......! என்ன தான் கஷ்டம் நேரிட்டாலும் தன்னால் இயன்ற மட்டும் வாழ்க்கையில் அவளைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

இதை நினைத்துக் கொண்டபோது தன் எண்ணம் நிறைவேறுமா—என்ற அச்சம் ஏனோ அவனுக்கு ஏற்பட்டது. அவன் நெஞ்சின் ஓரத்திலே அந்தப் பாரம் அழுத்தியது. இந்த வேதனை அவன் உடம்பையே நடுக்கமுறச் செய்தது. "தெய்வமே, என்னைச் சோதிக்காதே. என் பங்கஜாவை எனக்குத் தீர்க்காயுளுடன் கொடுத்து விடு" என்று வேண்டிக் கொண்டான்.

பங்கஜம் முகம் கழுவி, அழகாகத் திலகம் இட்டுக் கொண்டு அவனருகில் வந்து உட்கார்ந்து சந்தோஷமாக வார்த்தையாடிக் கொண்டிருந்தாள்.

"பங்கஜா, நான் என் பெயரை மாற்றிக் கொள்ளலாமா என்று 'உத்தேசிக்கிறேன்.'"

அவள் அவனைப் பார்த்த பார்வையில் கேள்விக் குறி தோன்றியது.

"'சூரியனைக் கண்ட தாமரை மாதிரி' என்று நீ எதிலாவது படித்திருப்பாய். என் வருகையைக் கண்டால் உன் முகம் எப்பொழுதும் அப்படி மலருகிறது எனக்கே தெரிகிறது. உன் பெயரோ தாமரைப் புஷ்பத்தின் பெயர். நானும் பாஸ்கரன் அல்லது சூரியன் என்று வைத்துக் கொண்டால் பொருத்தமாக இருக்கும், அல்லவா?"

பங்கஜமும் வெறுமனே சிரித்தாள்.

பிறகு, "உங்கள் உடம்பு வாடி இளைத்திருக்கிறது. எனக்குக் கவலையாக இருக்கிறது. வேலை ரொம்பக் கஷ்டமாக இருக்கிறதா?" என்று வினவினாள்.

"இப்போதெல்லாம் வேலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. சற்று கஷ்டமாகவும் தான் இருக்கிறது. என் உடம்பு சீக்கிரத்தில் தேறி விடும். நீ சந்தோஷமாக இரு பங்கஜம். நீ இதற்காகக் கவலைப்படுவதா? வாழ்க்கையில் இதற்கெல்லாம் கலங்கி விடலாமா? ரோஜாப்பூவைப் பறிக்க வேண்டும் என்றால், முட்கள் இருக்கின்றனவே என்று பயந்தால் முடியுமா? ரோஜாப்பூவாகிய உன்னையே நான் பறித்துக்கொண்டு விட்டேனே!"

"போதுமே உங்கள் பரிகாசம்! கொஞ்ச நேரத்துக்கு முன் தாமரைப்பூ என்றீர்கள், இப்போ ரோஜாப் பூவாம்!" என்று சிரித்தவாறு கூறினாள் பங்கஜம்.

"அதிருக்கட்டும் பங்கஜம், வக்கீல் ஐயர் வீட்டுக் குழந்தைக்கு இரண்டு நாட்களாகவே உடம்பு சரியில்லை. இன்று எப்படி இருக்கிறதோ? ஒரு வேளை டாக்டர் வீடு எங்காவது போக வேண்டி யிருக்கும். நான் வருவதற்கு நாழிகையானால் கவலை கொள்ளாதே. நான் போய் வரட்டுமா?"

சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டே பங்கஜத்தினிடம் விடை பெற்றுக் கொண்டான். நாலடி எடுத்து வைத்தவன் திரும்பவும் பங்கஜத்திடம் வந்தான்.

"பங்கஜா, உன்னை விட்டுப் போவதற்கு ஏனோ எனக்கு மனம் வரவில்லையே!"

"நீங்கள் ஏன் இப்படி அசடாக ஆகி விட்டீர்களோ? போய் வாருங்கள்" என்று அன்போடு கடிந்து கொண்டாள் அவள். அவன் மேற்கொண்டு நடந்தான். மனத்தில் ஏதோ சிறு வேதனை—பங்கஜத்தைத் தான் மறந்து விட்டு எங்கோ செல்வது போலத் தோன்றியது. "சே, இது என்ன பிரமை" என்று மனசைத் திடப்படுத்திக் கொண்டு தான் வேலை செய்யும் வீட்டை அடைந்தான்.

அவ்வீட்டுக் குழந்தைக்கு உடம்பு சற்றும் குணம் காணப்படாமல் இருந்தது. டாக்டர் ஒருவர் வந்து குழந்தையைப் பார்த்து, ஊசி போட்டு மருந்து கொடுத்துவிட்டுக் கிளம்பிக் கொண்டிருந்தார். ஓடி விளையாடிக் கொண்டிருந்த அக் குழந்தை ஒன்றுமில்லாது எழுந்திருக்க வேண்டுமே என்று வாசு கவலைப்பட்டான். டாக்டரிடம் சென்று "குழந்தைக்குப் பயம் ஒன்றுமில்லையே, டாக்டர்?" என்றான்.

"பயம் என்று சொல்வதற்கில்லை. எதற்கும் இன்று இரவு தாண்டவேண்டும். நாளைக் காலை என்னிடம் வந்து குழந்தையின் தேக நிலையைப் பற்றித் தெரியப்படுத்து" என்று சொல்லிவிட்டுப் போனார்.

இரவு எட்டு மணி நெருங்கிக் கொண்டிருந்தது. ஜுரமாகப் படுத்திருந்த குழந்தையருகில் அருமைப் பெற்றோர்கள் உணவு கூட உட்கொள்ளாமல் கவலையுடன் மௌனமாக உட்கார்ந்திருந்தனர். அந்த அறையின் ஜன்னலருகே வாசு வந்து நின்றான்.



"நல்ல சந்தோஷ சமாசாரம் கேள்விப் பட்டேன். நீங்கள் வருஷக் கணக்காக வீட்டு வாடகை கொடுக்காததைக் கண்டு வீட்டின் சொந்தக்காரர் வீட்டை உங்களுக்கே கொடுத்து விட்டாராமே? மகிழ்ச்சிதானே?"

"இப்பொழுது வீட்டு வரி, கார்ப்பொரேஷன் வரி, தண்ணீர் வரியெல்லாம் நானல்லவா கட்டித் தொலைக்க வேண்டியிருக்கிறது!"

"இரவு ஒரு முறை டாக்டரை வரச் சொல்லாமற் போனேனே!" என்றார் குழந்தையின் தந்தை.

"டாக்டர் வெறுமனே வந்து என்ன செய்யப் போகிறார்? பகவான் நம்மைச் சோதிக்க மாட்டார். அவரிடம் விட்டு விடுங்கள். கவலைப்படாமல் இருங்கள்" என்று மனைவி தைரியம் சொன்னாள். அவர்கள் இருந்தது சிறிய ஊர். டாக்டர் வேண்டுமென்றால் நான்கு மைல்கள் அப்பாலிருந்த நகரத்துக்குச் செல்ல வேண்டும்.

"டாக்டர் இப்பொழுது வந்து மற்றொரு ஊசி போட்டால் குழந்தைக்கு அபாயம் ஒரு வேளை இருந்தால் நீங்கலாமல்லவா?" என்று எண்ணினான் வாசு.

வீட்டு வாசலில் நின்ற எஜமானனின் காரியதரிசியிடம் தான் டாக்டர் வீடு செல்வதாகச் சொல்லி விட்டுக் காரை வேகமாக ஓட்டிக் கொண்டு சென்றான் வாசு.

டாக்டர் அரை மணியில் தானே தனது காரில் குழந்தையைப் பார்க்க வருவதாகக் கூறினார். அவரிடம் வாக்குறுதி பெற்றுக் கொண்டு அவன் கிளம்பினான்.

அவன் மனசில் சில நாட்களாகவே ஒரு சிறு ஆசை. பங்கஜத்தின் அழகான கழுத்துக்கு ஒரு மாலை பார்த்து வைத்திருந்தான் — அதை வாங்க வேண்டுமென்ற எண்ணம் எழுந்தது. அருகிலிருந்த கடைத்தெருவுக்குக் காரைத் திருப்பினான். சாதாரணப் போலி முத்துக்களால் செய்த மாலைதான் அது. விலை ஐந்து ரூபாய்தான். வாசு அதை விலை கொடுத்து வாங்கிப் பாக்கெட்டில் போட்டுக் கொண்டான். பிறகு காரில் ஏறிக் கொண்டு ஊரைப் பார்த்து விடலானான்.

பங்கஜத்தின் உருவம் அவன் இருதயத்தில் அந்த மாலையை அணிந்து முறுவலணித்தவளாகத் தோன்றிற்று. தாயைப் பிரிந்து துயரத்திலிருக்கும் அவள் மனம் இந்த மாலையைக் கண்டதும் குதூகலிக்கும் அல்லவா? இயற்கையான அழகுடையவள் அவள் பங்கஜா. அவளுக்கு நகையொன்றும் தேவையில்லை. ஆனாலும் அவள் அழகை இது பன்மடங்காக எடுத்துக் காட்டும். 'அதைப் பார்த்து அவள் பூரிப்பாள்!

அவன் பங்கஜத்தை இனி காணவே போவதில்லை, அவன் ஆசைகள் யாவும் மண்ணோடு மண்ணாகிப் போகப் போகின்றன என்பதை அவன் அறிந்தானா? அவன் கைகள் படபடத்தன. அவன் சக்தியின் சுவாதீனத்தில் அவை இல்லாமற் போகவே கார் பெரிய மரத்தின் மேல் மோதியது. இந்த உலகத்தைப் பார்த்த அவன் மாயக் கண்கள் முன்னால் கடைசி முறையாக அவன் அருமைக் காதலி தோன்றினாள். பிறகு மீளாத நித்திரையி லாழ்ந்தான் வாசு.

அவன் பையிலிருந்த மாலையின் முத்துக்கள் சிதறி உடைந்திருந்தன. போர்க்களத்தில்



வீர சொர்க்கம் அடைந்த போர் வீரனை நினைவுறுத்தியது, அப்பால் தள்ளப்பட்டிருந்த அவன் அழகான சரீரம். அந்த மூத்துக்கள் உடைந்தனவா? இல்லை, விதியின் சதியைப் பார்த்துக் கோரச் சிரிப்பு சிரித்தனவா?

ஐயோ, விதியே! இந்தப் படுபாதகச் செயலால் உனக்குக் கிடைத்த லாபம்தான் என்ன? அவன் உயிரையா எடுத்துக் கொண்டாய்? களங்கமில்லாத அன்புக்கு நடுவே குறுக்கிட்டு இவனைப் பறிக்கும் உண்மையை நீ எங்கிருந்து பெற்றாய்? இந்த அநியாயச் செயலைச் செய்து விட்டு நீயே பரிதவித்துப் பச்சாதாபப் படுகிறாயா?

பங்கஜம் இந்தத் துயரைத் தாங்க மாட்டாள் என்பதை பகவான் அறிவார் போலும்! அதற்கான பரிகாரத்தைச் செய்வது போல அவர் அவள் சித்தத்தைச் சுவாதீனமே யில்லாமல் செய்தாரோ?

எந்த மரத்தின் மேல் கார் மோதியதோ, அதே மரத்தின் கீழே அவன் பெயரையும் அவன் அவளுடன் பேசிய அன்பு மொழிகளையும் சொல்லியவாறே அதோ உட்கார்ந்திருக்கிறாள்!

வாசுவின் ஆவியும் அங்கேயேதானே சுற்றிக் கொண்டிருக்கும்? அவன் மனத்துக்கு உகந்த பங்கஜத்தின் மேல் கல் பட்டால் அவன் பொறுப்பானா? பள்ளிக்கூடப் பையன்கள் மனத்தில் புகுந்து அவர்கள் அறிவை மாற்றி இரங்கும்படி செய்ததும் அவன் செயலாகத் தானிருக்க வேண்டும்!

# படித்துப் பாருங்கள்!

## இறைவனின் உறைவிடங்கள்

நம் பாரத நாட்டின் பழம் பெரும் பண்பாட்டின் உறைவிடங்களாக விளங்குபவை தேவாலயங்களே. ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பாரத பூமியில் ஊறி, வளர்ந்து, தழைத்து வரும் ஆஸ்திகம் என்னும் அருஞ் செல்வத்தின் உறைவிடங்களும் ஆலயங்களே. தெய்விக மகிமை வாய்ந்த மேற்படி தேவாலயங்களுக்குச் சென்று தரிசிக்கப் பலரும் விரும்புவது இயல்பு. ஆனால் அத்தகைய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை போகத் துவங்குவதற்கு முன்பு மேற்படி ஸ்தல வரலாறுகளைப் பற்றி அறிந்து கொள்ள விழைவதும் இயல்பே.

அங்ஙனம் விழைவோர்க்கு இந்நூல் பெரிதும் உபயோகமா யிருக்கும். இந்நூலாசிரியர் தென்னாட்டிலுள்ள ஏறக்குறைய இருநூறு திவ்ய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து அவ்வத்தலங்களின் விசேஷங்களையும், ஆலயம், மூர்த்தி இவற்றின் நிழல் படங்களையும் சேர்த்துக் கவர்ச்சியிருந்த ஒரு நூலாக வெளியிட்டிருக்கிறார். நான்கு ஆண்டுகள் அவர் பக்தி சிரத்தையோடு ஸ்தல யாத்திரை செய்ததன் பலனாக எழுந்தது இந்நூல்.

மேற்படி திவ்ய தேசங்களுக்குச் செல்லும் ரயில் மார்க்கங்கள், பஸ் மார்க்கங்கள், கட்டண விவரங்கள், யாத்திரை செய்வோர் முக்கியமாகக் கவனிக்க வேண்டியவை ஆகிய பல உபயோகமான விஷயங்களுடன் இந்நூல் நல்ல முறையில் உருப்பெற்றிருக்கிறது. புத்தகத்தின் மேலட்டை கண்ணைக் கவரும் வனப்புடன் திகழ்கிறது.

எழுதி வெளியிட்டவர்: காளத்தி – நடேச முதலியார்; 107, டி. பி. கோயில் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–5; விலை: ரூ. 2—8—0.

## இலக்கியக் கலை

எந்த விஷயமும் ஆராய்ச்சியின் காரணமாகத் தான் வளமுற்று வளருகிறது; முக்கியமாக இலக்கியக் கலை பல பேரறிஞர்களின் ஆராய்ச்சியின் பயனாக உரம்பெற்று உயிரும் பெற்றிருக்கிறது.

இறைவன் படைப்பில் காண முடியாத பல அரிய கற்பனைகளைக் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் வடித்தெடுத்து வழங்கி யிருக்கிறார்கள். அவை இலக்கியங்களாக முகிழ்த்து அமரத் தன்மை பெற்று விளங்குகின்றன. சிற்பம், சங்கீதம், நடனம் முதலிய எல்லாக் கலைகளுக்கும் இலக்கியம் உறைவிடமாக நிற்கிறது.

அத்தகைய தமிழ் இலக்கியக் கலையைப் பற்றி இந் நூலாசிரியர் ஒரு விரிவான ஆராய்ச்சியைச் செய்திருக்கிறார்.

இலக்கியமும் மரபுகளும், வாழும் இலக்கியம், கவிதைக் கலை, கவிதையும் கற்பனையும், கவிதையும் மக்கட் பண்பும் என்று பல பிரிவுகளாகப் பிரித்து பல பயன்படு பொருள்களை இந் நூல் அழகாக விளக்குகிறது.

"கற்றுத் தீர வேண்டும் என்ற கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு, ஒருவரும் இலக்கியத்தைக் கற்பதில்லை. பின்னர் எக்காரணத்தால் இலக்கியத்தை மக்கள் விரும்புகின்றனர்! இலக்கியம் ஆழ்ந்து அகன்று உள்ளதும், என்றும் நிலைபெறுவதுமான மனிதப் பண்புடன் தொடர்புடையதாதலின் மனிதனால் என்றும் விரும்பப்படுகிறது. இலக்கியம், வாழ்க்கையில் மனிதர்கள் கண்ட ஆழ்ந்த அநுபவத்தையும் உண்மைகளையும் வெளியிடுவதாகும்... வாழ்ந்து காட்டும் வாழ்க்கையைச் சொற்களாற் கூறுவதே இலக்கியம்."

இம்மாதிரி இந்நூலில் பல இடங்களில் உண்மை இலக்கியத்தின் பல கூறுகளையும் பற்றித் தெள்ளிய விளக்கங்கள் காணப்படுகின்றன.

எழுதியவர்: அ. ச. ஞானசம்பந்தன் எம். ஏ. பிரசுரம்; திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். லிமிடெட், 1/140, பிராட்வே, சென்னை-1; விலை; ரூ. 4-0-0.

## ஸ்ரீ ராமகிருஷ்ண உபநிஷதம்

வேதங்களின் சாராம்சமாக விளங்குவது உபநிஷதம். அவ்வுபநிஷதக் கருத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பவை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள். அம் மகான் தம் சீடர்களுக்குச் சொன்ன நல்லுரைகளை அடிப்படையாகக் கொண்டு ராஜாஜி அவர்கள் விரிவாக விளக்கங் கொடுத்து எழுதிய கட்டுரைகள் "கல்கி"யில் தொடர்ச்சியாக வெளிவந்த காலத்தில் நேயர்கள் பேரார்வத்துடன் படித்து வந்தார்கள். இக் கட்டுரைகளைத் தொகுத்து ஸ்ரீராமகிருஷ்ண மடத்தார் புத்தகமாக வெளியிட்டார்கள். இந் நூல் தமிழ் மக்கள் உள்ளத்தை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறது என்பதற்கு, இவ்வளவு விரைவில் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருப்பதே தக்க சான்றாகும்.

கிடைக்கும் இடம்: ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், சென்னை 4; விலை: ரூ. 1—4—0.


மகிழ்ச்சி
அளிக்கும்
உணவு
துஷாரில்
சமைத்தது
Tushar
10 lbs
TUNGABHADRA INDUSTRIES LTD.
KURNOOL
துஷார
வனஸ்பதி
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிட்.,
கர்னூல், தென் இந்தியா

# வழக்கமாக 2-நிமிஷம் பிரஷால் தேய்த்தால்

# கால்கேட் டூத் பவுடர்

## மூன்று நன்மைகளையும் அளிக்கிறது!

✓ வாயில் நறுமணம்!

✓ ஒளிவீசும் பற்கள்!

✓ சொத்தை குறையும்!




வாய்க்குப் பாதுகாப்பும், சுத்தமான ஒளிப் பற்களும் பெற, பல் டாக்டர் அங்கீகரிக்கும் இந்த முறையில் தினசரி கால்கேட் டூத்பவுடரை உபயோகியுங்கள் :

- சாப்பிட்டவுடன் கால்கேட் டூத்பவுடரால் பற்களை 2 நிமிஷம் பிரஷ்கொண்டு தேய்க்கவும்.
- பல்லின் நுனி, முன்புறம், பின்புறம் எல்லாவற்றையும் தேய்க்கவும்.
- எப்போதும் ஈற்றிலிருந்து பல்நுனி நோக்கி தேய்க்கவும்.

பெரிய சைஸ்
வாங்கி பணத்தை
மிச்சப்படுத்துக

**கைகண்ட முறையை இன்றே கையாளுங்கள்!**

TPG/84.

**பல் டாக்டர் அங்கீகரித்த சிறந்த பலன்தரும் முறை!**

# மீனுவின் மாமியார்

**சம்பந்தம்**

சீக்கிரத்தில் தானும் ஒரு மாமியாராகிவிட வேண்டுமென்று மதுராம்பாளுக்குக் கொள்ளை ஆசை. எதிர் வீட்டு மாமியும் அண்டை வீட்டு மாமியும் வாசலிலமர்ந்து வம்பளந்து கொண்டே, 'ஏண்டி, அதை அப்படிச் செய்யப்படாதோ? இதை இப்படிச் செய்யப் படாதோ!' என்று தங்கள் தங்கள் மாட்டுப் பெண்களை அதிகாரம் பண்ணுவதைப் பார்த்துப் பார்த்து மதுராம்பாள் மனம் ஏங்குவாள்.

வீட்டுக் காரியங்களை மாட்டுப் பெண்கள் பார்த்து விடுகிறார்கள். பிறகு மாமிகளுக்கு என்ன வேலை! குழந்தையை வைத்துக் கொண்டிருக்க வேண்டியது; அதோடு ஊர் வம்பையும் ஒரு கை பார்த்துக் கொள்ள வேண்டியது. அவ்வளவு தானே! அதைக் கண்ட மதுராம்பாளுக்குத் தானும் அப்படி இருக்க வேண்டும் என்ற எண்ணம். அவள் மனம் ஓய்வை மாத்திரம் விரும்பவில்லை; சற்று அதிகாரம் பண்ணுவதையும் விரும்பியது. ஆனால் அதற்கு அவள் பிள்ளை சாமிநாதன் இடங் கொடுத்தால்தானே!

ஒருவன் எத்தனை நாட்கள்தான் கல்யாணம் செய்து கொள்ளாமல் இருப்பான்! கடைசியில் கிராமத்திலிருந்த மீனாட்சி சாமிநாதனுக்கு மனைவியாக வந்து சேர்ந்தாள். சுமாரான செல்வமிருந்தும் ஏழெட்டுத் தம்பி தங்கைகளுள்ள பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவள் அவள். மீனு தான் மூத்த பெண். அதனால் தன் தம்பி தங்கைகளையெல்லாம் தானே எடுத்து வளர்த்திருக்கிறாள். அதோடு கிராமத்தில் 'படித்த பெண்' என்ற பட்டமும் பெற்றிருந்தாள். பட்டணத்துப் பள்ளிக்கூடத்தில் பத்தாவது வரை வாசித்திராவிட்டாலும், கிராமப் பள்ளிக்கூடத்தில் எட்டாவது வரை வாசித்து முடித்திருந்தாள். சினிமாப் பாட்டுகள் தெரியாவிட்டாலும் அநேக தோத்திரப் பாட்டுகள் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தாள்! அழகிலும் குறைச்சலில்லை. கண்ணைப் பறிக்கும் காந்த விளக்குப் போல் இல்லாவிட்டாலும், குளுமையான ஒளியைப் பரப்பும் குத்து விளக்குப் போலிருந்தாள். மஞ்சள் தோய்ந்த பொன் முகத்தில் அமைதி நிரம்பிய விசாலமான விழிகள். பேசும் பேச்சிலும் கனிவு கரை புரண்டோடியது. தனக்கு மீனாட்சி மனைவியாக வாய்த்ததில் சாமிநாதனுக்கு மிகுந்த மனத் திருப்தி. ஆனால் அதிகாரம் செய்வதில் ஆசை கொண்ட மதுராம்பாளுக்கு மட்டும் அப்படி யில்லை.

புக்ககம் புகுந்த அன்றையிலிருந்தே மீனு குடித்தனத்தை எடுத்துக் கொண்டாள். அத்தனை காரியங்களையும் ஒழுங்காய்ப் பார்த்து வந்தாள். பெரிய தனமாய் எந்தக் காரியத்தையும் தானாகவே செய்து விடுவதில்லை. ஒவ்வொன்றையும் மாமியைக் கேட்டு அவள் விருப்பப்படியே செய்து வந்தாள். இங்கிலையில் மதுராம்பாளுக்குத் தன் மாட்டுப் பெண்ணை அதிகாரம் செய்ய முடியவில்லையே என்ற வருத்தம் ஏற்படக் கேட்பானேன்! அப்படி யிருந்தும் மாமி ஏதோ குற்றங் குறை சொல்லாமல் இல்லை. அதற்கும் 'இனிமேல் அப்படியே செய்து விடுகிறேன், மாமி!' என்று தணிந்து போய் விடுவாள் மீனு.

தினம் சாமிநாதன் அவசர அவசரமாய் ஆபீசுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதே, மாலைச் சிற்றுண்டி என்ன பண்ணுவது என்று தவறாமல் கேட்டு வைத்துக் கொள்வாள் மீனு. அப்படியே, மாமியைப் பதம் பார்க்கச் சொல்லி ருசி ருசியாய் செய்தும் வைப்பாள்.

ஒருநாள் சாமிநாதனுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. "ஏன், மீனு! தினம் என்னைக் கேட்டுக் கேட்டு டிபன் பண்ணுகிறாயே! அதனால் நான் வரும் பொழுதே, இன்று வடையா யிருக்கும், இன்று சொஜ்ஜியா யிருக்கும் என்று எதிர்பார்த்தல்லவா வருகிறேன்! நீ இனிமேல் என்னைக் கேட்காமல் செய்து வைத்தாலென்ன! நானும் இன்று அதுவாயிருக்குமோ, இதுவா யிருக்குமோ என்று ஏதோ ஒன்றை எதிர் பார்த்து ஆவலாய் வருவேன் அல்லவா!" என்றான். "சரி இனிமேல் அப்படியே செய்து விடுகிறேன்" என்றாள் மீனு.

அன்றையிலிருந்து தன் கணவனைக் கேட்பதை விட்டாளேயொழியத் தன் மாமியைக் கேட்காமல் செய்வதில்லை. 'சர்க்கரை எவ்வளவு இருக்கிறது? நெய் எவ்வளவு இருக்கிறது?' என்றெல்லாம் விசாரித்து, அதற்கு ஏற்றாற் போல் ஏதாவது ஒன்றைச் சொல்லி வைப்பாள் மாமி. அன்று அதுவே தயாராகி விடும். ஆபீசிலிருந்து வரும் சாமிநாதனும் சந்தோஷமாய் 'நான் ஏதோ காரப் பலகாரமாயிருக்கு மென்றல்லவா எதிர்பார்த்தேன்! தித்திப்பாயிருக்கிறதே!' என்று நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிடுவான்.

மூன்றாவது வீட்டுப் பெண்ணுக்கு ஏதோ இடுப்பு வலியாக இருக்கிறது என்று கலந்து ஆலோசிக்க அன்று மதுராம்பாளைக் கையோடு அழைத்துச் சென்றிருந்தார்கள். மத்தியானம் சாப்பிட்டவுடனே சென்றவள் வெகு நாழிகை வரை திரும்பவே காணோம். அன்று மாலைச் சிற்றுண்டி என்ன பண்ணுவதென்பதை மாமியைக் கேட்டு மீனு தீர்மானித்து வைத்துக் கொள்ளவில்லை. சற்று நாழிகை மாமியை எதிர்பார்த்தாள்.

வெகு நாழிகை கழித்து மாமி வந்தாள். வரும்பொழுதே, "ஏண்டி மீனு! நாழிகையாகி விட்டதே! டிபனுக்கு என்ன ஏற்பாடு பண்ணலாம்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"உங்களைப் பார்த்தேன். காணோம். தவலை வடைக்கு அரிசி பருப்பு நனைத்து வைத்திருக்கிறேன்" என்று தேங்காயை உடைத்துக்கொண்டே சொன்னாள் மீனாட்சி. அதைக் கேட்டதும் 'அப்படி வா, வழிக்கு! அகப்பட்டுக்கொண்டாயா!' என்று விசுவரூபமெடுத்து நின்றது மதுராம்பாளின் மனம். "யாரைக் கேட்டு அரிசி பருப்பை நனைத்தாய்! உன்னை யார் தவலை வடை பண்ணச் சொன்னது! நான் எப்போது வாசல் தாண்டுவேனென்று எதிர்பார்த்திருந்தாயா!" என்று மொழுமொழுவென்று பிடித்துக் கொண்டாள் மாமி.

"ஐயோ! அன்றைக்கு ஹோட்டலிலிருந்து தவலை வடை வாங்கிவரவில்லையா! நன்றாயிருக்கிறதென்று பிரியமா சாப்பிட்டாரே! அதனாலே ..." என்று சொல்வதற்குள் முகம் சிவந்து விட்டது

மீனாட்சிக்கு ; கண்களும் கலங்கின. "அவனைச் சாக்கிட்டு உன் நாக்கு ருசியைத் தேடுகிறாயா ? அத்தனை ஆகிவிட்டதா உனக்கு ! நான் எப்போது தொலைவேன் என்றிருப்பாய் போலிருக்கிறதே !" என்று இரைந்தாள் மதுராம்பாள். அப்பொழுதே விடுவிடு வென்று சென்று அந்த அரிசியையும் பருப்பையும் பிழிந்தெடுத்து முறத்தில் தெளித்து வெய்யிலில் உலர்த்தி விட்டாள்.

மாமியின் சுடுசொற்கள் மீனாட்சியின் உடலையே தகித்தன. கண்களில் நீர் மல்க அப்படியே திகைத்து நின்று விட்டாள். "தெரியுமடி, உன் மாய் மாலம் ! சீக்கிரம் மாவு பிசைந்து பூரி போட்டு வையடி ; அவன் வருகிற நாழிகையாயிற்று !" என்று உத்தரவிட்டு ரேழித் திண்ணைக்கு வந்து விட்டாள் மாமி. அவள் மனத்தில் அத்தனை நாளுமில்லாத குதூகலம் குமிழியிட்டுக் குதித்தது. என்றுமில்லாமல், மாட்டுப் பெண்ணை அதிகாரம் பண்ணும் வாய்ப்பு அன்று கிடைத்து விட்டதல்லவா !

கண்களைக் கூடத் துடைத்து விட்டுக் கொள்ளாமல் காரியம் பார்க்கப் பின் கட்டுக்குச் சென்று விட்டாள் மீனாட்சி.

அந்தச் சமயம் பார்த்துத் தொட்டிலிலிருந்த குழந்தை விழித்துக் கொண்டான் ; அழவும் ஆரம்பித்தான். ரேழியில் இருந்தபடியே "மீனா, மீனா !" என்று கத்தினாள் மாமி. பதிலுக்கு ஒரு குரலும் இல்லாததைக் கண்டு மெதுவாய் முணுமுணுத்துக் கொண்டு தானே எழுந்தாள். "இதோ வரேனடா கண்ணு! அழாதே !" என்று சொல்லிக் கொண்டே சென்றாள். ஆனால் அதற்குள் மீனாவே, ஒன்றும் பேசாமல் திடுதிடு வென்று வந்து குழந்தையை எடுத்துக் கொண்டு போனாள். அவளுடைய முகம் அழுது நன்றாய்ச் சிவந்திருந்தது. மதுராம்பாள் கடுவன் பூனை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு அவளை 'உப்' என்று பார்த்து விட்டுத் திரும்பினாள்.

அன்று சாமிநாதன் ஆபீஸிலிருந்து வரச் சற்று நாழிகையாகி விட்டது. மீனா, தன் மனவெழுச்சியனைத்தையும் பெண்களுக்கே உரித்தான போர்வைக் குள்ளே நன்றாய் மறைத்து வைத்துக் கொண்டு இன்முகங் காட்டி வரவேற்றாள். சாமிநாதன் ஆவலாய்ப் பூரியை மடித்து வாயில் திணித்துக் கொண்டே, "அம்மா ! நாளைக்கு எங்கள் காரியாலய மானேஜர் வீட்டிலே அவர் குழந்தைக்கு ஆண்டு நிறைவு. நாமெல்லோரும் அவசியம் போயாகணும். காலைக் காப்பிக்கே வந்துவிடச் சொன்னார்!" என்றான்.

"அப்படித்தான் சொல்வார்கள். அதற்காக எல்லாரும் போக வேணுமா ! நான் எதற்கு ! இங்கேயே இருக்கிறேன். நீயும் அவளுமாகப் போய்விட்டு வாருங்கள்" என்றாள் மதுராம்பாள்.

மறுநாள் வழக்கத்தைவிட அதிகாலையிலேயே எழுந்து விட்டாள் மீனா. ஓடி ஓடிக் காரியங்களைப் பார்த்து விட்டு வேளையோடு குளித்தாள் ; குழந்தையையும் குளிப்பாட்டி மாமியாரின் மடியில் கொண்டுபோய் விட்டாள். பிறகு தன்னைச் சிங்காரித்துக் கொள்ளச் சென்றாள். பெட்டியிலிருந்த நகைகளனைத்தையும் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியே வந்த மீனாவின் முகம் வழக்கத்தைவிடப் பளிச்சென்றிருந்தது. தாயாரின் சமையலுக்காகக் கறிகாய் வாங்கச் சென்றிருந்த சாமிநாதன் மாமியாரின் அருகில் அழகே உருவாக நின்று கொண்டிருந்த மீனாவைப்



பார்த்து ஒரு கணம் திகைத்து நின்றான். பிறகு அவளை ஒரு தடவைக்கு இரு தடவையாக ஏறிட்டுப் பார்த்துக் குறும்புப் புன்னகை செய்தான். மதுராம்பாள் சட்டென்று எதையோ நினைத்துக் கொண்டு கொல்லைப் பக்கம் சென்றாள். அங்கே புஷ்பச் செடியில் ஏழெட்டுப் புஷ்பங்கள் மலர்ந்து கிடந்தன. அவற்றைக் கிள்ளி வந்து மேஜைமீது வைத்தாள்.

மீனா புஷ்பத்தைத் தொடுத்துத் தலையில் சூட்டிக்கொண்டு புறப்பட்டாள். அதற்குள் சாமிநாதன் வண்டி அமர்த்திக் கொண்டு வந்தான்.

வாசலில் வழி யனுப்பக் காத்திருந்த மாமியிடம் "போய்விட்டு வருகிறேன், அம்மா" என்று வாய் திறந்து அப்பொழுதுதான் பேசினாள் மீனா. மதுராம்பாள் மனம் என்னவோ மாதிரியாகிவிட்டது. ஒரு கொடி தயங்கியே போனாள். "உம், ஜாக்கிரதை! குழந்தைக்கு அதையும் இதையும் கொடுத்து உடம்பைக் கெடுத்துக் கொண்டு வராதே !" என்றாள். அப்படியே சாமிநாதனிடமும், "விருந்து முடிந்ததும் வீணாய் வம்பளந்து கொண்டு நேரத்தைப் போக்காதே ; சீக்கிரமாகப் புறப்பட்டு வந்து சேர் !" என்றாள்.

அதற்குள் எதிர் வீட்டுப் பக்கத்து வீட்டு மாமிமார்கள் வாசலில் வந்து நின்று கொண்டார்கள். வேறு என்ன வேலை அவர்களுக்கு ! அவர்கள் மாட்டுப் பெண்களும் ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தார்கள்.

மீனாவுக்குச் சற்றுச் சங்கோசமாய்க்கூட இருந்தது. ரொம்ப நாட்களுக்கப்புறம், அன்றுதான்



அவள் தன் கணவனுடன் வெளியே தனியாய்ப் புறப்பட்டுக் கொண்டிருந்தாள்.

தன் ஜரிகைப் புடவையைச் சரிப்படுத்திக் கொண்டு முதலில் மீனாதான் வண்டியில் ஏறினாள். குழந்தையை அவளிடம் கொடுத்துவிட்டு, பிறகு சாமிநாதன் ஏறிக் கொண்டான். உடனே வண்டி ஜல் ஜல்லென்று புறப்பட்டு விட்டது. வண்டியின் ஆட்டத்தில் இருவரும் குலுங்கிக் கொண்டு செல்வதைத் தெருத் திருப்பம் வரையில் வாசலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தாள் மதுராம்பாள். கடைசியில் 'நம் கண் மாத்திரம் குழந்தைகளுக்கு ஆகுமா!' என்று நீண்ட பெருமூச்சு விட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

உள்ளே நுழைந்ததும் முதல் காரியமாக முன் தினம் மாலை முற்றத்தில் உலர்த்தியிருந்த அரிசியும் பருப்பும் அவள் கண்களில் பட்டன. உடனே அவள் மனத்தில் அவளையறியாத ஒருவித சலனம் ஏற்பட்டது. 'ஐயோ, பாவம்! குழந்தை தவலை வடை பண்ண எத்தனை பிரியமாய் நனைத்து வைத்தாளோ!' என்று எண்ணியவள் அப்படியே உட்கார்ந்து விட்டாள். 'நாம் ஏன்தான் அப்படி நடந்து கொண்டோமோ!' என்று அவள் மனம் வருந்தியது. அப்படியே கூடத்துத் தூணில் நன்றாய்ச் சாய்ந்து கொண்டாள். உடனே அந்தக் காலத்தில் அவள் மாட்டுப் பெண்ணாக வாழ்ந்த வாழ்வு அவள் மனத் திரையில் விரிய ஆரம்பித்தது.

ஒன்றுமில்லை; வடை தட்டிப் போட்டு மோர்க்குழம்பு செய்யச் சொல்லியிருந்தாள் அவள் மாமி. மதுராம்பாளும் அப்படியேதான் செய்தாள். ஆனால் கூட்டுக்காகக் கீரைத் தண்டை நறுக்கிக் கொண்டிருந்த பொழுது ஒரு சபலம் தட்டியது அவளுக்கு. பருமனாயிருந்த அடித் தண்டை சீவிக் குழம்பில் போட்டால் நன்றாயிருக்குமே என்று எண்ணிப் போட்டு விட்டாள்.

குழம்பைப் பரிமாறும் பொழுதுதான் அவள் மாமிக்குத் தெரிந்தது அது.

"இது என்னடி, வடையோடு ஏதோ வந்து விழுகிறதே!" என்றாள்.

"நன்றாயிருக்குமே யென்று நாலு அடித் தண்டை நறுக்கிப் போட்டு வைத்தேன்" என்றாள் மதுராம்பாள்.

"உன்னை யாரடி அப்படிப் போடச் சொன்னது! இது என்ன ருசியோ, தெரியவில்லையே!" என்று அவள் தாடையை அப்படியே இருக்கும் பாவனையாய்ச் சீறினாள் அவளுடைய மாமியார்.

"இதோ, பார்! குழம்பு அதனால் தானே இப்படி நீர்த்துப் போய் விட்டது!" என்று கரண்டியில் எடுத்து அவள் முகத்தில் ஊற்ற வந்தாள் மாமி.

"ஏன்? அம்மா சொன்ன மாதிரி செய்து விட்டுப் போகிறதுதானே!" என்று அந்தச் சமயம் பார்த்து அவள் கணவனும் கேட்டு வைத்தான். உடனே முகம் சிவந்து கண் கலங்கியது மதுராம்பாளுக்கு. 'கோ'வென்று அழ ஆரம்பித்து விட்டாள். அன்று முழுவதும் சாப்பிடவேயில்லை அவள். வீட்டில் ஒரே ரகளை. மாமியிடம் வெகு நாள் வரை பேசாமல் கூட இருந்தாள்.

ஆனால் அதே இடத்தில் மீனா எத்தனை பதவிசாய் நடந்து கொண்டாள். "போய்விட்டு வருகிறேன், அம்மா" என்று வாய்விட்டுச் சொல்லி வண்டியிலேறினாளே!

இதை நினைக்க நினைக்க மதுராம்பாளின் மனமே அவளைச் சித்திரவதை செய்தது. வெகு நாழிகை கழித்துக் கண்களை வழித்தெறிந்து விட்டுக் காரியம் பார்க்கச் சென்றாள்.

ஏதோ ஒரு வற்றல் குழம்பை வைத்துக் கொண்டு சாப்பிட்டெழுந்தாள். வீடு வெறிச்சென்று கிடந்தது. பழக்கமாய்ச் சற்றுப் படுத்துப் புரளுகிறவள்; அன்று அது கூடச் செய்யவில்லை. கையோடு 'டிபன்' பண்ண ஆரம்பித்து விட்டாள். செய்து முடிக்க வெகு நேரமாகி விட்டது.

'இன்னும் இவர்களைக் காணோமே' என்று வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்தாள் மதுராம்பாள்.

கடைசியில் இவள் ஒரு திக்கைப் பார்த்துக் கொண்டிருந்த பொழுது, மற்றொரு திக்காக வண்டி வந்து நின்றது. "மீனு கடைத் தெருவைப் பார்த்ததில்லையே என்று வண்டியை இந்தப் பக்கமாக ஓட்டி வரச் சொன்னேன்" என்று சொல்லிக் கொண்டே இறங்கினான் சாமிநாதன்.

"அப்படியே மணிக் கூண்டைக் காட்டி வருகிறதுதானே!" என்று மன நிறைவாய்ச் சொன்னாள் மதுராம்பாள்.

"எல்லாம் வண்டியில் இருந்தபடியே பார்த்தேனே!" என்று சொல்லிக் கொண்டே மீனு உள்ளே நுழைந்தாள்.

"நீங்கள் ஏன் வரவில்லை என்று அந்த மாமி ரொம்ப தூரம் கேட்டார்" என்று முதல் வேலையாய்த் தான் கொண்டு வந்திருந்த பழம், புஷ்பம், தாம்பூலம், பட்சணப் பொட்டலம் எல்லாவற்றையும் மாமியிடம் கொடுத்தாள் மீனு.

சந்தோஷமாய் அதை வாங்கிக் கொண்டே, "இது என்ன ஜாங்கிரியா! சரி, நானும் 'டிபன்' பண்ணி வைத்திருக்கிறேன். சேர்ந்து சாப்பிடப் போங்கோ" என்றாள் மதுராம்பாள்.

"என்ன டிபனும்!" என்று ஆவலாய் அப் பாத்திரத்தின் மூடியைச் சாமிநாதனே திறக்கப் போனான். ஆனால் அதற்குள் மீனு முந்திக்கொண்டு விட்டாள். உள்ளே நிறையத் தவலை வடைகள் சுடச்சுட இருந்தன. 'ஆ! தவலை வடை!' என்று இருவரும் ஏக சமயத்தில் கத்தினர். அந்தப் பக்கம் பார்க்கக் கூடாது என்று இருந்த மதுராம்பாள், தன்னையறியாது திரும்பிப் பார்த்து விட்டாள். அதோடு அவள் பார்வை மீனுவின் நோக்கோடும் சந்தித்து விட்டது. அந்த ஒரு வினாடியில் மானசீகமாய் ஒருவருக்கொருவர் நடந்ததை மறந்து மன்னித்துக் கொண்டு விட்டார்கள்.

"குழந்தைக்கு அதிகம் கொடுத்து விடாதீர்கள், உடம்புக்கு ஆகாது" என்று சொல்லிக் கொண்டே ரேழிப் பக்கம் வந்தாள் மதுராம்பாள். அந் நேரத்தில் அடுத்த வீட்டு மாமி மொறு மொறுவென்று தன் மாட்டுப் பெண்ணிடம் சண்டை பிடித்துக் கொண்டிருந்தாள். "ஐயோ! ஏன்தான் இவர்கள் அர்த்தமில்லாமல் சண்டை பிடித்துக் கொண்டு, மாமிகள் வர்க்கத்துக்கே தீராப் பழியைக் கொண்டு வருகிறார்களோ, தெரியவில்லையே!" என்று முணுமுணுத்தாள் மதுராம்பாள்.

★ ○ ✶ ○ ✶ ○ ✶ ○ ✶ ○ ✶ ○ ✶

## தமிழ் மாணவர்களின் தவிப்பு

ஆந்திர மாகாணத்தில் உள்ள அனந்தப்பூரில் சென்னை சர்வகலாசாலை பொறியியற் கல்லூரி (இஞ்சினீயரிங் கல்லூரி) உள்ளது. இங்கு இப்போது முதல் வகுப்பில் தமிழ் மாணவர்களாகிய நாங்கள் இருபத்து எட்டுப் பேர்தான். அடுத்த ஆண்டு துவக்கத்திலிருந்து இக்கல்லூரி ஆந்திர சர்வ கலாசாலையுடன் இணைக்கப் பெறும். ஆகையால் வரும் ஆண்டுகளில் இங்கு தமிழ் மாணவர்கள் வருதல் அனுபவ சாத்தியமில்லை. கல்லூரிப் படிப்பு முடியும் வரையில் நாங்கள் இருபத்தெட்டுப் பேர்தான் இருக்கும்படி நேரும். இந்த எண்ணிக்கைக் குறைவினால் தமிழர்களாகிய நாங்கள் தமிழ் நாட்டு உணவு அருந்தும் "சாப்பாட்டு விடுதி" நடத்துதல் இயலாது. வீடுகளையும், பெற்றோர்களையும் மறந்து, காதங்கள் பல கடந்து புதிய சூழ்நிலையில் இருப்பவர்களும் இன்னும் மூன்று ஆண்டுகள் இருக்க வேண்டியவர்களும் ஆகிய எங்களுக்கு இந் நிலை கேடு விளைவிக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் நாங்கள் அரசியலார்க்கு எங்களைத் தமிழ் நாட்டுக் கல்லூரிகளுக்கு மாற்றும்படி கேட்டுக் கொண்டது பயனற்றுப் போயிற்று. அரசியலார் எமது வேண்டுதலுக்குச் செவி மடுத்து எங்களைத் தமிழ் நாட்டுக் கல்லூரிகளுக்கு மாற்றுவார் என்று இன்னும் நம்புகிறோம். மேலும் கல்லூரி அதிகாரிகளும் ஆவன செய்து நாங்கள் தமிழ் நாட்டுக்கு வர வழி செய்வார்கள் என்று நம்புகிறோம். தமிழ் நாட்டுக்கு நாங்கள் வந்து சேரும் நாளை ஆவலுடன் எதிர்நோக்கி இருக்கின்றோம்.

அனந்தபுரம் 13-1-54

இரா. ஜெ. பாலகிருஷ்ணன்
தமிழ் மாணவர்கள் சார்பில்

★ ○ ✶ ○ ✶ ○ ★ ○ ✶ ○ ✶ ○ ★



### தமிழ்த் திருநாள்

★

திருநெல்வேலி அருணகிரி இசைக் கழகத்தின் ஆதரவில் எட்டாவது தமிழ்த் திருநாள் ஜனவரி மீ 23உ யிலிருந்து ஆறு நாட்கள் சிறப்பாக நடந்தன. பிரபல அறிஞர்கள் பல் வேறு விஷயங்களைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். மேற்படி இசைக் கழக நாடகக் குழுவினர் இலக்கியங்களிலிருந்து தொகுக்கப்பட்ட காட்சிகளை நாடகங்களாக நடித்தனர். அப்படி அவர்கள் நடித்த பல நாடகங்களில் ஒரு நாடகத்தின் காட்சியைப் படத்தில் காணலாம்.


# அன்றுடம் இரண்டே நிமிஷங்கள் தேவை நீங்கள் பூரண எழிலுடன் திகழலாம்

பிரதி இரவிலும் பாண்ட்ஸ் கோல்ட் க்ரீமை உங்கள் சருமத்தில் தடவி நன்கு தேயுங்கள்—ஒரே ஒரு நிமிஷம் தான் ஆகும். அதிலுள்ள எண்ணெய்கள் சருமத்தில் ஊடுருவிச் சென்று, மயிர்க் கால்களில் படிந்திருக்கும் சிறு சிறு தூசியையும் அழுக்கையும் வெளியேற்றி விடுகிறது. சருமத்தை மெதுவாகத் துடைத்து, அது எவ்வளவு பரிசுத்தமாக விளங்குகிறதென்பதைப் பாருங்கள்.



இவ்வற்புத க்ரீமை இன்னும் கொஞ்சம் எடுத்து முகத்திலும் கழுத்திலும் பூசிக்கொள்ளுங்கள். இரவு முழுவதும் அது அப்படியே இருக்கட்டும். காலையில் எழுந்தவுடன் உங்கள் மேனி மிக துல்லியமாயும் பூரண பொலிவுடனும் விளங்குவதைக் கண்டு அதிசயிப்பீர்கள்.

முக சிங்காரிப்புக்குத்தான், பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் தடவிக்கொண்டால் அதன் மேல் பௌடர் பூசுவது மிக எளிது — அழகாயுமிருக்கும். ஞாபகமிருக்கட்டும்.




பிரதிதினம் காலையிலும் ஒரு நிமிஷம் உங்கள் முகத்தில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமை மெதுவாகத் தடவுங்கள். அது பூரணமாக மறைந்து விடும். சருமம் பட்டுப்போன்ற மழமழப்பாகவும் அற்புதசோபையுடனும் விளங்கும்.



கண்ணுக்குப் புலப்படாத வகையில் முகத்தில் மறைந்துள்ள இந்த பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் திரைப்படலம் பகல் முழுவதிலும் உங்கள் எழிலைப் பாதுகாக்கும். உங்கள் மிருதுவான சருமத்திற்கு இந்த பாதுகாப்பு அவசியம்—முக்கியமாக வரட்சைக் காற்றிலும் சூரிய கிரணங்களின் வெப்பத்தாலும் சருமம் துவண்டு போகாமல் காப்பாற்றிவர அத்யாவசியம்.

உங்கள் சருமத்திற்கு இவ்விரட்டை பராமரிப்பு ஒவ்வொரு நாளும் தேவை. பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையும் அன்றுடம் தவறாமல் உபயோகித்து உங்கள் அழகிற்கு அழகு ஊட்டுங்கள்!


உலகில் எங்குமே பெண்மணிகள் தங்கள் எழிலை புதுமை குன்றாமல் பாதுகாக்க பாண்ட்ஸ் க்ரீம்கள் இரண்டையுமே உபயோகிக்கின்றனர். அவர்கள் இயற்கை அழகின் இரகசியம் அதுதான்.

**பாண்ட்ஸ்**

# கன்னார் மகனும் கவர்னர் ஆகலாம்!

[ஆர். மல்ல பிள்ளை]

நெப்போலியனும்—முஸோலினியும்



"முடியாது என்ப தெல்லாம்
மூடர்கள் வார்த்தை"யென்று
அடித்தாற்போல் போனபார்ட்டும்
அறைந்துமே போனான்பாரு!
மிடிதனில் உழன்றுசெங்கல்
முதுகினில் தூக்கிச்சென்று
அடிபட்டு அழுதான் அன்று
முரட்டுமுஸ் ஸோலினிதான்

இத்தாலி நாட்டுமக்கள் எண்ணத்தில் எழுச்சியூட்டக்
கத்தியைப் பிடித்தவீரர் கதுமெனக் குதித்துவந்தார்
அத்துடன் அரசைப்பற்றி அவனியை அதிரச்செய்தான்,—
கத்திசெய் கருமான்மைந்தன் காவலன் ஆனான்பாரில்!

ஹிட்லர்



கொத்தர்க ளுடனேவேலை கூலிக்குச் செய்துவாழ்ந்தான்
ஜெர்மனி நாட்டில்நாஜிக் கட்சியோ டரசைக்கொண்டான்
பார்தனை அலறச்செய்தான் பாதகன் இட்லர்என்பான்!
கொத்தர்கள் வேலைசெய்தோன் கொற்றவன் ஆனான்கண்டீர்!

ஸ்டாலின்



செருப்புகள் தைத்துவிற்றுச்
சீவனம் செய்துவந்தான்
பொருளெலாம் பொதுவேயென்று
பொதுவுடை மையைப்பேசி
உருஷிய அரசைப்பற்றி
ஊக்கமோ டுழைத்துவந்த
சருவாதி காரிஸ்டாலின்
சகத்தையே ஆட்டிவைத்தான்!

ஜான் டி ராக்பெல்லர்



கணக்குகள் எழுதிவந்தான்
கடும்உழைப் பாலுயர்ந்து
மண்ணெண்ணெய் மன்னனானான்
மட்டில்லா உழைப்பினாலே!
பணத்தையே குவித்தான்பாரில்
பாடுபட் டுயர்ந்தஏழை!
மனம்போல அறத்தைச்செய்தான்
மகிழ்ச்சியோ டுராக்குபெல்லர்

வில்லியம் மோரிஸ்

பாரினில் சைக்கிள்பூட்டிப்
பாடுபட் டுழைத்துவாழ்ந்தான்
ஆர்வத்தோ டறிவுஞ்சேர்ந்து
அயராமல் உழைத்துமோட்டார்க்
கார்தனைச் செய்துவிற்றுக்
காசுபொன் கோடிசேர்த்தான்!
மோரிசு மோட்டார்க்காரன்
வில்லியம் மோரிஸ் என்பான்!

## ஆப்ரகாம் லிங்கன்



பல்சுவை உணவுஇல்லை!
பகட்டான ஆடையில்லை!
கல்வியுங் கற்கவேண்டிக்
கல்லூரி செல்லவில்லை!
அல்லற்பட் டடவிசென்று
அருமரம்வெட்டி விற்றான்
அமெரிக்க அதிபனான
ஆப்ரகாம் லிங்கன்தானே!

## ராம்ஸே மாக்டொனால்டு

குதிரைக்குத் தீனிவைத்துக் குளிப்பாட்டி வேலைசெய்தும்
நதியிலே தூண்டிற்போட்டு மகரமீன் பிடித்தும்விற்ற
மதியுடை மாக்டொனால்டும் மும்முறை அமைச்சரானான்!
நதியிலே தூண்டிற்போட்டான் நாட்டுக்கே தலைவனானான்!

## தாமஸ் ஆல்வா எடிஸன்

சிரமமாக இருக்குதென்றால் சினிமாவைத் தேடிப்போவீர்!
கிரல்தான் விழும்வரைக்கும் கிராமபோன் ரிகார்டுகேட்பீர்!
வியர்வை துளிர்க்குதையா விசிறியைச் சுழற்றுகென்பீர்!
ஒருகணம் பேசுமென்றால் ஒலிபெருக்கி இருக்கோஎன்பீர்!

அவனியில் அவற்றைக்கண்ட அறிஞனை அறிகுவீரோ?
அவன் பள்ளி செல்லவில்லை! அன்னையே ஆசானானார்!
கூலியே செய்தித்தாளைக் கூலிக்கு விற்றுவந்தான்!
தாவியே புகழைக்கொண்டான் தரணியில் எடிஸன்என்பான்!

## புதிய கல்வித் திட்டம்

"உழைப்பினால் வராதளந்த உறுதியும் உளதோ"என்றார்
உழைப்பினால் உலகந்தன்னில் உயரலா முணருவீரே
பழையமெக் காலேகல்வி பாழாக்கி விட்டதையா
உழைக்கின்ற ஏழையோங்க வொட்டாது ஏட்டுக்கல்வி!

கூரிய மதியுடைய சீரிய முதலமைச்சர்
பரிவுடன் ராஜாஜியும் பாடத்தைத் திருத்தலானார்
பருலேகர் கமிட்டியாரும் பார்த்தனர் ஆய்ந்துநன்கு
பாரிலே இதற்குயீடு பகரவோ இல்லையென்றார்!

கன்னாரின் மகனும்நாளைக் கவர்னராய் வரலாங்கண்டீர்!
வண்ணாரின் மைந்தர்தாமும் வக்கீலாய் வரவுங்கூடும்!
இன்னவா(று) உரைத்தவெல்லாம் என்னுடை வார்த்தையன்று
சான்றுகள் சரித்திரந்தான் சகத்தினில் மெய்யேயாகும்.



# அயர்ந்து சுகமாகத் தூங்குங்கள்!

நம் தேகத்திற்கு அயர்ந்த தூக்கம் மிகவும் முக்கியம். ஏனெனில் தூக்கத்தின் போது இயற்கையானது உடலுக்கும் மூளைக்கும் சக்தியை ஊட்டுகிறது. படுக்கப் போகுமுன் ஒரு கப் ருசி மிகுந்த 'ஓவல்டின்' இயற்கைக்கு இரு விதங்களில் உதவுகிறது. புத்துணர்வைத் தரும்; அயர்ந்த தூக்கத்தைத் தரும். அத்துடன் செலவாகும் சக்தியை சேகரிக்க உதவுகிறது. ஓவல்டின் எல்லா விதங்களிலும் சிறந்தது. அதில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய சுத்தமான பசும்பால், சிறந்த கோக்கோ, பாஸ்பேட்டுகள், பி&டி விடமின்களும் இருக்கின்றன. உங்கள் கடையில் இந்த ருசி மிகுந்த உணவு பானத்தைக் கேட்டு வாங்குங்கள்; நினைவிருக்கட்டும். அது ஓவல்டின் தானா என்று கவனியுங்கள்!




விநியோகஸ்தர்கள்:

கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

# ஓவல்டின்

உலகில் சிறந்த ஆரோக்கிய பானம்

OV.396

# 38. இதென்ன உலகம்?

சுதாகர் தன்னெதிரே தைரியமாக உட்கார்ந்து விடவே, மனோரமாவின் மனத்தை என்னவோ செய்தது. கட்டின கணவன் இருக்க, வேற்று மனிதன் எதிரே உட்கார்ந்து அகல விரிந்த கண்களுடன் மணமான பெண்ணைப் பார்ப்பதென்றால் உலகம் என்ன சொல்லும்? ஊர் வாயை அப்புறம் மூட முடியுமா? வெறும் வாயை மெல்லும் உலகத்துக்கு அவல் கிடைத்து விட்டால் அப்புறம் கேட்பானேன்? இதை நினைத்துப் பார்த்த மனோரமாவின் மனம் குமுறியது. கண்கள் கலங்கிச் சிவந்தன. அடுத்த கணமே, அவளுடைய கண்களில் என்றும் காணாத கடுமை தாண்டவமாடத் தொடங்கியது. அதைக் கண்டு சுதாகர் பயந்து விடவில்லை. மனத்தில் சிறிதாவது கல்மஷம் தோன்றினால் அல்லவா அவன் பயந்து சாவதற்கு? தைரியமாகச் சிறிது நேரம் வரை அவள் கண்ணோடு கண் பொருத்தி அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் பார்வையில் பதிந்திருந்த பாவத்தைப் படித்தாள் மனோரமா. 'ஆகா! என்ன நிஷ்களங்கமான மனசு!' என்ற எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; பழைய சம்பவங்களை நினைத்துப் பார்ப்பதில் அவள் சிந்தனை சென்றது. இவரைக் கணவனாகப் பெறும் பாக்கியம் நமக்குக் கிட்டவில்லையே என்ற ஏக்கம் அவளுடைய இருதயத்தைப் பிழிந்தெடுத்தது; மனம் இல்லாத பல கோட்டைகளையெல்லாம் கட்டியது. எனவே, அவளுடைய கண்களில் கோரத் தாண்டவம் புரிந்து கொண்டிருந்த கடுமை மறைந்தது. இதழ்க் கடைகளில் புன்முறுவல் படர்ந்தது. அவள் முகத்தில் தெரிந்த கடுமை இனிமையாக மாறியதைக் கண்டபொழுது சுதாகருக்கு மிகவும் பயமாகப் போய் விட்டது. அவன் உள்ளமும் உடலும் ஒருங்கே நடு நடுங்க வியர்த்து வெலவெலத்துப் போய் விட்டான்.

"உங்கள் அருகிலேயே கட்டிலில் உட்கார்ந்தால்......?" என்று கேட்டாள் மனோரமா. அதைக் கேட்டதும் கேட்காததுமாக அவள் புன்முறுவல் பறந்து விட்டது. நின்றிருந்த கண்ணீர் மறுபடியும் ஆறாகப் பெருகத் தொடங்கி விட்டது. அவளுடைய கண்ணீரைக் கண்டதும் அவன் மனத்தை என்னவோ செய்தது. "மனோரமா! ஏன் இப்படி அழுகிறாய்? நான் ஏதாவது தவறு இழைத்து விட்டேனா?" என்று கேட்டான்.

"தவறு எல்லாம் என் தலைவிதியைச் சேர்ந்தது!" —அழுத வண்ணமே பதில் அளித்தாள் மனோரமா.

"உன் தலைவிதி என்று சொல்லும் பொழுது என் தலை விதியை மட்டும் ஏன் மறந்து விடுகிறாய்? இந்த வீட்டில் காலடி எடுத்து வைப்பதற்கு முந்திய தினம் வரை என் இருதயக் கடலில் பௌர்ணமிச் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான்; தண்ணிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். என் இருதயக் கடல் மகிழ்ச்சியில் மிதந்து சந்தோஷ ஆரவாரம் செய்து கொண்டிருந்தது. இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்ததும் வைக்காததுமாக என் இருதயத்தில் அமாவாசைக் கும்மிருட்டு நிலவி விட்டது. இருதயத்தின் எந்த மூலையைப் பார்த்தாலும் கன்னங் கரிய காரிருள்தான் மண்டிக் கிடக்கிறது!" என்று சுதாகர் தன் இருதயத்து நிலையை எடுத்து உரைக்கலானான்.

"அப்படியா? அப்படியானால் தவறு என்னுடையது தான்!" என்றாள் மனோரமா.

"எப்படி உன்னுடையதாகும்?"

"நேற்று வரை கடிதம் வரும் என்ற ஆசைக் கனலை அவிய விடாமல் கனிய வைத்திருந்தேன். ஆனால் தக்க சமயம் வரும் வரை நான் எதிர்பார்த்திருக்க வேண்டாமா? காத்திருக்க வேண்டாமா? அப்படிச் செய்யாதது என் தவறுதானே?" என்றாள் மனோரமா.

அவள் சொற்களைக் கேட்ட சுதாகருக்குத் தான் செய்தது பெரிய தவறு என்று விளங்கியது. வாக்குறுதிக்கும் ஒரு கால வரையறை இருக்க வேண்டும் அல்லவா? கெடு முடிந்து விட்டால் எதுவும் காலாவதி ஆவது இயற்கை




மொழிபெயர்ப்பு: ரா.வீ



தானே? வாக்குறுதி ஞாபக மிருக்கிறது என்பதை அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொண்டிருந்தால் தானே ஞாபகம் இருக்கிறது என்னும் விஷயம் பிறருக்கு ஞாபகம் இருக்கும்? அதனால் தவறு மனோரமாவினுடையது அல்ல; தன்னுடையதுதான் என்றே சுதாகருக்குத் தோன்றியது.

மனோரமாவுக்கு அழுகை அழுகையாக வந்தது. அழுத அழுகையில் விக்கல்கூட எடுத்து விட்டது. விக்கியவாறே, "என்னை நீங்கள் மறந்து விட்டீர்கள் என்றே எண்ணி விட்டேன். அதனால் தான்..." என்று வாக்கியத்தை முடிக்காமலே நிறுத்தினாள்.

"அப்படி எண்ணக் காரணம்?"

"மாதங்கள் பல ஓடி விட்டன. உங்களிடமிருந்து கடிதமும் இல்லை; தகவலும் இல்லை. அதனால் மனோரமாவை மறந்திருப்பீர்களாக்கும் என்று எண்ணி விட்டேன்!"

"மனோரமாவை மறக்க முடியுமா?"

"ஏன் முடியாது? இனி நீங்கள் அவளை மறந்துதானே ஆக வேண்டும்? வேறு வழி?" என்று கேட்டாள் மனோரமா.

"மனோரமாவை மறப்பதென்றால், அது செத்தாலும் நடவாத காரியம். செத்தாலும் என் சித்தம் அவளை மறக்கச் சிறிதும் இடம் கொடாது!" என்றான் சுதாகர்.

"இனி என்ன சொல்லி என்ன பயன்? எப்படியும் நீங்கள் என்னை மறந்து விடுவதுதான் மேல்!" என்றாள் மனோரமா.

இருவரும் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர் மற்றொருவரைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். உடலும் உள்ளமும் நெருக்க முற்றிருந்த பொழுதிலும் இருவருக்கும் இடையே ஆழம் காண இயலாத அகழி ஒன்று குறுக்கிட்டது. அந்த அகழி வேறு எதுவும் இல்லை. சமூகத்தின் சட்ட திட்டங்கள் என்னும் அகழிதான். அது இருவரையும் ஒன்று சேர விடாமல் தனித்துப் பிரித்தே வைக்க விரும்பியது.

ஆற்றின் ஒரு கரையில் காதலனும் மற்றொரு கரையில் காதலியும் நிற்கிறார்கள். ஆற்றிலோ இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு ஆடிவெள்ளம் ஓடிக் கொண்டிருக்



கிறது. அந்த ஆற்றுக்கு இழுப்பும் வேகமும் அதிகம். சுழலும் குமிழியும் வேறு உண்டு. காதலனும் காதலியும் கரை கடந்து ஒன்று கூடி எப்படிக் கூடிக் குலாவ முடியும்? சுதாகரும் மனோரமாவும் அத்தகைய நிலையில் தான் இருந்தார்கள். காதலைப் பரிமாறிக் கொள்ள வழி வகை எதுவும் தெரியாமல் இருவரும் சிறிது நேரம் ஒருவரை யொருவர் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தனர்.

"வாஸ்தவம். நான் கடிதமும் போட வில்லை; தகவலும் தெரிவிக்கவில்லை. என் மௌனமும் கல் நெஞ்சமும் தான் இத்தனைக்கும் மூல காரணம்!" என்றான் சுதாகர்.

அதைக் கேட்ட மனோரமா துணுக்குற்றாள். பிறகு தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "நான் எத்தனை பிறவி யெடுத்தாலும் அதாக்கிருக்க மாட்டேன். வாழ் நாள் முழுவதும் உங்கள் கடிதத்தையும் உங்களையும் எதிர் பார்த்திருப்பேன். ஆனால்... ஆனால்...ஆனால்..." என்று சொல்ல முடியாமல் தவித்தாள், திகைத்தாள்.

"சொல்லு, சொல்லு! ஆனால் என்ன? ஆனால்..." என்று சுதாகர் அவள் அந்தரங்கத்தை அறிவதற்காக ஊக்கினான்.

"ஒன்றும் இல்லை!" என்று சொல்ல வந்ததை மூடி மறைக்க முயன்றாள் மனோரமா.

"சுதாகரிடம் எதையாவது மறைத்தால், அவனுடைய புண்பட்ட இருதயத்தில் கோலிட்ட கதையாகத்தான் முடியும்!" என்றான் சுதாகர்.

"உங்களுக்கு என்ன? நீங்களோ ஆண் பிள்ளை. உங்களுக்கு எப்படி யெல்லாம் தோன்றுகிறதோ, அப்படியெல்லாம் செய்யலாம்; இஷ்டப்படி சுற்றலாம். உங்களை அதட்டிக் கேட்பார் யாரும் கிடையாது. நெறி தவறிய மாதர்களையும் பணக்காரப் பெண் பிள்ளைகளையும் சுற்றித் திரிகிறீர்களாம். அவர்களுடன் கூடிக் குலாவிச் சல்லாபமாடி ஆனந்தம் அடைகிறீர்களாம். இந்தச் செய்தியை எனக்குச் சொன்னவருக்கு என்னிடமோ உங்களிடமோ ஒரு விரோதமும் கிடையாது. இருவரையும் பிரித்து வைக்க வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. அப்படியிருக்கும் பொழுது அவர் சொல்லை நான் எப்படி நம்பாமல் இருக்க முடியும்? எனவே, என்னைத் தாங்கள் புறக்கணித்திருப்பீர்கள் என்றே தீர்மானித்து விட்டேன். அப்புறம் தாய் தந்தையரின் உள்ளத்துக்குத் துயரம் அளிப்பானேன் என்று எண்ணி......" மனோரமா வாக்கியத்தை முடிக்காமல் மேலே நடந்தவற்றைச் சுதாகரின் கற்பனைக்கே விட்டு விட்டாள்.

சுதாகருக்குக் குயிலி நினைவுக்கு வந்தாள். ராதா நினைவுக்கு வந்தாள். அடடா! இதென்ன உலகம்? அவனைப் பற்றி உலகம் இப்படியா எண்ணுகிறது? இப்படியா கதை கட்டி விடுகிறது? இந்தப் பாழும் உலகத்துக்கு வேறு வேலையே கிடையாதா? இல்லாததற்கெல்லாம் காலும் கையும் வைத்து......

வெளியே வராந்தாவில் யாருடைய நிழல் உருவமோ தென்பட்டது. அதைக் கண்ணுற்ற சுதாகர் துணுக்குற்றான். அதைத் தொடர்ந்தாற் போலவே, மனோரமாவின் வாயிலிருந்து வெளி வந்த சொற்களைக் கேட்டதும் சுதாகர் இன்னும் ஒரு படி அதிகமாகத் துணுக்குற்றான். தீயை மிதித்து விட்டவன் போலத் துள்ளிக் குதித்தான்.

"ஏதோ நடக்க வேண்டியது நடந்து விட்டது. நடக்க வேண்டியது நடந்தே தீரும். எனவே அதை யெல்லாம் விட்டுத் தள்ளுங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். நான் உங்களுடன் வந்து விடுகிறேன்! நாம் இருவரும்......" என்றாள் மனோரமா.

இந்த முடிவு யாரையுமே திடுக்கிட வைக்கக்கூடியது தானே? மனோரமாவின் முகத்திலே தாண்டவமாடிய உறுதியான உணர்ச்சியைக் கவனித்த சுதாகர் ஆச்சரிய மிகுதியினால் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். அடுத்தகணமே அறையின் வாசற்படிக்கு அருகில் வந்து விட்ட நிழல் உருவம் பேசிய குரல் அவன் காதில் மிகத் தெளிவாக விழுந்தது.

"எசமானர் திரும்பி வந்து விட்டார். அம்மா, உங்களை உடனே கூப்பிடுகிறார்!" இப்படிக் கூறிய வண்ணம் வேலைக்காரி லக்ஷ்மி அந்த அறையினுள் நுழைந்தாள்.

"என்னால் இப்பொழுது வர இயலாது என்று அவரிடம் போய்ச் சொல்!" என்று வெடிப்பாகச் சொன்னாள் மனோரமா.

மனோரமாவின் பதிலைக் கேட்டுச் சுதாகர் ஏதோ யோசனை செய்த வாறே, "மாதவப் பிரஸாத் வந்து விட்டாரா, என்ன?" என்று லக்ஷ்மியைப் பார்த்துக் கேட்டான்.

"ஆம், வந்து விட்டார்! எசமானியம்மாளைப் பற்றி எத்தனையோ தடவைகள் கேட்டு விட்டார். கையோடு அழைத்து வருமாறும் சொல்லி யிருக்கிறார்!" என்றாள் வேலைக்காரி லக்ஷ்மி.

ஆருயிர்க் காதலனுக்கு எதிரிலேயே காதலியின் உடலுக்கு உடையவரான கணவர் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். அது மனோரமாவுக்குப் பிடிக்கவில்லை. அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "அதுதான் வர முடியாது என்று சொல்லி விட்டேனே! உன் காதில் விழவில்லை? ஒரு தடவை சொன்னால் உனக்குப் போதாதோ? போய் இன்று நான் அவரைப் பார்க்க முடியாது என்று சொல்லிவிடு!" என்று மிகக் கடுமையான குரலில் உத்தர விட்டாள்.

"அம்மா! நான் எப்படியம்மா, போய் அப்படிச் சொல்லுவேன்! அப்படிச் சொல்ல என்னால் ஆகாது, அம்மா! நீங்களே நேரில் போய்ச் சொல்லிக் கொள்ளுங்கள்!" என்றாள் லக்ஷ்மி. கீழ்ப்படிதலுள்ள வேலைக்காரியாக அவள் நடந்து கொள்ளவில்லை. மனோரமாவின் கோபத்துக்குப் பயந்தவளாகவும் அவள் தன்னைக் காட்டிக் கொள்ள வில்லை. உங்கள் பயமுறுத்தல் என்னை ஒன்றும் செய்துவிடாது என்று சொல்பவள் போலவே பேசினாள்.

"அப்படி என்ன நேர்ந்து விட்டது? எதற்காக நான் நேரில் வந்து சொல்ல வேண்டும்?" என்று கேட்டாள் மனோரமா.

"எசமானர் எங்கேயோ அடிபட்டுக் காயமுற்று வந்திருக்கிறார். கையிலிருந்தும் தலையிலிருந்தும் ரத்தம் வடிந்து கொண்டிருக்கிறது!" என்றாள் லக்ஷ்மி.

அதைக் கேட்ட சுதாகரும் மனோரமாவும் ஏக காலத்தில், "என்ன? அடி பட்டு விட்டதா? ஏன்?" என்று கேட்டார்கள்.

"வழியில் கொள்ளைக்காரர்கள் எசமானரைச் சூறையாட வந்தார்களாம். அவர்கள் தான் எசமானரை அடித்துப் போட்டு விட்டார்களாம்!" என்றாள் லக்ஷ்மி.

சுதாகரும் மனோரமாவும் ஒரு கணம் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர். அடுத்த கணம் லக்ஷ்மிக்குப் பின்னால் தலை தெறிக்க நிலை கலங்க ஓடினர்.

மனோரமாவும் சுதாகரும் தங்கள் தங்கள் மனக் குறைகளைக் கூறிக் கொள்வதில் அல்லவா அத்தனை நேரமும் முனைந்திருந்தார்கள்! அதனால் அவர்களுக்குக் கிராமத்தைப் பார்வையிடப் போயிருந்த மாதவப் பிரஸாத் திரும்பி வந்த விஷயம் தெரியவில்லை. உள்ளம் ஒரு விஷயத்தில் நிலைத்து நின்று விட்டால் இன்னொரு விஷயத்தில் இருதயம் ஈடுபாடு கொள்ளாமல் இருப்பது இயல்பு தானே?

மாதவப் பிரஸாதின் வீடோ மிகப் பெரியது. மாதவப் பிரஸாத் என்ன, சாமான்யப் பட்ட மனிதரா? மிகப் பெரிய ஜமீன்தார் அல்லவா? ஜமீன்தாரின் வீடு என்றால் பெரிதாயில்லாமல் சிறியதாகவா இருக்கும்? அந்தஸ்துக்குத் தக்கபடி ஆளும் தேளும் இருக்க வேண்டியது அவசியமே அல்லவா? அப்பொழுதுதானே அங்கமா யிருக்கும்? ஆளும் தேளும் அதிகமாயுள்ள இடங்களில் கலகலப்பும் கோலாகலமுமாக இருப்பது என்பது எதிர்பார்க்கக் கூடிய விஷயம் தானே? அதுவும் வீட்டுக்கு எஜமானர் ஊரில் இல்லையென்றால் கூச்சலுக்கும் கொம்மாளத்துக்கும் கேட்கவா வேண்டும்?

மாதவப் பிரஸாத் அந்த அவேளையில் திரும்பிவரப் போகிறார் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை. காயமுற்றுக் கன கோரமான நிலையில் மாதவப் பிரஸாத் வீட்டுக்கு வந்து சேரவே, கோலாகலமும் கொம்மாளமும் அடங்கி அமைதி நிலவியது. மாதவப் பிரஸாத் அப்பொழுது இருந்த நிலை பிறருடைய பேச்சு மூச்சைக்கூட அடக்கி விட்டது. எல்லோருடைய முகத்திலும் துயரம் கோடிட்டுப் பரவியது. ஆண் பெண் அடங்க அனைவரும் வேதனையே உருவாகக் கல்லாய்ச் சமைந்து செய்வதறியாமல் நின்றனர்.

ஒதுக்குப்புறமான அறையில் உலகத்தை மறந்து உள்ளத்து உணர்ச்சிகளைப் பரிமாறிக் கொண்டிருந்த மனோரமாவுக்கும் சுதாகருக்கும் இந்தச் செய்தி எட்டவே இல்லை. உள்ளத்து உணர்ச்சிகள் ஒன்றை யொன்று மேவிப் போட்டியிட்டுக் கொண்டிருக்கும் பொழுது உலகத்து நினைவு உள்ளத்தில் இடம் பெற நியாயம் ஏது? கடந்த கால வாழ்க்கையையும் கட்டியிருந்த மனக் கோட்டைகளையும் எண்ணிப் பார்த்த அவர்கள் இந்த உலகத்தின் நினைவை மறந்து எங்கேயோ இனந் தெரியாத உலகத்துக்குச் சென்றிருந்தனர். எனவே, மாதவப்பிரஸாத் வந்த விவரம் அவர்களுக்குத் தெரியவில்லை.

மாதவப் பிரஸாத் கட்டிலில் கிடத்தப்பட்டிருந்தார். அவருடைய மூடித் திறக்கும் கண்கள் யாரையோ தேடிக்கொண்டிருந்தன. அவர் அருகிலேயே வேலைக்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவருடைய இரண்டு குழந்தைகளும் பக்கத்திலேயே நின்றுகொண்டிருந்தன. காயத்தைக் கழுவி இரண்டொருவர் கட்டுக் கட்டுவதில் ஈடுபட்டிருந்தனர். ஒரு வேலைக்காரன் டாக்டரைக் கையோடு கூட்டி வருவதற்காக ஓடியிருந்தான்.

பயங்கரப் படுகாயமுற்று வீட்டுக்கு வந்து சேர்ந்த மாதவப் பிரஸாத், வந்து சேர்ந்த



# ஒரு விநாடி கூட கவலை வேண்டாம்

சமனுள்ள,- போஷாக்கு உணவை அருந்துவதற்கு அறிகுறியாக, அவனது புன்னகையும், உறுதியான அங்கங்களும், ஆரோக்கியமான உடம்பும் உள்ளன. இதை அவனுக்கு லாக்டோஜென் அளிக்கிறது. ஏனெனில் அவனது இயற்கை உணவான தாய்ப்பாலைப் போன்றது அது; லகுவாக ஜீரணமாகும்.




நம்புங்கள்

**LACTOGEN** லாக்டோஜென்

தாய்ப்பால் இல்லாதபோது

---

இலவச லாக்டோஜென் போல்டர் பெற இந்தக் கூப்பனை எழுதி தபாலில் இவ்விலாசத்துக்கு அனுப்புக:

*நெஸில்ஸ் புராடெக்ட்ஸ் (இந்தியா) லிட்., தபால் பெட்டி 396, கல்கத்தா.*

பெயர்.................................

விலாசம் .................................

.................................

LG/G/7

---

# B.I.S.N.CO.LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

## S. S. "ரஜுலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 மார்ச் 3உ

நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 மார்ச் 4உ

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள்:

**சென்னையிலிருந்து 3-3-54:** *பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.*

**நாகப்பட்டினத்திலிருந்து 4-3-54:** *பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.*

*சென்னையில் ஏறும் பிரயாணிகள் 3-3-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.*

*பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி விரும்பதால் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இனாகுலேஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லுபடியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.*

| | |
|---|---|
| பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட்<br>7, அரமனைக்காரத் தெரு, மதராஸ் | மதுரா கம்பெனி லிமிடெட்<br>முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம் |

தும் முதல் காரியமாக மனோரமாவைத்தான் நினைத்துக் கொண்டார். மெல்லிய குரலில் வாய் நிறைய அவள் பெயரைப் பல தடவைகள் சொல்லிக் கூப்பிட்டார்.

வேலைக்காரி லக்ஷ்மிக்கு மனோரமா எங்கே யிருக்கிறாள், என்ன செய்கிறாள் என்பதெல்லாம் நீரத்தெரிந்த விஷயம்தான். ஒற்றனைப் போல் மனோரமாவின் ஒவ்வொரு செயலையும் கண்காணிப்பதைத் தானே அவள் தன் பெரும் காரியமாகக் கொண்டிருந்தாள்! மனோரமா தன் உள்ளத்துப் புண்ணுக்கு மருந்து வைத்துக் கட்டிக் கொள்ளவோ, அல்லது உள்ளத்துப் புண்ணைக் குத்திக் கிளறிக் காய வொட்டாமல் மேலும் புதிதாக்கிக் கொள்ளவோ, சுதாகரின் அறைக்குள் போயிருக்கிறாள் என்பது அவள் அறிந்த விஷயம் தான். இருந்தாலும் அவள் ஒன்றும் தெரியாதவள் போல் பேசாமலே இருந்தாள். மனோரமாவின் உள்ளத்து உணர்ச்சிகளைக் கண்ணுற்று அநுதாபம் காரணமாகப் பேசாமல் இருந்தாளா? அல்லது மனோரமாவின் மனோ பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ள எண்ணி அவள் வாளாவிருந்தாளா என்பது யாராலுமே கண்டு கொள்ள முடியாத விஷயம். 'பெண் உள்ளம் பிறரால் புரிந்து கொள்ள முடியாத பொருள். கரை காண இயலாத கடல்!' என்று ஆன்றோர்கள் கூறிச் சென்றிருப்பது எங்கேயாவது பொய்க்குமா?

ஆனால் அவளாலும் வெகு நேரம் வரை உள்ளத்தை அடக்கிக் கொண்டு இருதயத்தின் எழுச்சியைக் காட்டிக் கொள்ளாமல் நிற்க முடிய வில்லை. மாதவப் பிரஸாத் மயக்க முற்ற நிலையிலும் கூட 'மனோரமா! மனோரமா!' என்ற மனோரமாவை ஸ்மரணை செய்த வண்ணமாகவே இருந்தார். அவருடைய அந்தப் பரிதாப நிலையைக் கண்ட பின்னரும் லக்ஷ்மியினால் பேசாமல் நிற்க முடிய வில்லை. எனவே, புதிய விருந்தாளி வந்து இறங்கியிருந்த அறையை நோக்கிச் சென்றாள். அவளுடைய கால்கள் அங்கு சென்றதும் சிறிது திகைத்தன; தயங்கின. கொஞ்ச நேரம் மறைவில் நின்று கொண்டு உள்ளே யிருப்பவர்களைக் கூர்ந்து கவனித்தாள். இருவரும் பேசிக் கொண்டிருந்த பேச்சுக்கூட அரை குறையாக அவளுடைய காதில் விழுந்தன.

சுதாகருடன் தானும் புறப்பட்டு வந்து விடுவதாக மனோரமா சொன்னதைக் கேட்டதும் அவளால் அங்கே நிற்க முடியவில்லை. தன்னை யறியாமல் யந்திரம்போல் அவர்களிருவரும் இருக்கும் அறைக்குள் சென்றாள். சென்றதோடு மட்டும் அல்ல; சொல்ல வேண்டியதைச் சொல்லியும் தீர்த்தாள்.

அச்சமயம் சுதாகரும் மனோரமாவும் இன்ப நினைவுகளில் லயித்திருந்தனர்; அன்புக் கடலில் ஆழ்ந்திருந்தனர். ஆனால் மாதவப் பிரஸாதைப் பற்றிக் கேள்விப்பட்ட அந்தச் செய்தி அவர்களைத் தூக்கி வாரிப்போடச் செய்தது. இருவருடைய இருதயத்திலும் மனிதத் தன்மை இடம் பெற்று ஓங்கியது. மனிதத்தன்மைக்கு இருக்கும் சக்தி அபாரமானது; எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றது. மனத்தில் மனிதத்தன்மை புகுந்து விடவே, கடந்த கால இன்ப நினைவுகள் எல்லாம் ஒருபுறம் ஓடி மறைந்தன. மனத்தில் புகுந்த மனிதத்தன்மையும் அதை ஓட ஓட விரட்டி விட்டுத்தான் மறு காரியம் பார்த்தது. மாதவப் பிரஸாதின் அபாய நிலைமையைக் கேட்கவே, அவர்கள் கதி கலங்கி விட்டனர்.

அன்பு என்பது உலகத்திலேயே உயர்ந்த பொருள்; உணர்ச்சி மிகுந்த பொருள், உள்ளத்தையும் உடலையும் கொள்ளை கொண்ட பொருள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் மனிதத் தன்மையும் இரக்க உணர்ச்சியும் இருதயத்தில் இடம் பொத்திக் கொள்ளத் தொடங்கி விட்டால், அந்த அன்பைக்கூடத் தியாகம் செய்ய வேண்டி யிருக்கிறது. ஏனெனில் அன்புக்கும் மேலான உணர்ச்சி இரக்க உணர்ச்சியும் மனிதத் தன்மையும் ஆகும். இல்லா விட்டால் இருவரும் அப்படி விழுந்தடித்துக் கொண்டு வந்திருப்பார்களா?

மாதவப் பிரஸாதின் கட்டிலுக்கு அருகில் இருவரும் மூச்சு வாங்க வந்து நின்றனர். அப்பொழுதும் மாதவப் பிரஸாதின் விழிகள் மனோரமாவைத் தேடிக் கொண்டிருந்தன. அதைப் புரிந்து கொள்ள மனோரமாவுக்கும் சிரமம் ஏற்படவில்லை; சுதாகருக்கும் சிரமம் ஏற்படவில்லை. படபடக்கும் இருதயத்துடன் மனோரமா இமை கொட்டாமல் நின்றாள்.

"எசமானி அம்மா! இன்னும் கொஞ்சந் தான் கிட்டப் போங்களேன்!" என்றாள் லக்ஷ்மி இடக்காக.


மனோரமா அவள் பேச்சுக்குப் பதில் பேசப் பேசாமல் கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டாள். மாதவப் பிரஸாத் மெதுவாக மனோரமாவின் கையைத் தம் கையில் ஏந்திக் கொண்டார். மனோரமா முன்போல் உதறிக் கையை விடுவித்துக் கொள்ள முயலவில்லை. 'என்னைத் தொடாதீர்கள்!' என்று கூறி எதிர்வாதம் புரியவும் மாதவப் பிரஸாதின் மனத்தை முறிக்கவும் முயற்சிக்க வில்லை. தனது இன்னொரு கையினால் மாதவப் பிரஸாதின் முகத்தை மூடி மறைத்துக் கொண்டிருந்த தலை மயிரை மெதுவாகக் கோதி அகற்றி விட்டாள்.

அவளுடைய கை பட்டதும் மாதவப் பிரஸாதின் படபடப்புக் கொஞ்சம் குறைந்தது; வேதனை சற்றுத் தணிந்தது. அவளுடைய கர ஸ்பரிசம் மிகவும் இதமாகத் தோன்றவே, ஆயாசத்துடன் அவர் தம் கண் இமைகளை மூடிக் கொண்டார்.

இதே சமயம் மனோரமாவின் கண்கள் சுதாகருடைய கண்களுடன் ஒரு கணம் உறவாடின. ஆனால் சட்டென்று மனோரமா தன்னுடைய கண்களை வேறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

(தொடரும்)

# பிரஷால் தேய்ப்பதால்
# கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஈறுகளைப் பலப்படுத்துகிறது




## இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்....கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது...அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!


...பலமான ஈறுகள் புதிய, இனிய சுவாசம் பெற...சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே மிகப் பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

### பாக்டீரியாவை ஒழிக்கிறது!

எனுமலை அறிக்கும் தீய அமிலங்களையும் ... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

### ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் உதவுகிறது.




* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

**புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்**



# சொக்கன் சொன்ன கதை

புஷ்யன்

அன்று தனியே பூங்காவில் உட்கார்ந்து கொண்டு ரேடியோவில் வந்த இனிய கானமுதத்தைப் பருகிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒருவன் என்னிடம் வந்து, "ஐயா, காலணா தருமம் செய்யுங்கள்" என்று கெஞ்சினான்.

அமுத கீதத்தை ஆனந்தமாய்ப் பருகிக் கொண்டிருக்கும் போது அவனுடைய கூக்குரல் எரிச்சலை உண்டாக்கியது. "போடா, போ, ஒன்றுமில்லை" என்றேன்.

சற்று நேரத்துக்குப் பின் என்னிடம் காசு கேட்ட அதே மனிதன் பூங்காவி லிருந்த ஒவ்வொருவரிடமும் கையை நீட்டிக் கொண் டிருந்ததைப் பார்த்தேன். எல்லோரும் 'போ, போ' என்று விரட்டினர்.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவனுக்கு வயது உண்மையில் முப்பத்தைந்துதான் இருக்கும்.

ஆனால் வறுமை பத்து வயது அதிக மாகவே காட்டியது. கையும், காலும் உறுதி யாக இருந்தாலும் அவனுடைய வறுமை 'பளிச்'சென்று தெரிந்தது. தலை பரட்டை யாய்ப் பிசுக்கேறி அழுக்கடைந்து கிடந்தது. முழங்காலுக்கு மேல் ஒரு துண்டைக் கட்டிக் கொண்டிருந்தான். அதில் இரண்டு மூன்று இடத்தில் கிழிசல். தாடியும், மீசையும் பாதி நரைத்துப் போயிருந்தன.

ரேடியோவில் சுவாரஸ்யம் குறைந்து விட்டதால் நான் அந்த மனிதனைக் கூப்பிட் டேன். அவன் ஆவலுடன் வந்தான்.

"உட்கார்" என்றேன்.

"உட்கார்ந்தால் என் பிழைப்பு கெட்டு விடுமே. வயிறு காயுதே" என்றான். அவன் குரலில் சோக ரசம் ததும்பியது.

"உட்காரப்பா, நான் கேட்கும் கேள்விக் குப் பதில் சொல். உண்மையைச் சொல்ல வேண்டும். உனக்குப் பசி போகப் பணம் தருகிறேன்" என்றேன்.

அவன் ஆச்சரியத்துடன் பார்த்தான்.

"நீ பஞ்சத்து ஆண்டியா, பரம்பரை ஆண்டியா?" என்று கேட்டேன்.

அவன் திடுக்கிட்டு, "ஏன்? சாமி..." என்று கேட்டான்.

"நான் கேட்டதற்குப் பதில் சொல்."

"எல்லாம் வயிற்றுக் கொடுமைக்காகத் தான் பிச்சை எடுக்க வந்தேன். நானும் ஒரு காலத்தில் சுகமாய் வாழ்ந்து கொண்டிருந்த வன்தான்" என்றான்.

"இவ்வளவு உடலுறுதியுடன் இருக்கி றாயே? ஏதாவது கூலி வேலை செய்து பிழைக் கப்படாதா?" என்று கேட்டேன்.

"நீங்கள் சொல்வது சரிதான் சாமி. என் கதையைக் கேளுங்க தெரியும்" என்றான்.

"சரி சொல்லு..." என்றேன்.

அவன் கூறினான்: "எங்கள் ஊர் வேலூ ருக்குப் பக்கத்திலே நாவலூர் என்கிற கிராமம். அங்கே நான் சௌக்கியமாய், சந் தோஷமாய் வாழ்ந்து வந்தேன். என் தந்தைக்கு நான் ஒரே பிள்ளை. இரண்டு ஏக்கரா நிலம் இருந்தது. அதைப் பயிரிட்டும், மாடு, கன்று வைத்துக்கொண்டு அதில் பால் வியாபாரமும் செய்து வந்தார். நான் கவலை அறியாமல் வளர்ந்தேன். 'பருவ வயது வந் தது. எதிர்த்த வீட்டுச் செல்லன் பெண் செந்திரு அழகாய் இருப்பாள். அவளும் மாடு மேய்க்க வந்து விடுவான். எங்கள் இரண்டு பேருக்கும் இருந்த அன்பை அப்படி, இப்படி என்று சொல்ல முடியாது.

எங்கள் சிநேகிதத்தைப் பார்த்த என் தந்தையும், செந்திருவின் தகப்பனாரும் எங்களுக்குக் கல்யாணத்தையும் முடித்து விட்டார்கள். நானும் செந்திருவும் அடைந்த ஆனந்தத்தை என்னவென்று சொல்லுவது?

என் தந்தையும் அம்மாவும் கொஞ்ச நாள் நாங்கள் சந்தோஷமாய் வாழுவதைப்பார்த்து விட்டுப் போய் விட்டார்கள். அவர்கள் போனதும் தான் எனக்குக் கஷ்ட காலம் ஆரம்பித்து விட்டது. எங்கள் ஊருக்குப் பட்டணத்திலே இருந்து வேறு வந்தான். அவன் எங்கள் ஊரில் இருந்த கறுப்பண்ணன் என்பவருடைய பிள்ளை. அவன் நாலு வருஷங்களுக்கு முன்னே கிராமம் பிடிக்கவில்லை என்று பட்டணத்துக்கு ஓடிவிட்டான். சில வருஷங்களுக்குப் பிறகு இப்போது தான் திரும்பி வந்தான். அவன் போட்டிருந்த கால் சட்டையும், சொக்காயும், பேசுகிற பேச்சும் என்னை மயக்கி விட்டன. அவன் எனக்கு மிகவும் சிநேகமாகி விட்டான். அவன் பட்டணத்தில் ஏதோ ஒரு ஆலையில் வேலை செய்து கொண்டிருந்தான்.

அவனைப் பார்த்தவுடன் எனக்கும் பட்டணத்தில் போய் ஜோராய் வாழ வேண்டும் என்று ஆசை உண்டாகி விட்டது. அதற்குச் சரியாய் மழையே பெய்யாமல் பூமியும் காய்ந்து கொண்டே வந்தது. ஊரில் இருந்த நிலத்தை விற்று விட்டுப் பட்டணத்துக்கு வந்தேன். அதிசயம் பாருங்கள். உடனே எனக்கும் அந்த வேலு வேலை பார்த்துக் கிட்டிருந்த ஆலையிலேயே வேலை கிடைச்சுது. சென்னையில் குளையிலே ஒரு சின்ன வீட்டில் வாடகைக்கு இருந்தேன். காலையில் ஏழு மணிக்கெல்லாம் ஆலைக்குப் போய்ச் சாயந்திரம் ஆறு மணிக்கு வீடு வந்து சேருவேன். பட்டணத்துக்கு வந்த புதிதில் ஒரு நாள் விட்டு ஒரு நாள் சினிமாவுக்குப் போவேனும். செந்திருவையும் அழைத்துக் கொண்டு கடற்கரைக்குப் போனேன். கொஞ்ச நாட்கள் பட்டண வாசம் ஜோராகத்தான் இருந்தது. ஆனால் செந்திரு மட்டும் முணு முணுத்துக் கொண்டே இருந்தாள்.

பட்டணத்துக்குவந்த ஒருவருஷம் கழித்துச் செந்திரு கர்ப்பமானாள். எனக்குச் சந்தோஷம் பொங்கியது. நான் ஒரு தகப்பனாகப் போகிறேன் என்று ஆனந்தம். ஆனால் அது நீடிக்கவில்லை. பிரசவம் மிகவும் கஷ்டப்பட்டுக் குழந்தை இறந்து பிறந்தது. செந்திரு அன்று முதல் துர்ப்பலமானாள். அதற்குப் பிறகு இரண்டு தரம் கர்ப்பச் சிதைவு ஏற்பட்டது. கடைசியில் அவளை க்ஷய ரோகம் பிடித்துக் கொண்டது. அவளுக்கு என்னாலான வைத்தியம் எல்லாம் பார்த்தேன். நிலம் விற்ற பணம் எல்லாம் கரைந்து விட்டது. அந்தச் சமயத்தில், அது போதாதென்று, எங்கள் ஆலையில் வேலை நிறுத்தம் நடந்தது. மிகவும் திண்டாடினோம். ஒரு மாசம் கழித்து மில்லைத் திறந்தார்கள். ஆனால் எனக்கு வேலை போய் விட்டது. வேலை நிறுத்தத்தால் வேலை இழந்தவர்களில் நானும் ஒருவன். வீட்டில் இருந்த தட்டு முட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக விற்றுத் தீர்ந்தது.

இந்த வேளையில் வீட்டு வாடகை பாக்கி என்று மீதி இருந்த சாமான்களையும் வீட்டுச் சொந்தக்காரர் எடுத்துக் கொண்டார்.

கையில் காலணா இல்லாமல் திரிந்தேன். எங்கெங்கோ வேலை தேடினேன். கிடைக்கவில்லை. கூலி வேலைக்குத் தயாரானேன். ஆனால் அங்கேயும் போட்டி. வயிறு காய்ந்தது. என் மனம் வெறுத்து விட்டது. கடைசியில் வேறு வழியில்லாமல் துணிந்து கையேந்த ஆரம்பித்தேன்" என்று கூறி விட்டு ஒரு நீண்ட பெரு மூச்சுவிட்டான்.

• • •

அவன் கதையைக் கேட்டு மிகவும் பரிதபித்தேன். பட்டண மோகம் அவனை எப்படி பலி கொண்டு விட்டது. கிராமத்தில் இருந்தால் நிலமும் நீர்சுமாக எவ்வளவு ஆனந்தமாய்க் காலம் கழித்துக் கொண்டிருப்பான் என்று எண்ணினேன்.

"இதோ, பார்! அங்கு மூலையில் ஒரு பெரிய கடை வைத்திருக்கிறானே, அவன் என் கண் முன் ஐந்து வருஷங்களுக்கு


பெரிய குடும்பங்களுக்கும் குறைந்த செலவில் சிறந்த உதவி
இளநரை, வழுக்கை தடுக்க
காஷ்மீர்-குஸும்
அடர்ந்த கூந்தலை அடைய
நீங்கள் உபயோகிக்கும் எண்ணெயில் ஊறவைக்கவும்.
காஸ்மஸ்
கர்ஜன்
பாலக்ஸ்
நஞ்சன்கூடு-பல்பொடி
பாக்டீரியாரின்
54 அரிய குடும்ப மருந்துகள்
எங்கும் கிடைக்கும்
ஜ்வரேக்
காலரெக்ஸ்
ஜிஞ்சிப்
குழந்தைகளுக்கு: காஸ்மஸ் (கஸ்தூரி மாத்திரை) கர்ஜன் (கோரோஜனை மாத்திரை) பாலக்ஸ்
(சேகிழும், வியாதி விவரம் எழுதியும் சிகிச்சை பெறலாம்)
சோல் ஏஜண்டு: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, சென்னை-1 (மதுரை, கோவை, பம்பாய் 19)

முன் கையில் காலணு இல்லாமல் இருந்தான். அவனுக்கு ஒரு ஐந்து ரூபாய் கிடைத்தது. அதை வைத்துக் கொண்டு ஏதோ வேடிக்கை சாமான்களை வாங்கிச் சைனு பஜாரில் விற்று வந்தான். கொஞ்சம் மூலதனம் சேர்ந்ததும் பெட்டிக் கடை வைத்தான் இங்கே. பெருகிப் பெருகி அவன் கடை இப்போது இந்தப் பேட்டைக்கே பிரபலமானதாகி விட்டது.

"உன் கதை எனக்குப் பரிதாபமாக இருக்கிறது. இந்தா, பத்து ரூபாய். இதை வைத்துக் கொண்டு சின்னதாய் ஏதாவது வியாபாரம் செய். செட்டாய்ச் செலவு செய்து பெருக்கிக் கொள்" என்றேன்.

நான் பத்து ரூபாய் நோட்டாக அவனிடம் நீட்டியதும் அவன் கண்களில் உண்டான ஒளியை என்னவென்று கூறுவது!

அவன் நான் கொடுத்த ரூபாயை நடுங்கும் கரங்களால் பெற்றுக் கொண்டு, கண்ணில் ஒற்றிக் கொண்டான். பிறகு என்னைப் பார்த்துக் கைகூப்பி வணங்கினான். உணர்ச்சி மிகுதியால் அவனால் பேச முடியவில்லை.

எனக்கேற்பட்ட மகிழ்ச்சிக்கும், மனத் திருப்திக்கும் அளவே யில்லை.

* * *

**ஏ**ழெட்டு மாதங்களுக்குப் பிறகு.

அன்று திருவல்லிக்கேணிக் கடற்கரையில் உட்கார்ந்திருந்தேன். "சாமி, காலணு!" என்று என் பின்னால் யாரிடமோ கைநீட்டிய குரல் பழக்கமானதாக இருந்தது போல் தோன்றவே திரும்பிப் பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அன்று நான் பூங்காவில் பார்த்துப் பத்து ரூபாய் கொடுத்த அதே சொக்கன் தான். அவன் மறுபடியும் தன் பழைய தொழிலைச் செய்து கொண்டிருப்பதைக்கண்டதும் எனக்கு மிகுந்த கோபம் உண்டாயிற்று. அன்று சொக்கன் தன் சோகக் கதையைக் கூறவே நான் மனமிரங்கி, அவன் கதையை நம்பி, அவன் மானமாய்ப் பிழைக்கட்டும் என்று பத்து ரூபாயைச் சுளையாக எடுத்துக் கொடுத்தேன். ஆனால் இன்று அவன் இன்னும் கைநீட்டிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவன் பஞ்சத்து ஆண்டியல்ல, பரம்பரை ஆண்டிதான். நான்தான் ஏமாந்து அவனுக்குப் பத்து ரூபாயைக் கொடுத்து விட்டேன் என்று ஆத்திர மடைந்தேன்.

"டேய், சொக்கா" என்று கூப்பிட்டேன். அவன் என்னைப் பார்த்ததும் அடையாளம் கண்டு கொண்டான். "சாமி" என்று என்னிடம் ஓடி வந்தான்.

"என்னடா, பித்தலாட்டமா பண்ணுகிறாய்? யோக்கியமாய் இனி பிழைப்பேன் என்று கூறினாயே. நீ சொன்ன கதையெல்லாம் பொய் தானே. என்னை ஏமாற்றி விட்டாயே" என்று ஆத்திரத்துடன் மொழிந்தேன்.

"சாமி, நீங்க நல்ல மனசுடன் தான் பத்து ரூபாய் கொடுத்தீங்க. ஆனால் இந்த உலகம் பொல்லாதது சாமி!" என்றான்.

அவன் கூறுவது புதிர் போடுவது போல் இருந்தது. "டேய், என்ன சொல்கிறாய்? நான் கொடுத்த பத்து ரூபாயை என்ன பண்ணினாய்?" என்று கேட்டேன்.

"அதையேன் கேட்கிறீங்க, சாமி. நீங்க கொடுத்த பத்து ரூபாயைக் கையில் வாங்கியதும் எனக்கு எத்தனை சந்தோஷம் உண்டாயிற்று தெரியுமா? இந்தப் பத்து ரூபாயை, நூறு, ஆயிரம், பதினாயிரமாக்குவேன் என்று எண்ணிப் பூரித்து விட்டேன். முதலில் பசியாயிருந்ததால் ஏதாவது சாப்பிடலாம் என்று ஒரு கடைக்குப் போய்ச் சில்லறை மாற்றப் போனேன். என் கையில் பத்து ரூபாய் நோட்டைக் கண்டதும் அந்தக் கடைக்காரர் என்னைச் சந்தேகத்தோடு பார்த்தார்.

'டேய்! எங்கேடா கிளப்பிக்கிட்டு வந்தே? சொல் உண்மையை' என்று கேட்டார். நான் பதில் சொல்வதற்குள் பக்கத்திலிருந்த ஒருவர், 'அடேய், அகப்பட்டுக் கிட்டாயா? அங்கே கூட்டத்தில் என்மேல் இடித்துக் கொண்டு போனாயே அப்போதே சந்தேகப் பட்டேன். ஜேபியைப் பார்த்தால் பத்து ரூபாயைக் காணோம். அதற்குள் மறைந்து விட்டாயே! உன் துரதிர்ஷ்டம்தான் நான் வந்த கடைக்கே நீயும் வந்து விட்டாய்...' என்று கூறி என் கையிலிருந்த பத்து ரூபாய் நோட்டைப் பிடுங்கிக் கொண்டார்.

நான் அவரிடம் உண்மையைக் கூறினேன். அவர்கள் நம்ப வில்லை. 'எந்தத் தர்மப் பிரபுடா உனக்கு மனமிரங்கிப் பத்து ரூபாயைத் தாராளமாய்த் தூக்கிக் கொடுத்தது? பொய் சொல்லுவதையும் பொருந்தச் சொல்லுடா' என்றார் ஏகத்தாளமாக.

அதற்குள் போலீஸ்காரர் அங்கு வந்து சேர்ந்தார். இருவரையும் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துக் கொண்டு போனார். அவர் தன்னுடைய பத்து ரூபாய் நோட்டை நான் ஜேப்படி செய்தேன் என்று பிரமாணம் செய்தார். அவர்தான் ஜெயித்தார். எனக்குச் சாட்சியாக உங்களை நான் எங்கே என்று தேடுவேன்? கடைசியில் ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை அளித்தார்கள். வெளியில் வந்தேன். தண்டனைக் காலம் முடிந்ததும், நான் 'கேடி'களின் கோஷ்டியில் சேர்க்கப் பட்டு விட்டேன். இனிமேல் நான் முயன்றாலும் முன்னுக்கு வர முடியாது" என்று கூறி முடித்தான்.

**அ**வன் கூறியதைக் கேட்டு நான் திகைத்தேன். என்ன சொல்வதென்றே புரிய வில்லை. ஆம், நான் அவனுக்கு ஒருவேளைச் சாப்பாட்டுக்கு வேண்டிய பத்தணாவைக் கொடுத்துச் சாப்பிடச் சொன்னேன். அவன் காசை வாங்கிக் கொண்டு போய் விட்டான்.

அவன் கூறியதெல்லாம் உண்மைதானா? கற்பனையா யிருந்தால் அவனுடைய கற்பனைத் திறனுக்கு நான் கொடுத்த பத்து ரூபாய் தகும் என்று நினைத்துச் சமாதானம் செய்து கொண்டேன்.

DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA

DALMIA, DALMIA, DALMIA

DALMIA, DALMIA, DALMIA, DALMIA

# ரீயின்போர்ஸ்டு
# சிமெண்ட் காங்க்ரிட் குழாய்கள்

உறுதியும் நம்பிக்கையும் வாய்ந்தவை

(ஒரு டால்மியா தயாரிப்பு)

## டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட்

டால்மியாபுரம் — திருச்சிராப்பள்ளி

இந்தியன் ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட், கவர்ன்மெண்ட், ரயில்வேக்கள், முனிசிபாலிடிகள் முதலிய ஸ்தாபனங்களுக்கு சப்ளை செய்வோரின் அங்கீகரிக்கப்பட்ட ஜாபிதாவிலுள்ளது.

DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA — DALMIA




## நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்

இவற்றினின்று துரிதமாக நிவர்த்திபெற

"என் தொண்டை ரணத்தினால் என்னால் விழுங்கவே முடியவில்லை"
ஆனால்

# பெப்ஸ்

அதை சமனமாக்கி குணப் படுத்தியது.





பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே நேராகச் சென்று வேலை செய்கின்றன. இதனால் தான் பெப்ஸை கண்ட குணமுதமாயும்; உடனே பிரசித்திப் பெற்றும் விளங்குகிறது பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன், இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

**PEPS**

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க்டவுன்

## பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தாரீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுபிசுக்காது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடேர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழவழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஆயிரக் கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



BEFORE AFTER

புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார்: "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடேர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாதவரை நிக்ஸோடேர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி.




# 4

**ம**று நாள் காலை. சுந்தரி அவள் அறையில் அசையாமல், அலுங்காமல் படுத்திருந்தாள். தலையில் ஒரு கட்டு கட்டி யிருந்தது. கட்டில் ஓரமாக இருந்த ஜன்னல் கதவை மெதுவாகத் திறந்தாள். பால சூரியனின் பொன் மயமான இன்ப ஒளி அறையில் புகுந்து எட்டிப் பார்த்தது. சுந்தரி ஒரு கையில் சூரிய கிரணத்தைத் தடுத்தாள். அப்பொழுது அவள் பொன் நிறமேனி பளபளவென்று மின்னியது. அதைப் பார்த்துக் கொண்டே லேசாகப் புன்னகை செய்தாள்.

அப்படியே ஜன்னலுக்கு வெளியே ஆகாயத்தைப் பார்த்தாள். பறவைகள் இறக்கைகளை அடித்துக் கொண்டு வேகமாகப் பறந்து சென்று கொண் டிருந்தன. அவைகளோடு போட்டி போடுவதுபோல் மேகக் கூட்டங்களும் பறந்து கொண்டிருந்தன. சில மேகங்கள் வெள்ளை வெளேரென்று இருந்தன; சில கறுப்பு நிறமாயுமிருந்தன. சுந்தரி சிந்தனையில் ஆழ்ந்த வண்ணம் மேகங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள். முதல் நாள் ஏற்பட்ட அதிர்ச்சியினாலும் மண்டையில் ஏற்பட்ட சிறு காயத்தினாலும் இரவில் நல்ல தூக்கமில்லை. அதனால் அவள் தலை கனத்துக் கண்கள் சற்று வீங்கியிருந்தன. அவள் இதயத்திலே அபூர்வமான இன்பம் குடி கொண் டிருந்தது. முகத்தில் பிரகாசமான ஒளி வீசியது.

படுத்த படியே தன் எதிரிலிருந்த சுவரைப் பார்த்தாள். அங்கு இனியனின் படம் மாட்டியிருந்தது. ஒரு கணம் கண்களை இமைக்காமல் அந்தப் படத்தைப் பார்த்தாள். இனியன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைப் பார்த்துப் புன்னகை செய்த வண்ணம் கம்பீரமாக நின்று கொண் டிருப்பதாகவே அவளுக்குத் தோன்றியது.




அதே சமயத்தில் அறையின் கதவைத் திறந்து கொண்டு யாரோ வருவதுபோல் சத்தம்கேட்டது. சுந்தரி திரும்பிப் பார்த்தாள். அவள் தந்தை வந்து கொண்டிருந்தார். சுந்தரியைப் பார்த்து "நன்றாகத் தூங்கினாயா! தலைவலி எல்லாம் எப்படி இருக்கிறது!" என்று கேட்டார்.

"இப்பொழுது ஒன்றும் வலி இல்லை அப்பா, சுகமா யிருக்கிறேன்" என்றாள் சுந்தரி.

"மாணிக்கமும், இனியனும் என்ன அருமையான பிள்ளைகள். நேற்று அவர்கள் ரொம்பவும் கஷ்டப் பட்டார்கள்" என்றார்.

அப்பொழுது அறைக் கதவைத் திறக்கும் சத்தம் கேட்டது. மாணிக்கமும் இனியனும் உள்ளே வந்தார்கள். முகத்தைத் தடவிக் கொண்டே சுந்தரியைப் பார்த்து இனியன் சிரித்தான். மாணிக்கமும் பல்லெல்லாம் தெரியச் சிரித்தான்.

சுந்தரியின் தந்தை "வணக்கம். வாருங்கள்" என்று கைகூப்பி வரவேற்றார்.

சுந்தரி படுக்கையில் முழங் கைகளை ஊன்றிக் கொண்டே உடம்பைச் சற்றுத் தூக்கி "வர வேணும் வரவேணும்" என்று முகமன் கூறினாள். தன் தந்தைக்குப் பக்கத்தில் இருந்த நாற்காலிகளைக் காண்பித்து அதில் உட்காரச் சொன்னாள்.

"டாக்டர் பிறகு வந்தாரா, என்ன சொன்னார்!" என்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டே ஆவலோடு கேட்டான் இனியன்.

"ஒன்றும் அபாயமில்லை. இரண்டு நாளில் சரியாகிவிடும் என்று சொன்னார்" என்றாள் சுந்தரி.

"நீங்கள் இங்கு வந்ததே எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. உங்கள் முகத்தையும், சுறு சுறுப்பாக விளங்கும் கண்களையும், உயர்ந்த குணத்தையும் பார்ப்பதே எனக்கு இன்பமா யிருக்கிறது. நேற்று உங்களுக்குத் தொந்தரவு இல்லையா!" என்றார் சுந்தரியின் தந்தை.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை" என்று மெதுவாகச் சொன்னான் இனியன்.

சுந்தரி அப்பொழுது இனியனைப் பார்த்தாள். அவன் அழகிய முகத்தையும், பள பள வென்று மின்னிக் கொண்டிருந்த கண்களையும், புன்னகையோடு பொலிந்து கொண்டிருந்த உதடுகளையும் பார்த்தாள். அறையில் மகிழ்ச்சி நிலவியிருந்தது; அன்பு மயமான ஒரு புதிய ஒளி பரவி யிருந்தது. அந்த அபூர்வ ஒளி சுந்தரிக்குத் தெம்பைக் கொடுத்தது.

சுந்தரியைக் கவனித்துக் கொண்டு இருந்த டாக்டர் உள்ளே வந்தார். வேகமாக அடியெடுத்து வைத்துக் கொண்டே வந்தார். சுந்தரியின் படுக்கை அருகில் சென்று அவள் கையைப் பிடித்து நாடியைப் பார்த்தார். தலையில் இருந்த கட்டை அவிழ்த்து விட்டார். பிறகு சற்று விலகி நின்று, "எல்லாம் சரியாகி விட்டது. ஒரு நாளைக்குப் பேசாமல் படுத்திருக்க வேண்டும். மண்டையில் இனி கட்டு வேண்டும் என்ற அவசியம் இல்லை. வெறும் 'பிளாஸ்திரி'யே போதும்" என்று சொல்லி விட்டுச் சென்று விட்டார். 'டக் டக்' என்று டாக்டரின் பூட்ஸ் சத்தம் கேட்டது. அறையில் இருந்த மூவரும் சுந்தரியை மலர்ந்த முகத்துடன் பார்த்தவண்ணம் நின்று கொண்டிருந்தனர்.

சுந்தரியின் தந்தைக்கு இனிமேல் அங்கு வேலை இல்லை என்பது தெரிந்தது. அவர் இனியனையும், மாணிக்கத்தையும் பார்த்து வணக்கம் செலுத்தி விட்டு, அறைக் கதவைத் திறந்து கொண்டு எங்கோ அவசரமாகப் போய் விட்டார்.

இனியன் அந்த அறையில் இருந்த ஒவ்வொரு பொருளையும் பார்த்து ஒரு குழந்தையைப் போல ஆனந்தப்பட்டுக் கொண்டிருந்தான். "அடாடா! இந்த அறையில் என்ன என்னவோ அழகான பொருள்கள் எல்லாம் இருக்கின்றனவே" என்று அங்கிருந்த ஒவ்வொரு பொருளையும் காட்டி இன்ப எழுச்சியுடனே பேசினான்.

சுந்தரி புன்னகை செய்தாள். "நேற்று ரொம்ப அழகாகப் பேசினீர்கள். உங்கள் பேச்சு என் மனத்தை மாற்றி விட்டது. நான் இனிமேல் ஏழை எளியவர்களுக்கு என்னால் ஆன தொண்டுகளைச் செய்யப் போகிறேன்" என்றாள்.

"உன்னைப் பார்த்தால் ஏழை எளியவர்களைப் பார்த்துக்கூட இருக்க மாட்டாய் போல் தோன்றுகிறது. உன் குடும்பமும் பெரிய குடும்பம். உன்னை அவர்கள் வளர்த்திருக்கும் விதத்தைப் பார்த்தால் பஞ்சம், பசி, பட்டினி இவை ஒன்றையும் நீ கனவு கண்டிருக்க மாட்டாய் என்று நினைக்கிறேன். இருந்தாலும் உன் பேச்சிலே ஏழைகளின் துயரத்தையும், அவர்கள் வேதனையையும் படம் பிடித்துக் காட்டி விட்டாய்" என்றான் மாணிக்கம்.

இனியன் கிராமத்து ஏழை மக்களைப் பற்றியும், நகரத்துப் பட்டினிப் பட்டாளத்தைப் பற்றியும் அவர்களுக்கு விவரித்துச் சொல்ல ஆரம்பித்தான்:

"நீங்கள் கல்லூரியில் உல்லாசமாகப் படிக்கிறீர்கள். நீங்கள் படிக்கும் படிப்புக்கும் நம் நாட்டு நிலைக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. பெற்றோர்கள் கேட்டபோதெல்லாம் பணம் கொடுத்து வருகிறார்கள். உங்களுக்கு எங்கே கஷ்டம் தெரியப் போகிறது! பொதுவாகப் பெரும்பாலான மக்களைப் பசி நிழல்போலத் தொடர்கிறது. அவர்களுக்குப் பசி ஆறச் சோறு கிடைக்கும் என்ற நம்பிக்கையே கிடையாது. பசியால் அவர்கள் உள்ளம் சோர்ந்து விடுகிறது. அதனால் அந்த ஏழை மக்களின் முகத்தில் மனிதக் களையே போய் விடுகிறது. மக்கள் எல்லாரும் வாழவில்லை. பலதரப்பட்ட வேதனைகளால் வாடித் துடிக்கிறார்கள். அவர்களை நல்ல வழியில் அழைத்துச் செல்ல வேண்டும். அவர்கள் மனத்திலே உயர்ந்த எண்ணங்கள் தோன்ற வழி செய்ய வேண்டும்" என்றான்.

இப்படிப் பேசிவிட்டுச் சிறிது நேரம் மௌனமாக இருந்தான். "அதெல்லாம் நம்மைப் போன்ற வாலிபர்கள் செய்ய வேண்டிய கடமைகளில் முக்கியமானது. வாலிபர்கள் உழைக்க வேண்டும். நாட்டு நலம் கருதி, மக்கள் முன்னேற்றத்தை நாடிப் பாடுபட வேண்டும். ஆனால் வாலிபர்கள் எல்லாரும் இப்பொழுது முழுச் சோம்பேறிகளாக இருக்கிறார்கள்" என்றான்.

"நான் அப்படி இல்லை" என்றான் மாணிக்கம்.

"உனக்குச் சொல்லவில்லை. எந்தத் தனி மனிதனைப் பற்றியும் சொல்லவில்லை. நம் நாட்டில் இன்றுள்ள பொதுவான நிலைமையைத்தான் சொன்னேன்" என்றான் இனியன்.

"அது என்னமோ உண்மை. மக்கள் பெரும்பாலும் உழைக்காமல் சந்தோஷப்படத்தான் விரும்புகிறார்கள். அந்த மனப்பான்மையை வளரவிடக்கூடாது" என்றான் மாணிக்கம்.

அவர்கள் அமர்ந்திருந்த அறை ஜன்னல் ஓரமாகக் காலையில் வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள் யாரோ சிலர் உரத்த குரலில் பாடிக்கொண்டு சென்றனர்.

**"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்"**

என்ற அடிகளை அவர்கள் உற்சாகமாகப் பாடிக் கொண்டு சென்றனர். அது அறையில் இருந்தவர்களுக்குத் தெளிவாகக் கேட்டது.

சுந்தரி "யாரோ பாடிக் கொண்டு போகிறார்களே, அந்தப் பாட்டைக் கேட்டீர்களா!" என்றாள்.

"ஆம், கேட்டோம். மிக்க அருமையான பாட்டு. இப்படிப்பட்ட பாட்டுகள்தான் நமக்கு இப்போது வேண்டும்" என்றான் இனியன்.

"இதே பாட்டுக்குத்தான் நான் நேற்று அபிநயம் பிடிப்பதாக இருந்தேன். உங்கள் பேச்சு முடிந்த அதே நேரத்தில் இந்தப் பாட்டுக்கு நான் அபிநயம் பிடித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். முடியாமல் போய் விட்டது" என்றாள் சுந்தரி.

"அப்படியானால் உங்கள் நாட்டியம் இனி கல்லூரி தமிழ்க் கழக மண்டபத்திலே நடக்காதா!" என்று கேட்டான் மாணிக்கம்.

"நல்ல கேள்வி கேட்டாய். வரும் ஞாயிற்றுக் கிழமைக்கு மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அமரகவி பாரதியின் திருநாள் வரப்போகிறது. அன்று நம் தமிழ்க் கழக மண்டபத்தில் என் நாட்டியத்துக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றாள் சுந்தரி. இனியனின் முகத்தைப் பார்த்தாள்.

இனியன் சிறிது சிரித்தான். "நாட்டியம் ரொம்ப தொந்தரவு கொடுக்கும் விஷயம். அதைப் பற்றி நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. உயிரில்லாத பொருள்கூட ஆட ஆரம்பித்து விடு



கிறது. அதனுல் மண்டை உடைந்து விடுகிறது. எல்லாரும் வருத்தமாய் இருக்கும்படி நேரிட்டு விடுகிறது'' என்றுன்.

சுந்தரிக்கு முதல் நாள் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் நினைவுக்கு வந்தன. ஒலிபெருக்கி ஆடி விழுந்தது; தன் மண்டை உடைந்தது எல்லாம் அவளுக்கு ஒரு இன்ப வேதனையாக இருந்தது. அவள் உள்ளத்தில் அது ஒரு அமைதியான மகிழ்ச்சியையே உண்டாக்கியது! புன்னகை செய்துகொண்டே அவள் கூறினுள்:

'' இனி அப்படிப் பிறர் வருத்தப் படும்படி ஒரு பொருளும் ஆடாது. எல்லாருக்கும் மகிழ்ச்சி யூட்டும் வண்ணம் என் ஆட்டம் இருக்கும்படி நான் பார்த்துக் கொள்வேன்'' என்றுள்.

திடீரென்று இனியன் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். ''நீண்ட நாழிகையாக வம்பளந்து கொண்டிருந்து விட்டோம். நாழியாகி விட்டது. நாங்கள் பிறகு வருகிறோம்'' என்று எழுந்தான். மாணிக்கமும் உடன் எழுந்தான்.

''உங்களுடைய உதவிக்கு மிக்க நன்றி'' என்றுள் சுந்தரி. கைகூப்பி வணங்கினுள். படுக்கையி லிருந்து எழுந்திருக்க முயன்றுள்.

'' நீங்கள் எழுந்திருக்கக் கூடாது. நன்றாக ஓய் வெடுத்துக் கொள்ள வேணும்'' என்றுன் இனியன்.

'' போய் வருகிறேன். வணக்கம்'' என்றுன் இனி யன். அவளிடம் விடைபெற்றுக் கொண்டான்.

மாணிக்கம் சுந்தரியின் அருகில் சென்று ஏதோ 'குசு குசு'வென்று சொல்லிவிட்டு வந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் இனியனும் மாணிக்கமும் சேர்ந்து ''ஹாய்...ஹாய்...ஹா!'' என்று சிரிக்கும் சத்தம் தெரு வாசல் பக்கம் கேட்டது.

அவர்கள் இருவரும் சென்ற பின் சுந்தரி முது கைக் கட்டிலின்மேல் சாய்த்துக் கொண்டு கண் களை மூடிக் கொண்டு அமைதியாக இருந்தாள். இதயம் நிறைந்த இன்பத்துடன் இனியனின் பேச்சையும் நினைத்து அவள் நெடுநேரம் சிந்தித் தாள். அப்படிச் சிந்திப்பதன் மூலம் தன் மனத்தில் பெரிய சாந்தி ஏற்படுவதைப்போல் உணர்ந்தாள். அவள் கண்ணுக்கு எதிரே சுருண்டு சுருண்டு

நிற்கும் அழகிய கிராப்புத் தலையையுடைய இனியனின் அன்பு நிறைந்த முகம் தென் பட்டுக்கொண்டே இருந்தது. அவனுடைய கருநீலக் கண் கள் ஆனந்தத்துடன் அவள் மீது பதிந்திருந்த தாகவும் தோன்றியது.

எங்கும் குளிர்ச்சியா யிருந் தது. வேகமாக அடித்த காற்று ஜன்னல் கதவுகளை அசைத்து ஓசைப் படுத்திக் கொண்டிருந்தது.

அப்போது அவள் தந்தை கையில் பழங்களை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தார். '' அவர்கள் இருவரும் போய் விட்டார்களா!'' என்று கேட்டார்.

''போய்விட்டார் கள்'' என்றுள்.

பழங்களைக் கட் டிலுக்குப் பக்கத் தில் வைத்து விட்டு





அவர் போய் விட்டார். வெளியே காற்று விசிறி விசிறி அடித்துக் கொண்டிருந்தது. எங்கும் ஒரே இன்ப மயமான ஓசை. வீடு முழுவதும் ஏதோ ஆனந்தமாக நடனமாடிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவனைச் சுற்றியிருந்த ஒவ்வொரு பொருளும் அவனுக்கு ஒரு புதிய இன்பத்தைக் கொடுத்தன.

** ** **

கல்லூரி விடுதியில் இனியனின் அறை கல்லூரி மாணவர்கள் எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்து கொண்டிருந்தது. இனியனைப் பற்றி எல்லா மாணவர்களுக்கும் ஒரு நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது. அவனிடம் ஒரு நல்ல நம்பிக்கையும் இருந்தது. கல்லூரி மாணவர்களிடையே ஏற்படும் சிறு பூசல்களை எல்லாம் அவன் சமாதானப்படுத்தி வந்தான். கல்லூரி விடுதியில் உள்ள குறைகளைப் பற்றி மாணவர்கள் அவனிடம் பேசுவார்கள். அவன் அதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக் கொண்டு அந்தக் குறைகளை விரைவில் நிவர்த்தி செய்து வைப்பான்.

இனியனிடம் படிப் படியாக மாணவர்களும், உபாத்தியாயர்களும் கூட மரியாதை செலுத்த ஆரம்பித்தனர். அவன் எந்த விஷயத்தையும் தைரியமாகவும் நேர்மையாகவும் எடுத்துச் சொல்லி வந்தான். அவனிடம் மகிழ்ச்சி தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தது. மாணவர்களை நன்றாகப் படிக்கும்படித் தூண்டினான். கல்லூரியில் படிக்கும்போது முழுக் கவனத்தையும் படிப்பில் செலுத்த வேண்டியது. புதுப் புது விஷயங்களைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான் கல்லூரி மாணவனின் முக்கியமான கடமை என்பதை மாணவர்களிடையே புகுத்தி வந்தான். படிப்புக்கு அப்பாற்பட்ட விஷயங்களில் கலந்து கொண்டு காலத்தை வீணாக்குவது நாம் பெற்றோர்களுக்கும் தேசத்துக்கும் இழைக்கும் பெரிய துரோகம் என்று சொல்லி வந்தான்.

மாணிக்கம் தன் நண்பன் கல்லூரியில் எவ்வளவு செல்வாக்குள்ளவனாக வளர்ந்து விட்டான் என்பதை அறிந்து மகிழ்ந்தான். காலத்தை வீணாக்காமல் படிப்பிலும் இதர உயரிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதிலும் மனத்தை ஈடுபடுத்தினான். கல்லூரி விடுதியில் இப்பொழுது ஒரு கண்யம் காணப் பட்டது. கல்லூரி விடுதி மாணவர்கள் என்றால் அவர்களைப் பற்றி எல்லாருக்குமே ஒரு பெருமை ஏற்பட்டு வந்தது.

இனியன் கல்லூரிப் பத்திரிகையில் "யார் தேசபக்தன்!" என்று ஒரு கதை எழுதியிருந்தான். அதன் பிறகு மாணவர்கள் அவனை மிக அதிகமாகப் பாராட்டி வந்தார்கள்.

விடுதியைச் சுற்றியுள்ள தோட்டங்களில் புல் பூண்டுகள் மண்டிக் காடாகக் கிடந்தன. அதில் உபயோகமில்லாத செடிகளும் மரங்களும் மண்டிக் கிடந்தன. அந்த நிலத்தைப் பண்படுத்தி மாணவர்களின் உதவியைக் கொண்டு காய்கறிகளைப் பயிரிடும் பணியில் ஈடுபட்டான். காலையில் ஒரு மணி நேரம் அவனுடன் சேர்ந்து பல மாணவர்கள் உற்சாகமாகத் தோட்ட வேலையில் ஈடுபட்டார்கள். அப்பொழுது அவர்களுடன் சேர்ந்து தோட்டக்காரனும் உழைத்தான். தோட்டக்காரனின் உழைப்பையும் தோட்ட வேலையில் அவனுக்கு உள்ள அறிவையும் திறமையும் மாணவர்கள் கவனித்தார்கள். முன்பெல்லாம் சாதாரண தோட்டக்காரனாக ஒதுக்கப்பட்ட அவன் இப்பொழுது கண்யமுள்ள தோட்டக்காரனாக அவர்களுக்குத் தோன்றினான். வேலை செய்வதில் ஏற்றத் தாழ்வு இல்லை என்பதைக் கல்லூரி மாணவர்கள் அநுபவத்தில் உணர ஆரம்பித்தனர். ஒரு சில மாதங்களில் வெறும் செடியும் கொடியுமாக உபயோகமின்றி இருந்த இடம் அருமையான காய் கறிகள் குலுங்கும் அற்புதத் தோட்டமாக மாறி விட்டது. அதனால் விடுதிக்குக் காய்கறி வாங்க வேண்டிய அவசியமே இல்லாமல் போய் விட்டது. ஒவ்வொரு விடுதி மாணவனுக்கும் கணிசமான ஒரு தொகை கல்லூரிச் சாப்பாட்டுச் செலவில் குறைந்தது. மாணவர்கள் உழைத்துப் பாடுபடுவதில் உள்ள இன்பத்தை உணர்ந்து அநுபவிக்க ஆரம்பித்தனர்.

"நம்முடைய உழைப்பால் நாம் நம்மை வலிமையாக்கிக் கொள்ள வேண்டும். படித்துப் பட்டம் பெற்று, வெறும் குமாஸ்தா வேலைக்கு மனுப் போடுவது கேவலம். நம் படிப்பை நாம் நாட்டு முன்னேற்றத்துக்கு எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று நாம் சிந்திக்க வேண்டும். உழைத்துப் பாடுபடுவதுதான் உயர்ந்தது. அதை நாம் உணர வேண்டிய காலம் வந்து விட்டது. நாம் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது" என்று இனியன் அடிக்கடி சொல்லி வந்தான். அதைத் தன் வாழ்க்கையிலும் செம்மையாக நடத்திக் காண்பித்து வந்தான்.

கல்லூரி தமிழ் வாத்தியார் இனியனையும் அவனுடைய உழைப்பால் திருந்தியுள்ள கல்லூரி மாணவர்களையும் பார்த்தார். அவர் தன்னை ஒத்த இதர வாத்தியார்களிடம் ஒருநாள் சொன்னார்:

"வயதானவர்களாகிய நாம் இனி இருந்து ஒரு பயனுமில்லை. மாணவர்களுக்கு இருக்கும் உணர்ச்சி, அக்கறை கூட நம்மவர்களில் பலருக்கு இல்லை. மாணவர்கள் புது மனிதர்களாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மகா புத்திசாலிகளாகி விட்டார்கள். இனியன் எவ்வளவு அற்புதமான காரியங்களைச் சாதித்து வருகிறான், பார்த்தீர்களா! நாம் இத்தனை பேரும் செய்ய முடியாத காரியத்தை அவன் செய்து வருகிறான். மாணவர்களில் மந்த புத்தியுள்ளவர்களே இப்போது இல்லை. பரீட்சை என்று ஒன்று வேண்டாம் என்று சொல்லும் அளவுக்கு மாணவர்கள் புத்திசாலிகளாக மாறி விட்டார்கள். காரணம் அவர்கள் எல்லா விஷயங்களிலும் நம்மைவிடக் கெட்டிக்காரர்களாகி விட்டார்கள். அந்த இனியன் செய்த காரியத்தை வாத்தியார்களாகிய நாம் அல்லவா செய்திருக்க வேண்டும்! நமக்கெல்லாம் எங்கே மாணவர்களின் நன்மையில், தேசத்தின் வளர்ச்சியில் ஊக்கம் இருக்கிறது! நாம்தான் ஏதோ சம்பளம் கொடுக்கிறார்களே என்பதற்காக இயந்திரம் போல வேலை செய்து வருகிறோமே. இனியன் நன்றாக இருக்க வேண்டும். கடவுள் அவனுக்கு மேலும் ஊக்கம் அளிக்க வேண்டும். அவனைப் பார்த்தாவது நம் போன்ற பெரியவர்களுக்குப் புத்தித் தெளிவு ஏற்பட வேண்டும்" என்றார்.

இதர உபாத்தியாயர்கள் தமிழ் ஆசிரியரைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். அவர் உதடுகள் துடித்ததையும், அவர் குரலில் இருந்த நிதானத்தையும், அவருக்கு ஏற்பட்டுள்ள எழுச்சியையும் கண்டு தலை குனிந்தனர். "ஆம். நீங்கள் சொல்லுவது உண்மைதான். மாணவர்களை நல்ல வழிக்குக் கொண்டு வர வேண்டியது, அவர்கள் மனத்தில் உயர்ந்த எண்ணங்கள் உண்டாகும்படி செய்ய வேண்டியது நம் கடமைதான்" என்றனர்.

இப்படியாக இனியனின் பெருமை கல்லூரியில் மாணவர்களிடையேயும் வாத்தியார்கள் இடையேயும் வெகு வேகமாகப் பரவி வந்தது.



# ஜலதோஷத்தை அகற்றுங்கள்

2 விதங்களில் அழிக்கிறீர்களா!

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னேக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம் படுக்கப்போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள் இந்த நவீன ஔஷதம் பலதேசங்களில் பிரக்யாதிபெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.



1. அதன் குணப்படுத்தும் உஷ்ண மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...




2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைபுண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

## விக்ஸ் வேபோரப்




"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள்.

320

---

# தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.,

தலைமை ஆபீஸ்: கல்கத்தா.

செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடிகள்
ரிசர்வ் நிதி ரூ. 80 லக்ஷங்கள்

வெளிநாட்டு பிராஞ்ச் ஆபீஸ்கள்:

பாகிஸ்தானில்:
சிட்டகாங், கராச்சி.

பர்மாவில்:
ரங்கூன், மோல்மீன், அக்யாப், மாண்டலே.

மலேயாவில்:
சிங்கப்பூர், பெனாங்.


யுனைடெட் கிங்டத்தில்:
லண்டன்.

பாண்டிச்சேரியிலும் ஹாங்காங்கிலும் கூட ஆபீஸ்கள் உண்டு.

ஏஜெண்டுகள்:
உலகமெங்கும்—ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா.
எல்லாவித பாங்க் அலுவல்களையும் செய்கிறது.

ஜி. டி. பிர்லா,
சேர்மன்,

பி. டி. தாகூர்,
ஜெனரல் மானேஜர்.




ASP

UC-1/54

# அதிகப்படி தென்பு



நீங்களும் பெறுக

# வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்




தென்புடன் விளங்குக……உங்கள் தினசரி போஜனத்துடன் வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் சாப்பிட்டு வருக…… அது சுருசுருப்பூட்டுவதும் ருசிமிகுந்ததுமான ஒரு டானிக். அதிகப்படி தென்பை வளர்க்க உதவுவதில் நிச்சய குணமுள்ளது. வாட்டர்பரீஸ் காம்பவுண்டு உங்களுக்கு அத்யாவசியமான புஷ்டிபதார்த்தங்களை வழங்கி, உங்களுக்கு சோர்வு, ஜலதோஷம், இருமல், எதுவும் ஏற்படாத வாறு எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வயது வந்தவர், இளைஞர் யாவருக்கும் தேக வலிமை பெற இன்றியமையாதது.

**WATERBURY'S COMPOUND**

**வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்**

NAS. 59-53 உங்களை தென்புடன் வைத்திருக்கும்

மாணவர்களில் அவனுக்கு வேண்டியவர்கள் எல்லாம் அவனிடம் வந்து அவன் காரியங்களைப் புகழ்ந்து விட்டுப் போனார்கள்.

அவர்களுக்கெல்லாம் இனியன் "நாம் வெறும் புத்தகப் புழுவாக இருக்கக் கூடாது. ஆராய்ச்சி அறிவுடன் வாழ வேண்டும். உறுதி படைத்த உள்ளமும் நிதானமான புத்தியும்தான் நமக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும்" என்றான்.

அவனுடைய பிரியமான வார்த்தைகளும் உண்மையான செய்கைகளும் மாணவர்கள் உள்ளத்தை உருக்கி விட்டன. மகிழ்ச்சி பொங்கியபடியே அவனை விட்டுப் பிரிந்தார்கள்.

•• •• ••

**க**ல்லூரி மாணவர்களின் வாழ்க்கை வேகமாய்ச் சென்று கொண்டிருந்தது. ஒரு நாள்போல் இல்லாமல் புதிய புதிய சம்பவங்கள் அவர்களுக்கு நேர்ந்து வந்தன. சுந்தரியும் பூரண குணமடைந்து கல்லூரிக்கு வரத் தலைப்பட்டு விட்டாள். அவளுடைய சொல்லிலும் செயலிலும் கூட இப்பொழுது பெரிய மாறுதல் ஏற்பட்டிருந்தன. அவள் உள்ளம் உத்வேகமா யிருந்தது. ஆனால் அடக்கத்துடன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டு நிதானமாக இருந்து வந்தாள்.

நாட்கள் பறந்து கொண்டே சென்றதால் அவளுக்குப் பாரதி விழாவைப் பற்றிச் சிந்திக்கச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. இரவு வேளைகளில் தான் அவளுடைய உள்ளம் அதைப்பற்றிச் சிந்திக்கும். "பாரதி தினம் விரைவில் வந்து விட்டால் தேவலையே!" என்று எண்ணுவாள்.

"பாரதி தினத்தன்று தமிழ்க் கழகக் காரியதரிசி சுந்தரியின் நாட்டியம் நடக்கும்" என்று அறிவிக்கும் சுற்றறிக்கைகள் கல்லூரி முழுவதும் வெள்ளமாகப் பெருகி விட்டன. உபாத்தியாயர்கள் எல்லாம் "காலம் மாறி வருகிறது!" என்று நினைக்கத் தொடங்கினர்.

கடைசியாகப் பாரதி தினமும் வந்து விட்டது. வழக்கம்போல கல்லூரித் தமிழ் மண்டபத்தில் அலங்காரம் நிறைந்து காணப்பட்டன. முதல் நாள் இரவு முழுவதும் சுந்தரி தூங்கவே இல்லை. பாரதி, தினத்துக் கென்று புதிதாகத் தைத்த நாட்டிய உடையைப் போட்டுக் கொண்டு வீட்டில் ஒத்திகை செய்து கொண்டாள். நாட்டியத்துக்குப் பின்னால் பதங்கள் பாடும் பெண்மணியை அவளே ஊக்குவித்து உற்சாகமாகப் பாடும்படி செய்தாள். கடைசியில் களைத்துப் போய் இரவு நெடு நேரத்துக்குப் பின்தான் படுத்தாள்.

காலையில் எழுந்து முகம், கை கால்களைச் சுத்தம் செய்து கொண்டு "இன்று நாட்டியம் நல்லபடியாக நிறைவேற வேண்டுமே" என்று அமைதியாகப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தாள். அவள் முகம் பிரகாசமா யிருந்தது.

அவள் தந்தை அவளுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்து கொடுத்தார். "இன்றைய நாட்டியத்துக்கு இன்னும் ஏதாவது செய்ய வேண்டுமோ!" என்று மிக்க அன்போடு கேட்டார்.

"ஒன்றும் வேண்டாம் அப்பா! எல்லாம் சரியாக இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே சாப்பிடுவதற்குச் சென்றாள்.

" **உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்**
**உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்** "

என்று தன் மனத்துக்குள் மெதுவாகப் பாடிக் கொண்டே இருந்தாள்.

**ப**கல் வந்து கொண்டிருந்தது. காற்றின் வேகத்தால் மேகக் கூட்டங்கள் சிதறிக் கொண்டிருந்தன. சாயங்காலம் நடக்கப் போகும் நாட்டியத்தை எண்ணி அவள் உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் இருந்தாள்.

மாலை நாலு மணி சுமாருக்கு மாணிக்கம் ஆனந்தத்துடன் சுந்தரியின் வீட்டுக்கு ஓடி வந்தான். அவனுடைய அவசரத்தைக் கண்டதும் சுந்தரி வியப்போடு "என்ன!" என்று கேட்டாள்.

"தமிழ் மன்றத்தில் மாணவர்கள் எல்லாரும் கூடி விட்டார்கள். எல்லாரும் மிகுந்த குதூகலத்துடன் இருக்கிறார்கள். இனியன் அவர்களுக்குப் பாரதியின் பெருமையைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறான். சரியாக ஐந்து மணிக்கே உன் நாட்டியத்தை ஆரம்பித்து விட்டால் நல்லது என்று சொல்லி அனுப்பினான்" என்றான்.

"இதோ ஒரு நிமிஷத்தில் தயாராகி விடுகிறேன்" என்றாள் சுந்தரி. உள்ளே போய் நாட்டிய உடை தரித்துக் கொள்ள ஆரம்பித்தாள்.

சுந்தரி நடனமாடுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டாள். நட்டுவனாரின் மேற்பார்வையில் கவனத்துடன் தயாரித்த கலை மணம் கமழும் அழகழகான நடன உடைகளை அவள் தோழிகள் கொண்டு வந்தனர். கண்ணைப் பற்றி இழுக்கும் ஆடைகளை உடுத்திக் கொண்டாள். கருத்தைக் கவரும் ஆபரணங்களை அணிந்து



இலங்கை, மட்டக்களப்பு தென்பகுதி இளைஞர் சங்க ஆதரவில் நடை பெற்ற பாரதி விழாவின் போது திரு கி. முத்தையா அமரகவி சுப்பிரமணிய பாரதியாரின் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைக்கையில் எடுக்கப்பட்ட படம். —படம்: சிவாஜி

கொண்டான். காலையிலிருந்து இல்லாத ஒரு புது ஆனந்தம் திடீரென்று அவன் உள்ளத்தில் மூளைத்தது. அவன் நீண்ட கண்கள் பிரகாசித்தன. மூக்கு முனையில் அசைந்து ஆடிய 'புல்லாக்கு' பளபளத்தது. அவள் செவ்விதழ்களில் புன்னகை நெளிந்து விளையாடி நடனமாடியது.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் சுந்தரி தயாராகி விட்டாள். மாணிக்கம் அவள் வருகையைத் தெரிவிக்க அவனுக்கு முன்னதாகவே கல்லூரிக்குப் போய் விட்டாள்.

சற்று நேரத்துக்கெல்லாம் தன்னுடைய நாட்டிய கோஷ்டியுடன் சுந்தரி கல்லூரிக்குப் புறப்பட்டாள். கல்லூரிக்குத் தமிழ்க்கழக மண்டபத்தின் பின் வாசல் வழியாக நாட்டிய மேடைக்குள் புகுந்து சென்றாள்.

மண்டபம் மாணவர்களின் உற்சாகமான பேச்சினால் கல கலப்பாக இருந்தது. மண்டபத்தின் ஜன்னல்களிலும், வாசற்படிகளிலும், வெளித் தாழ்வாரத்திலும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்த மாணவர்கள் மேடையைப் பார்த்துக் கொண்டிருப்பதை இனியன் கவனித்தான். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த அவனிடம் மாணவர்கள் வந்தார்கள். எதை யெல்லாம் பற்றியோ அவனைக் கேட்டார்கள்.

தமிழ்க் கழக மண்டபக் கடிகாரம் 'டாண் டாண் டாண்' என்று ஐந்து முறை அடித்தது.

நாட்டிய மேடைத் திரைக்குள்ளிருந்து 'ஜண ஜண' என்று மணி ஒலித்தது. அடுத்த கணம் மேடை மீதிருந்த திரை ஒரு தரம் ஆடியது. பிறகு மெதுவாக நகர்ந்து விலகியது.

நடராஜரின் திரு உருவத்துக்கு முன்னால் சுந்தரி கைகூப்பியபடி அம்மன் விக்கிரகம் போல் அசையாமல் நின்று கொண்டிருந்தாள்.

சேர்த்து வைத்திருந்த அவள் சிவந்த பாதங்களை இனியன் உற்றுப் பார்த்தான்.

"வெள்ளை மணிப் புறுக்கள் போன்ற மிருதுவான பாதங்கள். கால்கள் 'தத்தரிங்கிணதோம்' என்று குதித்துக் குதித்து ஆடும்போது முல்லைக் கொடியில் மலர்ந்து குலுங்கும் வெள்ளை மலர்கள் தென்றலில் அசைந்து ஆடுவது போலிருக்கும்" என்று கற்பனை செய்து களித்தான் இனியன்.

நட்டுவனார் கையிலிருந்த வெண்கலத் தாளத்தைத் தட்ட ஆரம்பித்தார்.

ஆட்டம் ஆரம்பமாகியது; சுந்தரி ஒரு தரம் புன்முறுவல் செய்து நாட்டிய மாடினாள்.

தென்றலில் அசையும் சிவப்பு ரோஜாவைப் போலச் சுந்தரி தன் அங்கங்களை மெதுவாகக் குலுக்கினாள். தென்றலின் வேகம் கணத்துக்குக் கணம் அதிகமாகியது. அந்தத் தென்றலில் சிவப்பு ரோஜாவின் ஒவ்வொரு இதழ்களும் ஆடி ஆடிக் குலுங்கின. காற்று சுழன்று சுழன்று அடித்தது. ரோஜா மலர் போல சுந்தரி சுற்றிச் சுற்றி வந்தாள். முதலில் குழல் ஊதும் கண்ணனைப் போலக் கம்பீரமாக நின்றாள். குழலில் மயங்கிய ஆயர்குல மங்கையரைப் போல இலேசாக ஆடி நெளிந்தாள். பிறகு ஆட்டத்தில் ஒரு வேகம் பிறந்தது; அபிநயத்தில் பாவம் பிறந்தது. உள்ளத்து உணர்ச்சிகளை எல்லா அவயவமும் நன்றாய் எடுத்துக் காட்ட ஆரம்பித்தன. இவள் ஆட்டத்துக்கு ஏற்ற வண்ணம் பாட்டு இசைப்பது போல நட்டுவனாரும் பதங்கள் பாடிக் கொண்டிருந்தார். தன் அரும்பு முல்லை போன்ற அழகான பல் வரிசைகளைக் காட்டிக் கொண்டே கண்களைச் சுழற்றினாள். ரோஜா இதழ்களின் துடிப்பைப் போல அவள் கரங்களும், இடையும் உடையும் துடித்தன. சுழன்று சுழன்று ஆடினாள். நெளிந்து நெளிந்து ஆடினாள். வளைந்து, குனிந்து, நிமிர்ந்து ஓடி, ஒடுங்கி ஆடினாள். ஆடிக்கொண்டே இருந்தாள்.

மாணவர்கள் நிறைந்த அச் சபை அவளுடைய ஆட்டத்தில் தன்னை மறந்து அமைதியுடன் ஆடிக் கொண்டிருந்தது. மேடையில் திரை விழுந்தது. மண்டபம் அதிர மாணவர்கள் கரகோஷம் செய்தனர். இனியன் தன்னை மறந்து உட்கார்ந்திருந்தான். அவன் சிந்தனை எங்கேயோ சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தது.

மீண்டும் திரை தூக்கப்பட்டது.

நட்டுவனார் தாளம் போட, பதம் பாடும் பெண் மணி அமரகவி சுப்பிரமணிய பாரதியின் சுதந்திரப் பள்ளுப் பாட ஆரம்பித்தாள்:

"**ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே;**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று**"

என்று கணீர் என்ற குரலில் பாடினாள்.

சுந்தரி அபிநயம் பிடித்து ஆட ஆரம்பித்தாள். ஆனந்த சுதந்திரம் அத்தனையும் பெற்று மகிழும் உணர்ச்சியை அவள் அங்க அசைவுகள் ஒவ்வொன்றும் காண்பித்துக் கொண்டிருந்தன.

நட்டுவனார் தாளம் போட்டுக் கொண்டே இருந்தார். சுந்தரி சுறுசுறுப்போடு ஆடிக் கொண்டே இருந்தாள். சுதந்திர வெறி தலைக்கேற மின்னல் வேகத்தில் துள்ளிக் குதித்துப் பாவம் பிடித்துக் காண்பித்துக் கொண்டிருந்தாள்.

"**உழவுக்கும் தொழிலுக்கும்**
**வந்தனை செய்வோம்—வீணில்**
**உண்டு களித்திருப்போரை**
**நிந்தனை செய்வோம்**
**விழலுக்கு நீர்பாய்ச்சி**
**மாயமாட்டோம்—வெறும்**
**வீணருக்குழைத்து உடலம்**
**ஓய மாட்டோம்**"

என்று நட்டுவனாருக்குப் பின்னால் இருந்த பெண் மணி இனிய குரலில் கணீர் என்று பாட ஆரம்பித்தாள். அதற்கு ஏற்றாற்போல் வீணை வாசித்தாள் மற்றொரு பெண்மணி. நட்டுவனார் கண்களைத் திறந்து கொண்டு பாட்டை ரசித்து, தாளம் போட்டார். பாட்டுக்கு ஏற்றாற்போல் சுந்தரி அற்புதமாக அபிநயம் பிடித்தாள்.

ஆலைகளிலும், வயல்களிலும் நடக்கும் உழவும் தொழிலும் இப்போது சுந்தரியின் அபிநயத்தில் அவள் முகபாவத்திலே நடக்கத் தொடங்கியது. எல்லாரும் ஆவலோடு அதைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

இனியன் இதை ஆசையோடு ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உணர்ச்சி அவனை நெகிழ வைத்து விட்டது. பக்கத்தில் இருந்த தமிழ் ஆசிரியரிடம் மெதுவாகத் திரும்பி, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் அழகு பாவம், சுந்தரி முகத்தில் பொங்கி வழிகிறது அல்லவா!" என்றான்.

"ஆமாம்" என்றார்.

சுந்தரியின் முகத்தில் நிந்தனையும் வெறுப்பும் மாறிப் பரவின. அவள் உண்டு களித்திருப்போரை ஒதுக்கித் தள்ளும் வேகத்தைத் தாங்கமுடியவில்லை. வீணருக்கு உழைத்து உடல் ஓய மாட்டோம் என்று நெற்றி வியர்வையை நிலத்தில் வழித்துக் கொட்டிய பாவம் விதம் விதமான கோணங்களில் அவளுடைய உணர்ச்சிகளுடன் விளையாடியது.

பனிமுத்துக்கள் நிறைந்த புதுத் தாமரை மலர் போல வியர்வை அரும்பி வழியும் வதனத்தோடு



மேலும் சிறந்த
சமூக சேவைகளும்,
பொதுஜன சௌகரியங்
களும் கிடைக்க . . .

## இவற்றில் முதலீடு செய்யுங்கள்

நாட்டின் சிறிக்குரிய விருத்தி செய்ய ஒவ்வொரு சிறிய முதலீடும் அவசியமே. ஜனநாயகம் தழைத்தோங்குவதற்கு உதவும், பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கே இம்முதலீடு உபயோகமாகின்றது.

இது சேமிப்புத் திட்டம் பரிபூரண பாதுகாப்பு உத்தரவாதத்துடன் வளர்ச்சியடைந்து வெற்றி பெறுகிறது.

அதன் வளர்ச்சிக்குக் காரணம் அது ஒரு அவசரமான தேவையை பூர்த்திசெய்கிறதென்று வெளிப்படையாகத் தெரிவதுதான். உங்கள் சமுதாய நலன் மற்றும் உங்கள் சொந்த நலனுக்காக உங்கள் பணத்தை சேமிப்படுத்துகிறது.

| | |
|---|---|
| நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள் | ரூ. 100 முதலீடு, 12 வருடங்களில் ரூ. 150 ஆகக் கிடைக்கும். |
| பத்துவருட ட்ரெஷரி சேவிங்ஸ் டிபாசிட்டுகள் | 3½ சதவிகித வட்டி வருடத்திற்கு ஒரு முறை வழங்கப்படும். அசல் தொகை 10 வருடங்கள் முதலீட்டிலிருக்கும். |
| போஸ்ட் ஆபீஸ் சேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள் | ரூ. 10,000 வரை டிபாசிட்டுகளின்பேரில் 3 சதவிகித வட்டி சேரும். (கூட்டுக் கணக்காக இருந்தால் ரூ. 20,000 வரை வட்டியுண்டு.) |

[illegible]

இந்தியாவின் திட்டங்களால் ஏற்படும் பலன்கள்

## இன்னும் அதிக பாடசாலைகள் அதிக ஆஸ்பத்திரிகள் - அதிக ரஸ்தாக்கள்

[illegible]

A.C. [illegible]

சுந்தரி ஆட்டத்தை முடித்துக் கொண்டு சபைக்கு வணக்கம் செலுத்தினாள்.

"அற்புதம்! அற்புதம்! ஆகா! என்ன அருமையான நடனம். எத்தனையோ மேடைகளில் பேசி சாதிக்க முடியாத சோஷலிஸப் பிரசாரத்தைச் சுந்தரி ஒரு பாட்டின் அபிநயத்தின் மூலம் எல்லார் உள்ளத்திலும் பதியும்படி செய்து விட்டாள்" என்றான் இனியன்.

திரை விழுந்தது. மண்டபம் அதிர மாணவர்கள் கைதட்டி மகிழ்ந்தனர். இனியன் எங்கோ கற்பனை உலகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். தமிழ் ஆசிரியர் விடைபெற்றுக் கொண்டது, மாணிக்கம் வந்து அவன் அருகில் நின்றது, மாணவர்கள் 'கலகல' வென்று சத்தம் போட்டுக் கொண்டு சென்றது ஒன்றும் அவனுக்குத் தெரியவில்லை.

மாணிக்கம் இனியனுக்கு அருகே வந்து அமர்ந்தான். அவனுடைய கண்கள் பிரகாசமாக ஒளி வீசிக் கொண்டிருந்தன. அவன் உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன. இனியன் மௌனமாக இருந்தான். மாணிக்கமும் அவனைப் பார்த்து விட்டுச் சற்று நேரம் மௌனமாக இருந்தான்.

மெதுவாக இனியனைக் கையைப் பிடித்து, "சுந்தரியைப் போய்ப் பார்க்கலாமா?" என்றான். அவன் கையை மெதுவாகத் தடவிக் கொடுத்து, அதிவேகமாக அடித்துக் கொண்டிருந்த அவன் இதயத்தைச் சாந்தப்படுத்த முயன்றான்.

"சுந்தரியைப் பார்ப்போம் வா! நாட்டியம் முடிந்து நீண்ட நேரமாகி விட்டதோ!" என்று தூக்கத்திலிருந்து விழித்தெழுந்தவன் போலக் கேட்டான் இனியன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. வா போகலாம்."

இருவரும் மேடைமீது ஏறிச் சுந்தரியைப் பார்க்கச் சென்றார்கள். அங்கு அவர்களுக்கு முன் வந்திருந்த அவள் தந்தை அவர்களை வரவேற்றார்.

"சுந்தரி! உங்கள் நாட்டியத்தைப் பற்றி நான் ஒன்றும் சொல்லுவதற்கில்லை. அது கண்ணுக்கு மட்டும் விருந்தாக இல்லை. என் ஆன்மாவுக்கே ஒரு அமைதியான இன்பத்தைக் கொடுத்தது. இப்படிப்பட்ட ஒரு நாட்டியத்தைப் பார்த்து அநுபவிக்கக் கொடுத்து வைத்ததே பெரிய பாக்கியம்" என்றான் இனியன்.

சுந்தரி வாயைத் திறக்க வில்லை. தனக்கு அருகில் இனியன் நின்று தன்னைப் பற்றிப் புகழ்ந்து கூறியதை அவள் பருகிக் கொண்டிருந்தாள்.

இனியன் மேலும் சொன்னான்:

"இதுவரை உங்கள் நடனத்தைப் பார்க்காமலே இருந்து விட்டேன். அதை நினைத்தால் எனக்கே பெரிய வருத்தமாக இருக்கிறது. உங்களிடம் இப்படிப்பட்ட அருமையான கலை இருப்பதைத் தெரிந்து கொள்ளாமலே இருந்து விட்டேன். மிக உயர்ந்த சோஷலிஸக் கொள்கைக்கு — சமதர்ம லட்சியத்துக்கு ஏற்ற அந்த பாரதியின் அமர கீதத்துக்கு அபிநயம் பிடித்த போது காலமெல்லாம் ஒருவன் சமதர்மத்தைப் பற்றிப் பிரசாரம் செய்தாலும் அப்படி எல்லாருடைய மனத்தில் பதியும்படி செய்ய முடியாது என்றே எண்ணினேன்" என்றான்.

"எல்லாம் தங்களால்தான். தங்கள் பிரசங்கத்தைக் கேட்ட பிறகுதான் எனக்குக்கூட அநேக விஷயங்கள் புரிந்தன" என்றாள்.

அதற்குள் அங்கு இன்னும் யார் யாரோ வந்து விட்டதால் இனியன் சுந்தரியிடம் விடைபெற்றுக் கொண்டு கிளம்பி விட்டான்.

மாணிக்கம் மட்டும் அங்கேயே தங்கிவிட்டான்.

இனியன் தன்னுடைய அறையில் ஜன்னலில் உட்கார்ந்திருந்தான். வான வெளியைப் பார்த்தான். மாலையில் நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் மங்கிய நினைவுகளாகத் தோன்றிக் கொண்டிருந்தன. சுந்தரியின் நாட்டியத்தை அவன் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவள் அழகும் ஆட்டமும் அவன் மனத்தில் புகுந்து விட்டது; அவனைக் கெடுத்தே விட்டது. சற்று அதிகமாகவே சுந்தரியின் ஆட்டத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டான். அவள் ஆட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த போதெல்லாம் அவனுக்கு அவன் ஆசையோடு வளர்த்த மயில்களின் நினைவுகள்தான் வந்தன. அவைகள் கத்தினால் மழை பொழியும்; இறகை விரித்து ஆடினால் அதைப் பார்க்க வானத்தில் சந்திரனே வந்து விடுவான். அப்படித்தான் இருந்தது சுந்தரி ஆட்டத்தையும் அதைப் பார்த்து அவன் மயங்கி இருந்ததும்.

இனியன் இந்த இன்ப நினைவுகளில் சற்று நேரம் தன்னை மறந்து இருந்தான். அடுத்த கணம் ஜன்னல் இடுக்குகள் வழியாகத் தெரிந்த வானத்தைப் பார்த்துக் கொண்டே இருந்தான். கணக்கற்ற நட்சத்திரங்கள் கண்ணைச் சிமிட்டி மின்னிக் கொண்டிருந்தன. மீண்டும் நட்சத்திரங்களை ஒவ்வொன்றாக மாற்றி மாற்றிப் பார்த்தான். ஒரு பெரிய நட்சத்திரத்தைப் பார்த்ததும் அது அவனைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிச் சிரிப்பது போல உணர்ந்தான். அது தன் இடத்தை விட்டு நகர்ந்து பூமியை நோக்கி வருவது போலிருந்தது. அவனை நெருங்கி வரும்போல இருந்தது. ஆனால் மிக சமீபத்தில் வந்துவிடவில்லை. ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு வந்தவுடன் நின்று விட்டது.

திடீரென்று அந்த நட்சத்திரம் தேன்மொழியாகக் காட்சி அளித்தது. இந்தக் காட்சியை இன்னும் நன்றாகப் பார்க்க வேண்டும் என்று கண்ணை இமைக்காமல் பார்த்தான். சந்தேகமே இல்லை. தேன்மொழியேதான். தேன் மொழிதான் மின்னும் நட்சத்திரமாக அவனை நெருங்க முயன்று கொண்டிருந்தாள். அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஒரு கருமேகம் வந்து நட்சத்திரத்தை மூடி மறைத்து விட்டது. தேன்மொழி மறைந்து விட்டாள். அங்கிருந்து எழுந்து மேஜை அருகில் சென்றான். அங்கு கிடந்த ரோஜா மலரைப் பார்த்தான். அடுத்த கணம் ரோஜா மலர் மறைந்து விட்டது. அங்கு தேன்மொழி தோன்றினாள். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எதைப் பார்த்தாலும் அங்கெல்லாம் தேன்மொழியே தோன்றிக் கொண்டிருந்தாள்.

அதற்குமேல் தாங்காது என்பதை உணர்ந்து கொண்டான். அடுத்த வாரம் எப்படியும் சித்த மல்லிக்குப் போய்த் தேன்மொழியைப் பார்த்து விட்டு வருவது என்று தீர்மானித்தான்.

அந்தத் தீர்மானத்துடனேயே படுக்கையில் போய்ப் படுத்தான்; படுத்ததுதான் தாமதம். அப்படியே நித்திரையில் ஆழ்ந்து போய் விட்டான். எங்கோ வான வெளியில் மிதப்பதுபோல ஆனந்தமாகக் கிடந்தான்.

வெளியில் கல்லூரி மாணவர்கள் சிலர் சேர்ந்து பாடிக்கொண்டு சென்றனர்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

என்று உற்சாகமாகப் பாடினர்.

பாட்டு முறையாக இல்லாமல் துடித்தது. குரல்கள் ஒரே இசையாக இல்லாமல், மாறுபட்டு ஒலித்தன. மீண்டும் மீண்டும் அதையே தொடர்ந்து பாடிக் கொண்டு சென்றனர். (தொடரும்)

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press,
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras 10.




# வாரம் ஒரு அணா செலவிற்கு பற்களுக்கு முழுப் பாதுகாப்பளிக்கிறது!

சாம்பல், கரிபோன்ற கரகரப்பான பொருள்கள் பற்களில் கீறல் விழச் செய்கின்றன. இந்த கீறல் வழியாக பாக்டீரியா புகுந்து கெடுதல் விளைவிக்கிறது. பற்கள் பூரண ஆரோக்கியத்தோடு இருக்க விஞ்ஞான முறையில் தயாரித்த ஒரு பல் துலக்கும் பொருள் உங்களுக்குத் தேவை. ஆகையால் கிப்ஸ் டென்டிபிரிஸ் வாங்குங்கள். பற்களுக்கு பூரண ஆரோக்கியத்தைத்தரும் எல்லா பொருள்களையும் ஒன்று சேர்த்து கெட்டியாகச் செய்தது தான் கிப்ஸ். அன்றியும் ஒரு டூத்பேஸ்ட் செய்யும் எல்லா வேலைகளையும அதன் பாதி விலைக்குச் செய்கிறது. இதை உபயோகிப்பது மிகவும் சுலபம். விரலையோ அல்லது பிரஷையோ தண்ணீரில் நனைத்துக் கொண்டு கட்டியின்மேல் தேய்க்கவும். அதன் சுவையை நீங்கள் மிகவும் விரும்புவீர்கள் அன்றியும் அதன் மிருதுவான நுரை ஊடுருவிப் பாயும் நுரை உங்கள் பற்களை பளிச்சென்று வெண்மையாக இருக்கச் செய்யும்!



உங்களுக்குப் பிரியமான கிப்ஸில் க்ளோரோபில் சேர்ந்திருக்க விரும்பினால் கிப்ஸ் க்ளோரோபில் டென்டிபிரிஸ் கேளுங்கள். எல்லா இடங்களிலும் விற்கப்படும் வெள்ளை டப்பாவின் பெயரைக் கவனித்து வாங்குங்கள்.



**நீலம், சிவப்பு, பச்சை டப்பிகளில்**

# கிப்ஸ் டென்டிபிரிஸ்

GD. 38-50 TM டி. அன்டு டபிள்யூ. கிப்ஸ் லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது

REGD. NO. M. 4392


*Registered as a newspaper in ceylon*

"வெண்மையான, சுத்தமான

**லக்ஸ் டாய்லட் சோப்பின்**

**நுரை மிகவும் மிருதுவானது, நறுமணம் கமழ்வது . . ."**

என்கிறார் *நிருபா ராய்*




இந்தியாவில் தயாரித்தது.

நிருபா ராய் மேலும் கூறுவதாவது: "சுத்தமான, வெண்மையான லக்ஸ் டாய்லட் சோப் ஒன்றுதான் என் சருமத்தை நன்றாக சுத்தம் செய்கிறது. அதன் மிருதுவான நுரை சருமத்தின் துவாரங்களில் புகுந்து மேனியின் இயற்கை அழகை வெளிக்கொண்டு வந்து, ஒரு தனிப்பொலிவை அளிக்கிறது. இந்த சுத்தமான, வெண்மையான சோப் சருமத்திற்கு அளிக்கும் நறுமணத்தையும் நான் மிகவும் விரும்புகிறேன்."



" . . . அதனால்தான் என் சருமத்தை எழிலோங்கச் செய்ய லக்ஸ் டாய்லட் சோப்பைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்."

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப் ★

LTS. 410-50 TM